விலை: 30.00
பக்கங்கள் : பதினாறு + பதினாறு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk
சங்கு 20 வள்ளுவர் ஆண்டு 2049 மார்கழி 22 ஞாயிற்றுக்கிழமை (06.01.2019) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 018

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம் 1000/= மட்டுமே

# தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை குறித்த தீர்மானம்

## பாராளுமன்றத்தில் எடுக்கப்படும் – நீதியமைச்சர் தலதா அத்துக்கோரள



(முல்லைத்தீவு)

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பான தீர்மானம் பாராளுமன்றத்தில் எடுக்கப்படும் என நீதியமைச்சர் தலதா அத்துக்கோரள தெரிவித்துள்ளார். முல்லைத்தீவுக்கு நேற்று விஜயம் செய்த நீதியமைச்சரிடம் அரசியல் கைதிகள் தொடர்பில் ஊடகவியலாளர்கள் கேட்டபோது அவர் இவ்வாறு தெரிவித்தார். (15ஆம் பக்கம் பார்க்க)

## முன் கூட்டியே ஜனாதிபதித் தேர்தல் மகிந்த – மைத்திரி அணியினர் தயார்

(கொழும்பு)

ஜனாதிபதி தேர்தலை முன் கூட்டியே நடத்துவதற்கான அறிவிப்பை வெளியிடுவதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தயார் படுத்தல்களை மேற்கொண்டு வருவதாக, கொழும்பு ஆங்கில 15☛

## அனைத்து துறைகளிலும் நாடு சீர்குலைந்து வருகிறது – அநுர



15☛

## இருவெவ்வேறு இடங்களில் பெண்களின் சங்கிலி அபகரிப்பு

### யாழ்.மாநகரில் நேற்று மாலை சம்பவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாநகரில் இரு வேறு இடங்களில் நேற்று சனிக்கிழமை மாலை மோட்டார் சைக்கிளில் வந்த கொள்ளையர்கள் வீதியால் சென்ற பெண்களின் தங்க சங்கிலிகளை அபகரித்துச் சென்றுள்ளனர் என்று யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடுகள் வழங்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம் நல்லூர் மற்றும் சுண்டுக்குளி பகுதிகளில் நேற்று மாலை இந்த வழிப்பறிக் கொள்ளைச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. 15☛

## ஐ.நா.பிரகடனத்தை அமுல்படுத்த முழு ஒத்துழைப்புக்கு தயார்

### ஐரோப்பிய ஒன்றியம் தெரிவிப்பு

(கொழும்பு)



இலங்கையின் தேசிய நலன் மற்றும் நல்லிணக்கம் என்பவற்றை அடைந்து கொள்வதற்கு உதவும் வகையிலான ஐக்கிய நாடுகள் சபையின் பிரகடனத்தை முழுமையாக அமுல்படுத்துவதற்கு பூரண ஆதரவை வழங்குவதுடன், அனைத்து விதங்களிலும் ஒத்துழைப்பு வழங்கத் தயாராகவுள்ளதாக ஐரோப்பிய ஒன்றியம் தெரிவித்துள்ளது.

திருகோணமலையில் ஐந்து மாணவர்களின் படுகொலை இடம்பெற்று கடந்த 2 ஆம் திகதியுடன் 13 வருடங்கள் பூர்த்தி 15☛

## வெள்ள நிவாரணம் என பணமோசடி இளைஞர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், தென்மராட்சி பகுதியில் வெள்ள நிவாரணத்திற்கென சட்டவிரோதமாக பணம் சேகரித்த இளைஞர் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சாவகச்சேரி பிரதேச செயலக உத்தியோகஸ்தரென தன்னை அறிமுகம் செய்து கொண்டு, எழுதுமட்டுவாழ் வடக்கு பகுதி 02☛

## வெள்ள அனர்த்தம் தொடர்பாக ஆராய கூட்டமைப்பினருக்கு அழைப்பு விடுத்தும் எவரும் கலந்து கொள்ளவில்லை

### கிளிநொச்சியில் நீரியல் அமைச்சர் பி.ஹரிஸன் குற்றச்சாட்டு



(கிளிநொச்சி)

வெள்ள அனர்த்தம் தொடர்பாக ஆராய்வதற்கு இடம்பெறும் கூட்டத்திற்கு வருமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அழைப்பு விடுத்த போதும் அவர்கள் எவரும் கலந்து கொள்ளவில்லை என விவசாயம், கிராமப்புற பொருளாதார அலுவல்கள், கால்நடைகள் மேம்பாடு, நீர்ப்பாசனம், மீன்பிடி மற்றும் நீரியல் வள அமைச்சர் பி ஹரிஸன் தெரி வித்துள்ளார்.

நேற்று கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்ற 15☛

## சமையல் எரிவாயு 359 ரூபாயால் அதிகரிக்கலாம்?

(கொழும்பு)

சமையல்எரிவாயுவின் விலையை அதிகரிப்பதற்கான வேண்டுகோள் சமையல் எரிவாயு கம்பனிகளினால் நுகர்வோர் அதிகார சபையிடம் முன்வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதன்படி, 12.5 கிலோகிராம் சமையல் எரிவாயுவின் விலை 359.00 ரூபாயினால் அதி 15☛

## படையினர் வசமுள்ள காணி விடுவிப்பே அரசின் நோக்கம் அமைச்சர் பி.ஹரிசன்

(கிளிநொச்சி)

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் படையினர் வசமுள்ள காணிகளை விடுவிப்பதே அரசாங்கத்தின் நோக்கம் என மீன்பிடி மற்றும் நீரியல் வளத்துறை அமைச்சர்பி.ஹரிசன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட பகுதி 15☛

## மகிந்தவுடன் இணைய மனோவுக்கு 65 கோடி ரூபாய் பேரம்

### ஆதாரம் வெளியிட்ட ஜனநாயக மக்கள் முன்னணியின் இளைஞர் இணையம்



(கொழும்பு)

மேல் மாகாணசபை உறுப்பினர் சண் குகவரதனின் ஆதரவாளர் சஜீவானந்தன், அமைச்சர் மனோ கணேசனுடன் 65 கோடி ரூபாய் பேரம் பேசிய குரல் பதிவினை ஜனநாயக மக்கள் முன்னணியின் இளைஞர் இணையம் நேற்று வெளியிட்டுள்ளது. 15☛

## வழக்குகளை துரிதப்படுத்த கோரி உண்ணாவிரதத்தில் குதித்த தமிழ் அரசியல் கைதி

### தமிழ் தலைவர்கள் மீதும் குற்றச்சாட்டு

(அநுராதபுரம்)

அநுராதபுரம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதியொருவர் நேற்று முதல் உண்ணாவிரத போராட்டத்தை ஆரம்பித்துள்ளார்.

தமது வழக்குகளை துரிதப்படுத்தும்படி வலியுறுத்தியே, உண்ணாவிரத போராட்டத்தை ஆரம்பித்துள்ளார்.

கிளிநொச்சி வட்டக்கச்சியை சேர்ந்த சிவப்பிரகாசம் 15☛

## பணியாட்கள் தேவை

யாழ். நகரில் நிறுவனம் ஒன்றிற்கு பெண் பணியாளர்கள், சிட்டை எழுதுநர், கணனி இயக்குநர், பொதி செய்தல் ஆகிய பணிகளுக்கு தேவை. வயதெல்லை (18 - 30 வரை)

**தொடர்புகளுக்கு:**

**0771228841, 0775164928**

(யாழ். நகரில் இருந்து 5km உட்பட்டவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.)

(6956)

# A/L ICT
## A/L 2018 பரீட்சை முடிவு

**கணனி விஞ்ஞானத்துறை**

யாழ். மாவட்ட நிலை - 01- எஸ்.கஜந்தன் - A,2B

முல்லைத்தீவு மாவட்ட நிலை 01- ரி.யூட்ரன் லோசன்

ஆசிரியர்கள்: லவேந்திரன், உமாகாந்தன்

(C-5037)

**Techno World** வெலிங்டன் சந்தி, யாழ்ப்பாணம்.

**077 017 5346**

A/L 2021, 2020, 2019 Day Class

அனைத்து துறை மாணவர்களும் வருகை தரவும்


## பண...

யில் வெள்ள நிவாரணமென கூறி குறித்த இளைஞன் நேற்று சனிக்கிழமை பணம் சேகரித்துள்ளார்.

இதன் போது, அந்த இளைஞன் மீது சந்தேகம் கொண்ட அப்பகுதி இளைஞர்கள், இவ்விடயம் தொடர்பில் கிராம சேவையாளருக்கு அறிவித்தனர்.

அதனை தொடர்ந்து அவ்விடத்திற்கு வருகை தந்த கிராம சேவையாளர், குறித்த இளைஞனிடம் விசாரணைகளை முன்னெடுத்தபோது அவர் தப்பியோடியுள்ளார். ஆனாலும் அங்கிருந்த ஏனைய இளைஞர்கள் துரத்தி சென்று அவரை பிடித்தனர். பின்னர் கிராம சேவையாளர் பொலிஸாருக்கு தகவல் வழங்கினார்.

குறித்த தகவலின் பிரகாரம் சம்பவ இடத்திற்கு சென்ற பொலிஸார், இளைஞனை கைது செய்துள்ளனர். (ம-3)

# மரண அறிவித்தல்கள்

## முத்துவேலு தவகுலரட்ணம்

(Miss முத்துவேலு)

(முன்னாள் கொழும்பு பல்கலைக்கழக சட்டபீட ஆங்கில விரிவுரையாளர்)

யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும், கொழும்பு மொறட்டுவ, சொய்சாபுர வீட்டுத்தொகுதியை வசிப்பிடமாகவும் கொண்ட முத்துவேலு தவகுலரட்ணம் (முன்னாள் கொழும்பு சட்டபீட ஆங்கில விரிவுரையாளர்) அவர்கள் நேற்று (05.01.2019) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முத்துவேலு - தங்கமுத்து தம்பதிகளின் அன்பு மகளும், பாலசுப்பிரமணியம் (கணக்காளர்), சரஸ்வதி (வைத்தியர்) ஆகியோரின் சகோதரியும், காண்டீபன் (ஜேர்மனி), தயாபரன் (பொறியியலாளர், சிங்கப்பூர்), பார்த்தீபன் (பொறியியலாளர், இலங்கை), சத்தியபாமா (தொழில்நுட்ப கல்லூரி விரிவுரையாளர்) ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.01.2019) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் நடைபெற்று பூதவுடல் கல்கிசை மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
சி.பார்த்தீபன்,
சி.சத்தியபாமா

தொடர்பு:
077 605 9613

(6960)


## விரைவு பொதிகள் சேவை

**விசேட விலை குறைப்பு**

UK - 550 /=Kg
கனடா - 900 /=Kg
ஜேர்மனி - 700 /=Kg
நெதர்லாந்து - 700 /=Kg
(நிபந்தனைகளுக்குட்பட்டது)

DELIVERY IN 3-5 DAYS

0768226240

• மானிப்பாய் • யாழ்ப்பாணம் • கிளிநொச்சி • சாவகச்சேரி • நெல்லியடி • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை

V2 TRAVELS

(C-4942)


## பெயர் மாற்றம்

கற்கோவளம் - புனிதநகர், பருத்தித்துறையில் வதியும் செல்லையா இராசேந்திரநாதன் ஆகிய நான் இன்று (06.01.2019) முதல் எனது பெயரை செல்லையா நிறோஜன் என சகல ஆவணங்களிலும் கையொப்பமிடுவேன் என இத்தால் தெரிவிக்கின்றேன்.

உண்மையுள்ள,
செல்லையா நிறோஜன்

(சி-5026)


1985ம் ஆண்டிலிருந்து இன்று வரையானதொரு தனித்துவமிக்க பயிற்சி நிலையம்



யாழ். **கலாலயா** பயிற்சியகம்

இலங்கையின் மூன்றாம் நிலைக் கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணையத்தால் பதிவு செய்யப்பட்ட பயிற்சி நிலையம்

விக்ரோறியா வீதி, யாழ்ப்பாணம். (யாழ். போதனா வைத்தியசாலை பின் புற வீதி)

### மகளிருக்கான பயன்மிகு பயிற்சிகள் ஆரம்பமாகின்றன!

- FACIALS (முக அழுகுக்கலை) Pedicure, Manicure, Nail Art, கண் புருவம் சீராக்குதல் (Eye Brow Threading), தேவையற்ற முடிகளைஅகற்றுதல் (Waxing)
- கூந்தல் வடிவமைப்புகளும் முடி சீராக்குதலும் 40 வகையான கொண்டைகள் போடுதல், முடி அயன் செய்தல், முடி சுருட்டுதல், Hair Colouring, முடி வெட்டுதல், Hair Perming.
- BRIDAL DRESSINGS (மணப்பெண் அலங்காரங்கள்) இந்து, கிறிஸ்தவ இஸ்லாம் மணப் பெண் அலங்காரமும் Modern, கேர்க்காஸ், சிங்கப்பூர் குஜராத்தி, மடிசார், சிங்கள முறையிலான சேலை அணியும் முறைகள். முறைகளும் பயிற்றுவிக்கப்படும்.
- கேக் ஐசிங் - றோயல், Parchment, Frosting, Fondant, Whipping Cream, Piping Icing, மாச்சீனி மலர்கள். (Sugar Flowers).
- உணவு தயாரித்தல் - உணவு வகைகள், 6 வகையான Cakes, Cup Cake மற்றும் பீஸா, சிற்றுண்டிகள் குளிர்பானங் கள், ஐஸ் கிறீம், புடிங் தயாரித்தல்.



**பயிற்சிகளின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.**


- அத்துடன் பிளவுஸ், சாறி பிளவுஸ், சுரிதார், மற்றும் ஆடைகள் தைக்கும் சான்றிதழ் அற்ற கிழமை நாள் தையல் பயிற்சிகளும் ஆரம்பமாகின்றன.

**சனி, ஞாயிறு புதிய பிரிவுகள் ஆரம்பம்**
**19.01.2019 சனி காலை 10.00மணி**
**கிழமை நாள் புதிய பிரிவுகள் ஆரம்பம்**
**21.01.2019 திங்கள் காலை 10.00 மணி**

மேலும் விபரங்களை பி.ப 5.30 வரை நேரில் அறிந்து கொள்ளலாம்.

-இயக்குநர்-

(சி-5025)

## அமரர் மாணிக்கம் தியாகராஜா

யாழ். புளியங்கூடல் அம்மன் கோவிலடியை பிறப்பிடமாகவும், வேலணை மேற்கு, கொழும்பு, ஹற்றன் மற்றும் கனடா ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட மாணிக்கம் தியாகராஜா அவர்கள் நேற்று முன்தினம் (04.01.2019) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பூந்தோட்ட மாணிக்கம் (பிரபல வர்த்தகர், கொழும்பு) - நாகம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான நமசிவாயம் - பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், யோகபதி அவர்களின் ஆருயிர்க் கணவரும், சுபத்திரா (ஜேர்மனி), மோகனதாஸ் (கண்ணன் - கனடா), கிருஸ்ணதாஸ் (கிரிஷ் - கனடா), யசோதரா (கனடா), வைகுந்தவாசன் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், ஸ்ரீகுமார் (ஜேர்மனி), திவோஜினி (கனடா), சிவச்செல்வி (கனடா), சிவகரன் (கனடா), கஜலக்சுமி (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும், சொர்ணகாந்தி, சுப்பிரமணியம் (பிள்ளையார்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற சோமசுந்தரம் மற்றும் நிர்மலாதேவி, காலஞ்சென்ற குருசாமி (தொழில் நீதிமன்றத் தலைவர்) மற்றும் திலகவதி, பூபாலபிள்ளை, சறோஜினிதேவி இளங்கோவன் (இளைப்பாறிய மாவட்ட நீதிபதி), சிவபாலன் (ஆயுர்வேத வைத்தியர்) ஆகியோரின் அன்பு மைத்துனரும், அபிரா - தர்ஸன், அனுசன், அனோஜா, கவின், ஆரன், தீரன், வர்ஷன், மதுரன், காவியா, பவின் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (07.01.2019) திங்கட்கிழமை Chapel Ridge Funeral Home & Cremation Centre 8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1, Canada இல் நடைபெறும். அத்துடன் வேலணையில் உள்ள எமது இல்லத்தில் துக்கம் அனுஷ்டிக்கப்படும். இவ்அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் : குடும்பத்தினர்
Dr.செ.ந.சிவபாலன்
021 221 3759, 077 864 2845

வேலணை மேற்கு,
வேலணை.

(6953)

# கோலாகலமான ஆரம்பம்

**2019 தைத்திங்கள் 04 ஆம் நாள் 18.01.2019 வெள்ளிக்கிழமை காலை 09.51 மணி முதல் 11.01 மணிவரை**
**வரும் சுப முகூர்த்தத்தில் கோலாகல ஆரம்பம்**
தென்மராட்சி சாவகச்சேரி நகரில் போக்குவரத்து வசதியுடனான சூழலில் புதுப்பொலிவுடனும் நவீன வசதிகளுடனும் தங்கள் வாழ்வின் உன்னதமான நாளின் மன எண்ணத்திற்கேற்ப அமைந்த மாபெரும் திருமண மண்டபம்.

**பூக்களின் வண்ணத்தில் உருவான**

# பூமாரி திருமண மண்டபம்

**ஒரே நேரத்தில் இரு திருமண நிகழ்வுகளை நிகழ்த்துவதற்கான வசதியுடன் கூடிய இரண்டு திருமண மண்டபங்கள் உண்டு.**

**மாங்கல்ய நிகழ்வுகளுக்கான குருக்கள் வசதிகளுடன் மங்கல வாத்தியம்**

**நவீன வசதிகளுடன் கூடிய ஒப்பனை அறைகள் மற்றும் தங்கள் மனம் நிறையும் வண்ணம் தமிழர் விருந்தோம்பல் கலாச்சாரத்தின்படி தரமான, சுவையான சைவ அறுசுவை உணவுகளுடன் கூடிய (Only Veg) விருந்துபசார வசதிகளுடன் வாகன தரிப்பிட வசதிகளும் கொண்ட ஒரே ஒரு மண்டபம்.**

**திருமண நாள் முகூர்த்தம்**

**2019 தைத்திருநாள் 04 (18.01.2019) வெள்ளிக்கிழமை காலை 9.51 மணிமுதல் 11.01 மணிவரை**

**(குறிப்பு:- 18.01.2019 அன்று வரும் இச்சுபமுகூர்த்த நேரத்தில் திருமண நிகழ்வுகளை நடத்துவதற்கான பதிவுகளும் ஏற்றுக் கொள்ளப்படும்)**

- வாக்கிய பஞ்சாங்கத்தின் படி மாலை 05.56 மணி முதல் 07.52 மணிவரை
- 2019 தைத்திருநாள் 05 (19/01/2019) சனிக்கிழமை காலை 08.15 மணி முதல் 09.25 மணி வரை
- 2019 தைத்திருநாள் 07 (21/01/2019) திங்கட்கிழமை வாக்கிய, திருக்கணிதபஞ்சாங்கத்தின்படி பொது நேரம் பிற்பகல் 12.35 மணி முதல் 01.51 மணி வரை
- 2019 தைத்திருநாள் 16 (30/01/2019) புதன்கிழமை காலை 07.45 மணி முதல் 09.15 மணி வரை
- 2019 தைத்திருநாள் 18 (01/02/2019) வெள்ளிக்கிழமை காலை 07.21 மணி முதல் 09.03 மணி வரை
- 2019 தைத்திருநாள் 23 (06/02/2019) புதன்கிழமை காலை 06.45 மணி முதல் 08.33 மணி வரை
- 2019 தைத்திருநாள் 27 (10/02/2019) ஞாயிற்றுக்கிழமை காலை 08.33 மணி முதல் 10.09 மணி வரை
- 2019 தைத்திருநாள் 28 (11/02/2019) திங்கட்கிழமை காலை 09.38 மணி முதல் 10.08 மணி வரை

**18 ஆம் திகதி முதல் உங்களுக்கான பதிவுகளுக்கு இன்றே முந்துங்கள்.**

**இல. 87, A-9 வீதி, சாவகச்சேரி.**

**இல. 20, டச் வீதி சாவகச்சேரி.**

**தொடர்புகளுக்கு: 077 776 8835**

**தங்களது தேவைகளுக்கு ஏற்ப வீடியோ படப்பிடிப்பு, மணமகள் அலங்காரம் ஆகிய வசதிகள் செய்து தரப்படும்.**





(6935)

# நெருங்கி வந்து... நெஞ்சம் தகர்ந்து...



பொங்கியெழுந்து இலங்கையை கரைசேர்க்க போராடிய திசர பெரேரா சதம் அடித்த தருணம்...

- வீணானது திசர பெரேராவின் அதிரடி
- போராடி வீழ்ந்தது இலங்கை

தனியொருவனாக இறுதிவரை பொங்கிய திசர பெரேராவின் அபார ஆட்டத்தினால் இலங்கை அணி வெற்றிக்கு அருகில் பயணித்தபோதிலும் ஏனைய துடுப்பாட்ட வீரர்களின் பொறுப்பற்ற ஆட்டத்தினால் இலங்கை அணி இறுதியில் 21 ஓட்டங்களால் பரிதாபமாக தோல்வியடைந்ததுடன் தொடரையும் கோட்டைவிட்டது.

நியூசிலாந்து சென்றுள்ள இலங்கை அணி அங்கு மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்கிறது. முதல் போட்டியில் வென்ற நியூசிலாந்து 1-0 என்றகணக்கில்தொடரில்முன்னிலையில் இருந்தது. இந்நிலையில் இரண்டாவது ஒரு நாள் போட்டி நேற்று நடந்தது.

நாணயச்சுழற்சியில் வென்ற நியூசிலாந்து அணி துடுப்பாட்டத்தை தேர்வு செய்தது. கப்டில் (13), அணித் தலைவர் வில்லியம்சன் (1) ஏமாற்றம் அளித்தனர். முன்ரோ, ரோஸ் ரெய்லர் அரைச்சதம் எட்டினர். 3ஆவது விக்கெட்டுக்கு 112 ஓட்டங்கள் சேர்த்தபோது முன்ரோ (87) ஆட்டமிழந்தார். ரெய்லர் 90, நீஷம் 64 ஓட்டங்கள் எடுத்தனர்.

50 ஓவர்கள் நிறைவில் நியூசிலாந்து அணி 7 விக்கெட்டுக்களை இழந்து 317 ஓட்டங்களை எடுத்தது. ரிம் சௌதி (1) ஆட்டமிழக்காமல் இருந்தார்.

**திசர போராட்டம்**

கடின இலக்கைத் துரத்திய இலங்கை அணியின் டிக்வெல (9), குசல் (4), சண்டிமல் (3), குணரத்ன (6) ஒற்றை இலக்க ஓட்டங்களில் திரும்பினர். குணதிலக 71 ஓட்டங்கள் எடுத்தார்.

இலங்கை ஒரு கட்டத்தில் 128 ஓட்டங்களுக்கு 7 விக்கெட்டுக்களை இழந்து தத்தளித்தது.

எனினும் தனி ஒருவனாக போராடிய திசர பெரேரா சிக்சர் மழை பொழிந்தார். 57ஆவது பந்தில் தனது முதல் சதம் எட்டினார். சௌதி வீசிய 46ஆவது ஓவரில் 4 சிக்சர்கள் அடிக்க, இலங்கை வெற்றியை நெருங்கியது. கடைசியில் பெரேரா 140 ஓட்டங்களில் (74 பந்து, 13 சிக்சர், 8 பவுண்டரிகள்) ஆட்டமிழக்க எல்லாமே முடிந்துபோனது. இலங்கை அணி 46.2 ஓவர்களில் 298 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்து தோல்வியடைந் தது.

21 ஓட்டங்களால் வெற்றி பெற்ற நியூசிலாந்து, ஒரு நாள் தொடரை 2-0 என்ற முன்னிலையுடன் கைப்பற்றியது.

**13**

ஒருநாள் அரங்கில் ஒரு போட்டியில் அதிக சிக்சர் (13) அடித்த முதல் இலங்கை வீரர் ஆனார் திசர பெரேரா. இதற்கு முன் ஜெயசூர்ய 11 சிக்சர் (1996, பாக்.,) அடித்து இருந்தார். சர்வதேச அளவில் 4வது வீரர் ஆனார் பெரேரா. இந்தியாவின் ரோகித் சர்மா, டி வில்லியர்ஸ், கெய்ல் தலா 16 சிக்சர் அடித்து முதல் இடத்தில் உள்ளனர். வோட்சன் (15, ஆஸி.,), கோரி அண்டர்சன் (14, நியூசி.,) அடுத்த இரு இடம் வகிக்கின்றனர்.

# குல்தீப் மூன்று... இந்தியா நன்று

## தள்ளாடுகிறது அவுஸ்திரேலியா



3 விக்கெட்டுக்களை கைப்பற்றிய குல்தீப் ரிம் பெய்னை ஆட்டமிழக்கச் செய்தபோது...

சிட்னி டெஸ்டில் குல்தீப், ஜடேஜா 'சுழலில்' அசத்த, இந்திய அணி வெற்றியை நோக்கி ஜோராக முன்னேறுகிறது.

அவுஸ்திரேலியா சென்றுள்ள இந்திய அணி நான்கு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்கிறது. முதல் மூன்று டெஸ்ட் முடிவில் இந்திய அணி 2-1 என்ற கணக்கில் முன்னிலையில் உள்ளது.

நான்காவது மற்றும் கடைசி டெஸ்ட் சிட்னியில் நடக்கிறது. முதல் இன்னிங்சில் இந்திய அணி 7 விக்கெட்டுக்கு 622 ஓட்டங்கள் எடுத்து 'டிக்ளேர்' செய்தது. நேற்று முன்தினம் இரண்டாவது நாள் முடிவில் அவுஸ்திரேலிய அணி முதல் இன்னிங்சில் விக்கெட் இழப்பின்றி 24 ஓட்டங்கள் எடுத்திருந்தது.

நேற்று மூன்றாவது நாள் ஆட்டம் நடந்தது. கவாஜா 27 ஓட்டங்களில், குல்தீப் 'சுழலிலும்ஹரிஸ் 79 ஓட்டங்களுடன் ஜடேஜா பந்திலும் ஆட்டமிழந்தனர். ஷோன்மார்ஷ் 8 ஓட்டங்களுடன்ஜடேஜாவிடம் சரிந்தார். ஷமி பந்தில் லபுசேன் (38), ரகானேயின் 'சுப்பர் பிடியெடுப்பில் திரும்பினார்.

மறுபக்கம் பந்தை அதிகமாக சுழற்றினார் குல்தீப். இதில் சிக்கிய ஹெட் (20) அவரிடமே பிடி கொடுத்தார். தேநீர் இடைவேளைக்குப் பின் குல்தீப் வீசிய முதல் ஓவரில் பெய்ன் (5) போல்டானார். ஒருகட்டத்தில் 128/1 என வலுவாக இருந்த அவுஸ் திரேலியா, அதன் பின் 198/6 என தள்ளாடி யது.

**மழை தொல்லை**

அவுஸ் திரேலிய அணி முதல் இன் னிங்சில் 236/6 ஓட்டங்கள் எடுத்து, 386 ஓட்டங்களால் பின்தங்கி இருந்தபோது போதிய வெளிச்சமின்மை காரணமாக போட்டி நிறுத்தப்பட்டது. தொடர ந்து பலத்த மழை வர, மூன்றாவது நாள் ஆட்டம் முன்னதாக முடிவுக்கு வந்தது. ஹேண்ட்ஸ் கோம்ப் (28), கம்மின்ஸ் (25) ஆட்டமிழக்காமல் இருந்தனர். இந்தியா சார் பில் குல்தீப் 3, ஜடேஜா 2, ஷமி ஒரு விக்கெட் சாய்த்தனர்.

கைவசம் 4 விக்கெட் மட்டும் வைத்துள்ள அவுஸ்திரேலிய அணி, 'பொலோ ஒனை தவிர்க்க இன்னும் 187 ஓட்டங்கள் எடுக்க வேண்டும் என்பதால், சிட்னி டெஸ்டில் இந் திய அணிக்கு வெற்றி வாய்ப்பு பிரகாசமாக உள்ளது.

**30 நிமிடம் முன்**

நேற்று மூன்றாவது நாள் ஆட்டம் 16.3 ஓவர்கள் இருந்த நிலையில் மழை மற்றும் மோசமான வானிலை காரணமாக முன்னதாக முடிவுக்கு வந்தது. இதை சரிசெய்யும் வகையில் 4, 5வது நாள் ஆட்டம் அரை மணி நேரம் முன்னதாக ஆரம்பமாகும்.

**என்ன நடக்கும்**

சிட்னி டெஸ்டில் மூன்று நாள் ஆட்டம் முடிந்த நிலையில் இன்னும் முதல் இன்னிங்ஸ் முடியவில்லை. இன்று அவுஸ்திரேலியாவை விரைவில் வீழ்த்தினால், 'பொலோ ஒன்' கொடுத்து இந்திய அணி இன்னிங்ஸ் வெற்றிக்கு முயற்சிக்கலாம். இல்லையெனில் போட்டி 'சமன்' ஆகும்.

**ராகுலுக்கு பாராட்டு**

ஹரிஸ் 24 ஓட்டங்களில் ஜடேஜா பந்தை எதிர்கொண்டார். இவர் அடித்த பந்தை ராகுல் பாய்ந்து பிடித்தார். இந்திய வீரர்கள் துள்ளிக் குதித்தனர்.

ஆனால் பந்து தரையில் பட்டு விட்டது. இது 'பிடி' இல்லை என உடனடியாக லோகேஷ் ராகுல் தெரிவித்தார். இதைப் பார்த்த நடுவர் இயான் கோல்ட், பெருவிரலை காண்பித்து ராகுலின் நேர்மையை பாராட்டினார். இவரது செயல் ரசிகர்களிடம் பெரும் வரவேற்பை பெற்றது.



**'தொப்பி' வழங்கிய மெக்ராத்**

அவுஸ்திரேலிய அணியின் முன்னாள் வேகப்பந்து வீச்சாளர் மெக்ராத் 'கான்சர்' பவுண்டேஷனுக்கு உதவும் வகையில் சிட்னி போட்டி 'பிங்க்' டெஸ்டாக நடக்கிறது. போட்டியின் போது திரட்டப்படும் நிதி, மார்பக கான்சர் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சிகளுக்கு வழங்கப்படும். இதன் ஒரு பகுதியாக மூன்றாவது நாளான நேற்று 'ஜேன் மெக்ராத் டே' என்றழைக்கப்பட்டது. வீரர்கள் அனைவருக்கும் மெக்ராத், தனது கையெழுத்திட்ட 'பிங்க்' நிற (இளஞ் சிகப்பு) தொப்பி வழங்கினார்.


## மணிவிழா கண்ட சமூக சேவையாளருக்கு யாழ் ரத்னா விருது



லயன் கலாநிதி
**என்.தனேந்திரன்**
யாழ். பிரதேச செயலக கலை பண்பாட்டு பேரவையும் யாழ். பிரதேச செயலக கலாசார பேரவையும் இணைந்து சமுக பணியாளர்களுக்கான விருது லயன் கலாநிதி
**என்.தனேந்திரன்**
அவர்களுக்கு வழங்கி கௌரவிக்கப்பட்டதையிட்டு பாராட்டி வாழ்த்துகின்றோம்.
**இ.மயில்வாகனம் (JP)**
*தலைவர்,*
*பிரதேச தேசோதய சபை,*
**கோப்பாய்.** (6-5026)

# 2019 ஆம் ஆண்டுக்கான பட்ஜெட் இறுதி வாக்கெடுப்பு ஏப்ரல் 4இல்



(கொழும்பு)

2019 ஆம் ஆண்டுக்கான வரவு -செலவுத் திட்டத்திற்கான இறுதி வாக்கெடுப்பு எதிர்வரும் ஏப்ரல் மாதம் 4 ஆம் திகதி நடைபெறும் என நிதி மற்றும் ஊடக அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.


இது தொடர்பாக அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

2019 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம் எதிர்வரும் மார்ச் மாதம் 5 ஆம் திகதி பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படவுள்ளதோடு அதற்கான நிதி ஒதுக்கீட்டுச் சட்டத்திற்கான ஒப்புதலை பெற்றுக்கொள்வதற்காக அடுத்த வாரம் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

மேலும் வரவு - செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மார்ச் மாதம் 5 ஆம் திகதி நடைபெறும். அதே வேளை மூன்றாவது வாசிப்பு மார்ச் மாதம் 13 ஆம் திகதி இடம்பெறும்.

2019 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தை செயற்றிறனுக்கு அமைய முன்வைக்க அரசாங்கம் எதிர்பார்ப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# பொன்சேகா, பாலித பனிப்போர் கருத்து வெளியிட ரணில் தடை







(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களான சரத்பொன்சேகா மற்றும் பாலித தெவரபெரும ஆகியோருக்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அதிரடி உத்தரவு ஒன்றைப் பிறப்பித்துள்ளார்.

சரத்பொன்சேகா மற்றும் பாலித தெவரபெரும ஆகிய இருவரும் ஒருவரை ஒருவர் தாக்கி ஊடகங்கள் முன் பிரசாரம் செய்வதைத் தவிர்க்க வேண்டும் என பிரதமர் உத்தரவிட்டுள்ளார்.

மிக நெருங்கிய நண்பர்களாக இருந்த பாராளுமன்ற உறுப்பினர் சரத் பொன்சேகா மற்றும் பாலித தெவரபெரும ஆகியோருக்கு இடையில் அண்மைக்காலமாக உச்சக்கட்ட கருத்து மோதல்கள் இடம்பெற்று வருகின்றன.

காகம் தலையில் எச்சமிட்டது என்பதற்காக காகங்களை சுட்டுக் கொல்லச் சொன்ன பொன்சேகா. அப்பத்தை ஒழுங்காக சுடவில்லையென சிப்பாய்களை முழந்தாளிடச் செய்த பொன்சேகா, வெள்ளைக்கொடி விவகாரத்தில் காட்டிக்கொடுத்த பொன்சேகா என்னை இழிவாக பேசுவதா? என பாலித தெவரபெரும கேள்வி எழுப்பியுள்ளார்.

மேலும். மூளை இல்லாவிடில் உடம்பை பெரிதாக வைப்பதில் அர்த்தமில்லை, கடற்படையில் சாரதியாக இருந்து தப்பியோடியவர் தெவரபெரும. இப்படியானவர்களை அரசியலுக்கு வரவிடக் கூடாது. இனி இவருக்கு வேட்புமனு கிடைத்தாலும் கிடைக்காவிட்டாலும் இவரை நாடாளுமன்றத்திற்கு வர விடமாட்டேன். கசிப்பு காய்ச்சியவரே இந்த தெவரபெரும என சரத் பொன்சேகா தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு இருவரும் பரஸ்பர குற்றச் சாட்டுக்களை முன்வைத்து வருகின்றனர். இவ்வாறான நிலையிலேயே பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, ஊடகங்கள் முன் இருவரும் இவ்வாறு கருத்துக்களைத் தெரிவிப்பதைத் தவிர்க்க வேண்டும் எனத் தெரிவித்துள்ளார். (இ-7)

# நாட்டைப் பிளவுபடுத்த தமிழ்க் கூட்டமைப்பு சதி

## மகிந்த அணி குற்றச்சாட்டு



(கொழும்பு)

தமிழ்த்தேசிய கூட்டமைப்பால் முன்வைக்கப் படவுள்ள புதிய அரசியலமைப்பு சட்ட மூலம் எந்தத் தரப்பினராலும் ஏற்றுக் கொள்ள முடியாத ஒன்றாகவே அமையும்.

காரணம் அவர்களின் நோக்கம் நாட்டை இரண்டாகப் பிளவடையச் செய்வதாகும்.

தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பிரதான கட்சியாக இருந்து கொண்டு அவர்கள் தமிழ் மக்களுக்கு நன்மை பயக்கக் கூடிய வகையில் எதனையும் செய்ததில்லை என பாராளுமன்ற உறுப்பினர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

எதிர்வரும் பெப்ரவரி மாதம் புதிய அரசியலமைப்பிற்கான சட்ட மூலம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப் படவுள்ளதாக தெரிவித்துள்ளமை குறித்து வினவிய போதே அவர் இதனைத் தெரிவித்தார். (இ-7)

மதசார்பற்ற, இலவச சேவை. ரகசியம் காப்போம்.
**நம்பிக்கை இழக்க வேண்டாம்.**
**உங்களுக்காக நாங்கள் இருக்கிறோம்.**
எந்தத் துயரமாயினும், அழையுங்கள். அல்லது நேரில் வாருங்கள்.
**கை கொடுக்கும் நண்பர்கள்**
175, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் (KKS வீதி அருகே)
**077 900 8776** ( தினமும் மு.ப. 9.00 - பி.ப. 1.00 )

# கூண்டோடு எரிக்கப்பட்ட நாய் சந்தேக நபர் நேற்று சிக்கினார்



(நீர்கொழும்பு )

நீர்கொழும்பு கொப்பரச் சந்தியிலுள்ள வீடொன்றில் கூண்டில் அடைக்கப் பட்டிருந்த நாயொன்றை எரித்துக் கொன்றமை தொடர்பில் சந்தேக நபர் ஒருவரை கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதி இரவு நாய் அடைக்கப்பட்டிருந்த கூண்டிற்கு மண்ணெண்ணெய் ஊற்றி எரியூட்டப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

எரிகாயங்களுக்குள்ளான குறித்த நாய் இம்மாதம் முதலாம் திகதி உயிரிழந்துள்ளது.

லெப்ரடோ இன நாயொன்றே இவ்வாறு தீ வைத்துக் கொல்லப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, நாய் அடைக்கப்பட்டிருந்த இடத்தில் கைவிரல் அடையாளங்கள் காணப்பட்ட நிலையில் இந்தச் சம்பவம் தொடர்பில் கிடைத்த முறைப்பாட்டிற்கு அமைய விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

இவ்வாறான் நிலையிலேயே இச் சம்பவத்துடன் தொடர்புடையவர் எனக் கருதப்படும் 38 வயதுடைய நபர் ஒருவர் நீர்கொழும்பு பெரியமுல்ல பகுதியில் வைத்து நேற்றுக்காலை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். (இ-7)

# இராசி பலன்

**மேடம்:** இழுபறியான காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், மகிழ்ச்சி அதிகரித்து மனமாற்றம் காணும் நாள்.

**இடபம்:** மனக்குழப்பம் தீர கண்ணனை வழிபட வேண்டிய நாள், எடுத்த காரியத்தில் அதிக பிரயாசை காட்டும் சூழ்நிலை உருவாகும். ஆரோக்கியத்தில் கவனம் செலுத்த வேண்டிய நாள்.

**மிதுனம்:** கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம், போசன சுகமுண்டு, பணத் தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், உறவினர்களின் சந்திப்புகள் இடம்பெறும் வாய்ப்புண்டு.

**கடகம்:** பகைவர் விலகுவர், தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் உருவாகும், ஆரோக்கியத்தில் முன்னேற்றம் காண்பீர்கள், போசன நன்மையுண்டு.

**சிம்மம்:** உள்ளம் மகிழும் சம்பவங்கள் இல்லத்தில் இடம்பெறலாம், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், பிள்ளைகளின் நலனில் அக்கறை காட்டுவீர்கள்.

**கன்னி:** பேச்சில் கனிவு பிறக்கும், வருமானம் திருப்திகரமாக அமையும், பெற்றோர் நலனில் அக்கறை காட்டுவீர்கள், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம்.

**துலாம்:** பக்குவமாக நடந்து பாராட்டைப் பெறுவீர்கள், ஆதாயம் தரும் வேலையொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள்.

**விருச்சிகம்:** குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும் நாள், விவாதங்களைத் தவிர்ப்பது நல்லது, கற்பனை மிகுதியான நாள், முயற்சிகளில் அதிகம் பிரயாசை காட்டும் சூழ்நிலை உருவாகும்.

**தனுசு:** உஷ்ண சம்பந்தமான ரோக பயமுண்டு, பெரிய மனிதர்களின் சந்திப்பால் நன்மையுண்டு, விருந்துகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.

**மகரம்:** வீட்டை அழகுபடுத்தும் எண்ணம் உருவாகும், பயணத்தில் பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், பக்குவமாகப் பேசி காரியம் சாதிக்க வேண்டிய நாள்.

**கும்பம்:** உன்னதமான வாழ்வுக்கு அடித்தளம் அமைக்கும் நாள், பொது வாழ்வில் பாராட்டும் புகழும் கூடும் நாள், தித்திக்கும் செய்திகள் வந்து சேரலாம்.

**மீனம்:** பெரிய மனிதர்களின் தொடர்புகள் உங்களின் தகுதியை உயர்த்தும், பாதியில் நின்ற பணியை மீதியும் தொடர்வீர்கள், போசன சுகமுண்டு.

**கிரகநிலை**

| | | | |
|---|---|---|---|
| செவ் | | | |
| | இராசி பலன் கிரகநிலை | | ராகு |
| கேது | சந்திராஷ்டமம் இரவு 12.15 மணிக்கு மகர-சந் | | |
| சூரி, புத, சனி, சந் | குரு, சுக் | | |

**06.01.2019**
மார்கழி 22, ஞாயிற்றுக்கிழமை
சூரிய உதயம் காலை 6.24 மணிக்கு
அமாவாசை காலை 7.36 மணிக்கு
பூராடம் மாலை 6.19 மணிவரை
சுபநேரம் 9.31-11.01 மணிவரை
இராகுகாலம் 5.01-6.31 மணிவரை
திருக்காட்சி ஞாயிறு
சித்தாமிர்தம்

வளவன்

# வடபிராந்திய முகாமையாளர் கொழும்புக்கு இடமாற்றம்

## இ.போ.ச.பணிப்பாளர் நடவழக்கை

(யாழ்ப்பாணம்)

இலங்கை போக்குவரத்துச் சபையின் வடமாகாண இணைந்த தொழிற்சங்கத்தால் நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்ட சாலை முடக்கப் போராட்டத்தின் எதிரொலியாக வட பிராந்திய முகாமையாளர் எஸ்.கேதீஸ்வரனுக்கு நாளை நடைமுறைக்கு வரும் வகையில் இலங்கைப் போக்குவரத்துச் சபையின் கொழும்புத் தலைமைக் காரியாலயத்துக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

வடமாகாணத்திலுள்ள தொழிற்சங்கள் இணைந்து பிராந்திய முகாமையாளரை இடமாற்றம் செய்ய வலியுறுத்தியும் 10 அம்சக் கோரிக்கையை முன்வைத்தும் கடந்த மாதம் இரு போராட்டங்களை முன்னெடுத்தனர்.

இப்போராட்டங்களின் தொடர்ச்சியாக நேற்று முன்தினம் இடம்பெற்ற முழுசாலை முடக்கப் போராட்டத்தின் விளைவாக கோரிக்கைகளையேற்ற இலங்கைப் போக்குவரத்துச் சபை தலைமையகத்தின் பணிப்பாளர் றமால் சிறீவர்த்தனவால் குறித்த இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது. (இ-10)

# பொருளாதார விவகாரங்கள், அபிவிருத்தி அமைச்சால் வடக்கில் பல அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுப்பு

(யாழ்ப்பாணம்)

பொருளாதார வலுவூட்டல் உட்கட்டமைப்பு திட்டத்தின் கீழ் வரவு-செலவுத் திட்ட நிதிப்படுத்தலில் பல பொருளாதார வலுவூட்டல் உட்கட்டமைப்பு வேலைத் திட்டங்கள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் வழிகாட்டலில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் அமைச்சரவைப் பத்திரத்திற்கு அமைவாக உயர் பெறுபேறுகளை வழங்கக் கூடிய வாழ்வாதாரத்தை மேம்படுத்துகின்ற உட்கட்டமைப்பு கருத்திட்டங்களான மீன்பிடி இறங்குதுறைகளும் நங்கூரமிடும் தளங்களும் யாழ். மாவட்டத்தில் மேம்படுத்தப்பட்டு முடிவுறுத்தப்பட்டுள்ளன. தெல்லிப்பழையில் பலாலி வடக்கு இறங்குதுறையும் ஊரணி இறங்குதுறையும் சங்கானை பிரதேச செயலகப்பிரிவில் அராலி இறங்குதுறையும் பருத்தித்துறை பிரதேச செயலகப்பிரிவில் பொலிகண்டி இறங்குதுறையும் 270 மில்லியன் ரூபாவில் மேம்படுத்தப்பட்டு கடற்றொழிலாளர்களின் பாவனைக்காக கையளிக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் 1280 கடற்றொழிலாளர் குடும்பங்கள் நன்மையடைவார்கள் என தேசிய கொள்கைகள், பொருளாதார விவகாரங்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வு, வடக்கு மாகாண அபிவிருத்தி, தொழில் பயிற்சி, திறன்கள் அபிவிருத்தி மற்றும் இளைஞர் விவகாரங்கள் அமைச்சின் செயலாளர் வே.சிவஞானசோதி தெரிவித்தார்.


பொலிகண்டி இறங்குதுறை


சங்கானை இறங்குதுறை

மேலும் ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதிப்படுத்தலின் கீழ் யாழ்.மாவட்டத்தில் பருத்தித்துறையிலும் மன்னார் மாவட்டத்தில் பேசாலையிலும் இரண்டு பாரிய மீன்பிடித் துறைமுகங்களை அமைப்பதற்கான வடிவமைப்பு வேலைகள் முடிவுறுத்தப்பட்டுள்ளன. இவை தவிர யாழ்.மாவட்டத்தில் மண்டைதீவில் நங்கூரமிடும் தளமும் முனை. ஆதிகோவிலடி, தலைத்துறை, துறையூர், புங்குடுதீவு, அராலித்துறை, சாம்பலோடை, காக்கைதீவு இறங்கு துறைகளும் மன்னார் மாவட்டத்தில் கொண்டைக்கச்சிகுடா, அரிப்பு, மீனப்பாடு, சிறுதோப்பு, வங்காலை, தலைமன்னார் இறங்கு துறைகளும் கிளிநொச்சி மாவட்டத்தில் நாச்சிக்குடா, வாலைப்பாடு, பள்ளிக்குடா இறங்குதுறைகளும் முல்லைத்தீவு மாவட்டத்தில் இரணைபாலை, சிலாவத்துறை, தீர்த்தக்கரை, களப்பாடு தெற்கு, களப்பாடு வடக்கு, கொக்கிளாய் இறங்கு துறைகளும் இதற்கான மொத்த கிரயம் 201 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்களாகும். இக்கருத்திட்டமானது வடமாகாண மீன்பிடித்துறையை பொருளாதார ரீதியில் மேம்படுத்துவதற்கு பாரிய பங்களிப்பை செய்யும் என அமைச்சின் செயலாளர் வே.சிவஞானசோதி தெரிவித்தார்.

மேலும் பன்னாகம் மெய்கண்டான் பாடசாலைக்கு 45 மில்லியன் ரூபா செலவில் மூன்று மாடி கட்டட நிர்மாணப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இச்செயற்பாடுகள் வடமாகாண அபிவிருத்தியில் முக்கியமான மைல்கற்களாக அமைவதாக தேசிய கொள்கைகள், பொருளாதார விவகாரங்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வு, வடக்கு மாகாண அபிவிருத்தி, தொழில் பயிற்சி, திறன்கள் அபிவிருத்தி மற்றும் இளைஞர் விவகாரங்கள் அமைச்சின் செயலாளர் வே.சிவஞானசோதி தெரிவித்தார். (இ-7)

# திருவாசக முற்றோதலும் அலங்கார உற்சவமும்

(யாழ்ப்பாணம்)

மூளாய் கிழக்கு பொற்புலம்பதி மஹாகாளி அம்பாள் ஆலயத்தில் திருவாசக முற்றோதல் இன்று 6 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 5.30 மணியளவில் ஆரம்பமாகி நடைபெறும்.

மேலும் இவ்வாலய அலங்கார உற்சவம் எதிர்வரும் 9 ஆம் திகதி புதன்கிழமை ஆரம்பமாகி பத்து நாட்கள் நடைபெறும்.

10 ஆம் நாள் சங்காபிஷேகத்துடன் உற்சவம் நிறைவு பெறும். (இ-5)

# 'பொருளாதாரம் அழிந்துவிடும்'

## முரளிதரன் எச்சரிக்கை

(நாவலப்பிட்டி)

பெருந்தோட்ட பயிர் அழிவு கண்டால் நாட்டின் பொருளாதாரம் அழிந்துவிடும் என முன்னாள் கிரிக்கெட் வீரர் முத்தையா முரளிதரன் தெரிவித்துள்ளார்.

அத்துடன், பெருந்தோட்ட தொழிலாளர்கள் எதிர்பார்க்கும் ஆயிரம் ரூபாய் சம்பள விடயத்தில் பல சிக்கல் நிலையுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

நாவலப்பிட்டியில் நேற்று இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டு மக்களின் முன்னேற்றத்திற்காக பொதுவான பணிகளை முன்னெடுக்க கடந்த இரண்டாயிரமாம் ஆண்டில் அமைப்பு ஒன்றை ஆரம்பித்து பணிகளை முன்னெடுத்து வருகின்றோம்.

இதுவரை காலமும் எத்தனையோ பொது அமைப்புகள் மலையக மக்களுக்காக சேவையாற்ற முன்வந்திருந்த போதிலும் அவர்கள் வழங்கும் உதவிகள் மக்களுக்கு நேரடியாகச் சென்றடைந்ததாகத் தெரியவில்லை.

இருப்பினும் மலையக பிரதேசங்களில் எமது பொதுப்பணிகளை முன்னெடுக்க சரியான அமைப்பு ஒன்று



எமக்கு இருக்கவில்லை.

ஆகையால் குருவி எனும் அமைப்பின் ஊடாக இப்போது மலையக மக்களுக்கு எமது பொதுப்பணிகள் நேரடியாகச் சென்றடைய வழிவகுத்துள்ளோம்.

பெருந்தோட்ட தொழிலாளர்கள், தம்முடைய மற்றும் தமது பிள்ளைகளின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்திக் கொள்வதற்கு பல்வேறு சிக்கல்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

எமது அமைப்பின் ஊடாக பல திட்டங்களை இந்த மக்களுக்கு வழங்கத்திட்டங்களை வகுத்து வருகின்றோம்.

அதேவேளையில் அரசு பங்கேற்காத திட்டங்களை மக்களுக்கு எமது பொது அமைப்பின் ஊடாகவே நாம் செய்யவுள்ளோம்.

அதேபோன்று மருத்துவ காப்புறுதி சேவையையும் மலையக மக்களுக்காக உருவாக்க திட்டங்களை வகுத்து வருகின்றோம்.

இதன்மூலம் மருத்துவ பிரச்சினையில் கால்வாசியேனும் தீரும். இதுவரை 2000 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களை வழங்கி வைத்துள்ள நாம் மேலும் பத்தாயிரம் மாணவர்கள் இனம் காணப்பட்டுள்ளதால் எதிர்வரும் காலத்தில் அவர்களுக்கும் இந்த வசதியைச் செய்யவுள்ளோம்.

தோட்டத் தொழிலாளர்கள், பெருந்தோட்ட முகாமைத்துவம், தேயிலை ஏற்றுமதியாளர்கள், தேயிலை உற்பத்தி செய்வோர்கள் என நான்கு பிரிவினரும் ஒன்றிணைந்து ஒருமித்த முடிவுக்கு வரும் நேரத்தில் சம்பள உயர்வுக்கான சாத்தியம் ஏற்படும் வாய்ப்புள்ளது.

தொழிலாளர்களுக்கு வருமானம் குறையும் பட்சத்தில் பெருந்தோட்டப் பயிருக்கு அழிவு ஏற்படக்கூடும். அவ்வாறு அழிவு ஏற்படும் போது நாட்டின் பொருளாதாரமும் அழியும் எனவும் அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். (இ-7)

# ஐ.தே.கவை அழிக்க சந்திரிகா முயற்சி

## அமைச்சர் ரவி காட்டம்

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் ஒன்றிணைந்து ஆட்சியை முன்னெடுக்க முடியும் என்ற நம்பிக்கை காணப் படுகின்ற போதிலும் அதனை குழப்பும் வகையில் பல்வேறு சூழ்ச்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன எனத் தெரிவித்துள்ள அமைச்சர் ரவி கருணாநாயக்க, சுதந்திரக் கட்சியை அழித்த சந்திரிகா பண்டார நாயக்க குமாரதுங்க தற்போது ஐக்கிய தேசியக் கட்சியையும் அழிப்பதற்கு முற்படுவதாகவும் குற்றம்சாட்டியுள்ளார்.



கொழும்பு சிங்கள மொழி வார இதழொன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே அமைச்சர் ரவி கருணாநாயக்க மேற்கண்டவாறு குற்றம் சாட்டியுள்ளார். (இ-7)

# இருவர் மீது கத்திக்குத்து

(வெல்லவாய)

வெல்லவாய - தேலுல்ல ஜனபத கிராமத்தில் நேற்றுக் காலை இடம்பெற்ற கத்திக்குத்து தாக்குதலில் இருவர் படுகாயமடைந்துள்ளனர். தனிப்பிட்ட விரோதத்தால் ஏற்பட்ட வாய்த்தகராறு அதிகரித்தே இந்தக் கத்திக் குத்து தாக்குதல் இடம்பெற் றுள்ளது.

கத்திக்குத்து தாக்குதலில் காயமடைந்த இருவரும் தனமல்வலி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, கவலைக்கிடமான நிலையில் அம்பாந்தோட்டை பொது வைத்தியசாலைக்கு மாற்றியனுப்பப்பட்டுள்ளனர்.

தாக்குதலை மேற்கொண்ட நபர் அப்பகுதியிலிருந்து தப்பிச் சென்றுள்ள நிலையில், அவரைக் கைது செய்வதற்கான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (இ-7)

# குமார் பொன்னம்பலத்தின் நினைவுதினம் நேற்று உணர்வுபூர்வமாக அனுஷ்டிப்பு



(வவுணதீவு)

மாமனிதர் குமார் பொன்னம்பலத்தின் 19 ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு மட்டக்களப்பு வவுணதீவில் உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் வவுணதீவு காஞ்சரம்குடா புளியடி சந்தியில் நேற்று சனிக்கிழமை இந்நினைவேந்தல் இடம்பெற்றது.

இதன்போது மாமனிதர் குமார் பொன்னம்பலத்தின் உருவப்படத்திற்கு மலர் மாலை அணிவித்து, சுடரேற்றி, மலர்தூவி, 2 நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

கட்சியின் செயற்பாட்டாளர் வினோ தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் மட்டக்களப்பு மாவட்ட இணைப்பாளர் த.சுரேஸ், கட்சியின் மாவட்ட செயலாளர் க.ஜெகநீதன், நிர்வாகப் பொறுப்பாளர் சி.சிவசுதன் மற்றும் பொதுமக்கள் பலர் கலந்துகொண்டனர்.

தமிழினத்தின் உரிமைக்காக குரல்கொடுத்த குமார் பொன்னம்பலம், கடந்த 2000 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 5 ஆம் திகதி தலைநகர் கொழும்பில் சுட்டுக்கொல்லப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)




யாழ். உடுப்பிட்டி ப.நோ.க.கூ.ச.பொது முகாமையாளர்களுக்கான பிரியாவிடை அண்மையில் இடம்பெற்றது. (படம்:-மகாலிங்கம்)

## மணமக்கள் தேவை

சுவிஸ், கனடாவில் வசிக்கும் மண மகள்மாருக்கு பல்கலைக்கழகத்தில் ICT, படித்த மணமகன்மார் இலங்கையில் படித்த மணமக்களுக்கு. இலங்கையிலேயே மணமக்கள் தேவை.

021 491 9370
0094767250144
(6841) 077 853 3483

## திருவாசக முற்றோதல்

(யாழ்ப்பாணம்)

கீரிமலை சிவபூமி மண்டபத்தில் இன்று 6 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 7 மணியளவில் திருவாசக முற்றோதல் இடம் பெறும். (இ-5)

## பணியாட்கள் தேவை

முல்லைத்தீவு மாவட்டத்தில் இயங்கி வருகின்ற சிறுவர் அபிவிருத்தி நிலையத்திற்கு இல்லச்சிறுமிகளை நன்கு பராமரிக்கக் கூடிய பணியாட்கள் (பெண்கள்) தேவை. வயது 25 உயர்தரம் கற்றிருத்தல் வேண்டும். தங்கி நின்று பணியாற்றல் வேண்டும். சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். (6868)

தொடர்புகொள்ள வேண்டிய தொலைபேசி எண். 077 525 9513, 075 699 1513

## நாய்க்குட்டி விற்பனை

டாசோன் நாய்க்குட்டி (ஆண்) விற்பனைக்குண்டு.

(6933) 077 135 0082

## காண்டம் பார்த்தல்

உங்கள் வாழ்வில் நடந்த மற்றும் நடக்கப் போகின்ற அனைத்து விடயங்களையும் மிகவும் துல்லியமாககணித்துத்தருகின்றோம்.

(6730) தொடர்புகளுக்கு:-076 835 1932, 021 223 2222
உரும்பிராய்.

## Start CIMA Affer O/L 'S' or A/L'S'

பட்டய முகாமைத்துவ கணக்காளர்களுக்கான (CIMA) கற்கைநெறி

புதிய பிரிவுகள் 19.01.2019 சனிக்கிழமை ஆரம்பமாகும்.

பதிவுகளுக்கு முந்துங்கள்:

HOT LINE:- 0776 28 48 45

EP Academy

Any Stream to Can Join With CIMA

CIMA

021 221 6400

286, 1/1, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

www.epacademy.lk
info@epacademy.lk



# YICSD COLLEGE
YARL INTERNATIONAL COLLEGE OF SKILLS DEVELOPMENT

தொழில் கற்கைநெறிகளுக்கான பதிவுகள் ஆரம்பம்
18.01.2019 முன்னர் புதியவர்கள் இணையலாம்



### ஆங்கிலம்
# Diploma in English



### கணனி
# Diploma in Microsoft Office
# Diploma in Desktop Publishing
# Diploma in Information Technology

Special OFFER



### அழகுக்கலை
# Diploma in Beauty Culture & Hairdressing
# Higher Diploma in Beauty Culture & Hairdressing



### கேக் ஐசிங்
# Diploma in Cake Making & Decorating
# Higher Diploma in Cake Making & Decorating



### தையல்
# Diploma in Dress Making (Tailoring)
# Higher Diploma in Dress Making (Tailoring)



### ஆரி எம்பிராய்டரி
# Diploma in Aari Embroidery
# Higher Diploma in Aari Embroidery

50% OFF

* விபரங்களுக்கு நேரில் வருகைதரவும்

இல.307 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
(கண்ணாதிட்டி சந்தி Rolex வெதுப்பகத்திற்கு இடையில்)


# VACANCY ANNOUNCEMENT

Applications are invited from citizens of the Democratic Socialist Republic of Sri Lanka for the following posts of Palmyrah Development Board.

**1.Employee Category:Research Assistant**

A Bachelor's Degree in Science (Chemistry, Food Science and technology, Food and nutrition, , Microbiology, Biochemistry, Botany, Agriculture chemistry, Agriculture biology, Agronomy Biotechnology, Biochemistry) which is recognized by the U.G.C. with a Post Graduate Diploma in the relevant field.

**Salary Scale relevant to the post:**

MA 5-1-2016 Rs. (34,870 – 10 X 660 – 15 X 755 – 4 X 495 – 11 X 930 – 63,025/=) as per the Management Circular 02/2016. Salary step specified for as at 01.01.2019 of the salary scale: Rs. 31,274/= and government approved allowances.

**2.Employee Category: Laboratory Assistant**

**Qualifications: External candidates**

**a)Vocational**: Having Obtained a certificate of proficiency not below than the National Vocational Qualification Level-5 to the relevant field issued by a Technical / Vocational Training Institute accepted by the Tertiary and Vocational Education Commission.

**Internal Candidates.**

Having obtained the qualifications required by the external candidates above.

**Salary Scale relevant to the post:**

MA2-1-2016 Rs. (30,310 – 10 X 300 – 7 X 350 – 4 X 495 – 20 X 660 – 50,940) as per the Management Circular 02/2016. Salary step specified for as at 01.01.2019 of the salary scale: Rs. 27,170/= and government approved allowances.

**Age:** Should not be less than 22 years and not more than 45 years.

Self prepared applications marked the Relevant Post on the top left-hand corner of the envelope should be sent by Registered Post, addressed to the Manager- Administration & Human Resource, Palmyrah Development Board, N.H.D.A. Building, 1st Floor, Kandy Road, Jaffna to be received on or before 20th January,2019 Late applications will not be considered.

Applications from officers in Government Departments/Corporations/ Statutory Boards should be forwarded through their Head of the Department. A copy may be sent directly.

**Manager-Administration & Human Resource,**
**Palmyrah Development Board,**
**NHDA Building, Kandy Road, Jaffna.**
**Email address: slpdbho@gmail.com**


UNIVERSITY COLLEGE OF JAFFNA UNIVOTEC

# University College of Jaffna
University of Vocational Technology
Ministry of Skills Development & Vocational Training

## Applications are open for the following Courses

- Construction Technology
- Building Services Technology
- Mechatronics Technology
- Production Technology
- Farm Machinery Technology
- Food Technology
- Hospitality Management
- Cosmetology ( Beauty Culture )

Closing Date 31st January 2019

Entry Qualifications
GCE A/L qualified or NVQ 4

Accreditation QMS TVEC Approved Registration

Career Path : A/L or NVQ 4 → University College: NVQ 5/ Diploma → NVQ 6/ HND → UNIVOTEC NVQ 7/ Degree

For more details

University College of Jaffna
29, Brown Road,
Kokuvil,
Jaffna.

Visit our website: www.ucj.ac.lk
E-mail: info@ucj.ac.lk
Telephone: 021-221-7791 or 021-221-7792

Application forms are available at leading bookshops and can be dowloaded from the website or can be collected from our office

Please pay the application Fee Rs. 500 to this account no (Peoples Bank 162 - 100100045947) and attach the bank receipt with application

# நிம்மதியாக வாழ இடம் வேண்டும் 14 வயதுச் சிறுமி போராட்டம்



(அம்பாறை)

அங்கவீனமுற்ற தந்தை மற்றும் தாயுடன் வாழும் 14 வயது சிறுமி தங்களுக்கு நிம்மதியாக வாழ இடம் தருமாறு கோரி போராட்டத்தில் ஈடுபட்டுள்ளார்.

அம்பாறை மணிக்கூட்டுக் கோபுரத்திற்கு அருகில் குறித்த சிறுமி போராட்டத்தில் ஈடுபட்டுள்ளார்.

ஜனாதிபதி அவர்களே! நாட்டின் சட்டம் அனைவருக்கும் சமமானதா? என எழுதிய பதாகையினை ஏந்தியபடி கண்ணீருடன் குறித்த சிறுமி போராட்டத்தை முன்னெடுத்துள்ளார்.

இந்த நிலையில், அம்பாறை நகர சபையின் உறுப்பினர்கள் அனைவரும் குறித்த இடத்திற்குச் சென்று உரிய அதிகாரிகளுக்கு அறிவித்துள்ளனர்.

குறித்த சிறுமியின் தந்தை அங்கவீனமுற்ற இராணுவ சிப்பாய். தாய் மற்றும் தந்தையுடன் அம்பாறை பொலிஸ் விசேட அதிரடிப்படைக்கு அருகில் வீட்டைக் கட்டி வசித்து வந்துள்ளார்.

குறித்த இடம் வனஜீவராசிகள் திணைக்களத்துக்கு சொந்தமானது எனக் கூறி குறித்த இடத்திற்கு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக சிறுமி தெரிவித்துள்ளார்.

இதன்படுத்து வனஜீவராசிகள் திணைக்களத்தால் குறித்த குடும்பம் வீதிக்கு தள்ளப்பட்டுள்ளது.

குறித்த பகுதியில் 700 வீடுகள் கட்டப்பட்டுள்ள நிலையில், பொலிஸ் விசேட அதிரடிப்படை, அம்பாறை மனநல வைத்தியசாலை மற்றும் நகர சபை என்பன அந்தப் பகுதியில் நிர்மாணிக்கப்பட்டுள்ளன.

கைவிடப்பட்ட குறித்த குடும்பத்திற்கு அப்பகுதி கிராம உத்தியோகத்தர் தான் வசிக்கும் இடத்தில் ஒரு பகுதியில் தங்குவதற்கு இடம்கொடுத்துள்ளார்.

அதன் பின்னர் நீதிமன்றத்தில் உத்தரவிட்டதாகக் கூறி வனஜீவராசிகள் திணைக்கள உத்தியோகத்தர்கள் சிறுமியின் தாய்க்கு எதிராக அம்பாறை பொலிஸில் மேற்கொண்ட முறைப்பாட்டுக்கமைய சிறுமியின் தாய் 7 நாட்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதாக சிறுமி தெரிவித்துள்ளார்.

அம்பாறை பிரதிக் காணி ஆணையாளர், தக்ஷிலா குணரத்ன குறித்த இடத்திற்கு சென்று சிறுமியுடன் கலந்துரையாடி, அம்பாறை மாவட்ட செயலகத்திற்கு அழைத்துச் சென்றுள்ளார். (இ-7)

# அமைச்சுப் பதவி வழங்கப்படாத ஐ.தே.மு.எம்.பிக்களுக்கு மாற்று வழி

## ஹர்ஷ டி.சில்வா ஆலோசனை

(கொழும்பு)

அமைச்சுப் பதவிகள் வழங்கப்படாத ஐக்கிய தேசிய முன்னணி உறுப்பினர்களுக்கு மாற்று வழியொன்றை ஏற்படுத்தி அவர்களுக்கு நியாயமான தீர்வொன்றை பெற்றுக்கொடுக்க வேண்டும் என அமைச்சரவை அந்தஸ்து அற்ற அமைச்சர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.

அத்துடன் அமைச்சுப் பதவி கிடைத்த சிலருக்கு தங்கள் ஆதரவாளர்களுக்கு சேவை செய்ய முடியாத நிலையும் இருக்கின்றது எனவும் அவர் தெரிவித்தார்.



ஐக்கிய தேசியக் கட்சி பின்வரிசை உறுப்பினர்கள் சிலர் நாடாளுமன்றத்தில் சுயாதீனமாக செயற்படப்போவது தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும்போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

மகிந்த ராஜபக்ஷ மற்றும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இணைந்து கடந்த மாதம் மேற்கொண்ட அரசியல் சதித்திட்டத்தின் போது அதனை வெற்றிக் கொள்ள எமது பின்வரிசை நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலர் அர்ப்பணிப்புக்களை மேற்கொண்டனர்.

அவர்களின் அர்ப்பணிப்புக்களுக்கு நாங்கள் நிச்சயமாக பிரதி உபகாரம் செய்ய வேண்டும் என தெரிவித்துள்ளார். (இ-7)

### குடிநீர் கோரி போராடியவர்கள் மீது துப்பாக்கிச்சூடு!

# ரத்துபஸ்வல வழக்கு ஒத்திவைப்பு!



(கம்பஹா)

கம்பஹா - ரத்துபஸ்வல மக்கள் சுத்தமான குடிநீர் கோரி வெலிவேரிய பகுதியில் முன்னெடுத்த போராட்டத்தின் போது துப்பாக்கிப் பிரயோகம் நடத்தப்பட்ட சம்பவம் தொடர்பான வழக்கு எதிர் வரும் ஏப்ரல் மாதம் ஐந்தாம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

குறித்த வழக்கு நேற்று முன்தினம் கம்பஹா நீதவான் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது சம்பவம் தொடர்பில் இராணுவ பிரிகேடியர் உள்ளிட்ட நான்கு இராணுவ அதிகாரிகளுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட குற்றப்பத்திரத்துக்கான சட்டமா அதிபரின் ஆலோசனைகள் இதுவரை பெறப்படாத நிலையிலேயே குறித்த வழக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

கடந்த 2013 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் ரத்துபஸ்வல பகுதியில் சுத்தமான குடிநீர் கோரி ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் மூவர் உயிரிழந்ததுடன், 30 பேர் காயமடைந்தனர்.

இது தவிர, 8 இராணுவத்தினர், ஒரு பொலிஸ் அதிகாரியும் காயமடைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# த.தே.கூவை பழிவாங்கிய மைத்திரி

(ஏறாவூர்)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தமிழ்தேசிய கூட்டமைப்பின் மீது கொண்ட கோபத்தை பழி தீர்க்கும் ஒரு நடவடிக்கையாகவே கிழக்கு மாகாண ஆளுநர் நியமனம் அமைந்துள்ளது என மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பாக்கியசெல்வம் அரியநேத்திரன் தெரிவித்தார்.

கிழக்குமாகாண ஆளுநராக ஹிஸ்புல்லாவை ஜனாதிபதி நியமித்தமை தொடர்பாக ஊடகவியலாளரிடம் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். (இ-7)

# தமிழ்த் தலைமைகளின் விடாப்பிடியும் கிழக்கு மாகாண ஆளுநர் தெரிவும்

## வியாழேந்திரன் விளக்க அறிக்கை



(ஏறாவூர்)

கிழக்கு மாகாண ஆளுநர் நியமன விடயத்தில் தமிழ் தலைமைகள் தொடர்ச்சியாக எடுத்த முடிவுகளே காரணம் என மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.வியாழேந்திரன் குற்றம் சுமத்தியுள்ளார்.

நான் கிழக்கு அபிவிருத்தி அமைச்சை எடுத்தமைக்கு துள்ளிக்குதித்து துரோகி பட்டம் சூட்டும் அளவுக்கு சென்றார்கள். இன்று ஊருக்கு ஒரு அமைச்சர் என்ற நிலை முஸ்லிம்மக்கள்மத்தியில் உருவாகி வருகிறது. அது அவர்கள் அரசியல் சாணக்கியம்.

அவர்கள் இந்த நாட்டை யார் ஆண்டாலும் தங்கள் இனத்தை வாழ வைப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் இராஜதந்திரமாக செய்து வருகிறார்கள். அவர்கள் அபிவிருத்திக்காக போராடி எந்த உரிமையையும் இழக்கவில்லை.

ஆனால் கிழக்கில் எம் மக்களின் நிலை கிழக்கு மாகாண ஆளுநராக ஹிஸ்புல்லா நியமிக்கப்பட்டுள்ளமை குறித்து ஊடகங்களுக்கு அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ள வியாழேந்திரன் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

'கடந்த வருடம் இடம்பெற்ற அரசியல் பிரளயத்தை அடுத்து ஜனாதிபதி எடுத்த தீர்மானங்களுக்கு தமிழ்தலைமைகள் முட்டுக்கட்டையாக இருந்துள்ளன. அதிலும், ஜனாதிபதி தன்னுடைய தீர்மானத்தை ஏற்றுக் கொள்ளா விடினும் எதிர்க்க வேண்டாம் என்று கூறியும் தமிழ் தலைமைகள் அதனை எதிர்த்தன.

ஒருவேளை இதன் பிரதிபலிப்பாகவே இன்று ஜனாதிபதி இவ்வாறான ஒரு நிலைப்பாட்டை எடுத்தாரா? அல்லது ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியை வளர்க்க வேண்டும் என்ற நிலையில் இப்பதவியை வழங்கினாரா? என்ற கேள்வியும் என்னுள் எழுகிறது.

உண்மையிலேயே இன்று கிழக்கு தமிழர்களின் இருப்பு என்பது கேள்விக்குள்ளான நிலையில் தான் இருக்கிறது. இதற்கு தமிழ் தலைமைகளே பதில் சொல்லி ஆக வேண்டும். தேசியம் தேசியம் என்று மாத்திரம் பேசிக் கொண்டிருந்தால் அது எமது மக்களுக்கு முழுமையான தீர்வை தராது. உரிமை சார்ந்த அரசியலுடன் எமது மக்கள் தினமும் அனுபவிக்கும் பிரச்சினைகள் குறித்து சிந்திக்க வேண்டும்.

கிழக்கில் இன்று எத்தனையோ அபிவிருத்தி திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டாலும் அவை தமிழர்களுக்கு கிடைப்பது என்பது ஒரு எட்டாக்கனியாகவே இருந்துள்ளது. இதை எவ்வாறு எமது மக்களுக்கும் பெற்றுக்கொடுக்க முடியும் என்பதை பற்றி சிந்திக்க வேண்டும்.

இதன்படி, ஜனாதிபதிக்கு இருக்கும் அதிகாரத்தை பயன்படுத்தி நாம் எமது மக்களுக்கு பெற முழுந்த சிலவற்றையேனும் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதே எனது தீர்மானம். நாம் அரசியல் ரீதியாக ஒரு கல் எறிந்தால் நம்மை பல கற்கள் கொண்டு தாக்கும் அளவுக்கு தென்னிலங்கை மாறியிருக்கிறது. இதற்கு தமிழ் தலைமைகள் எடுக்கின்ற பல தீர்மானங்களே காரணமாகவுள்ளன.

எனவே, இனிவரும் காலங்களிலாவது கிழக்கு தமிழர்களின் இருப்பு குறித்து கூட்டமைப்பு உட்பட்ட தமிழ் தலைமைகள் நினைவில் வைத்து செயற்படும் என நான் நினைக்கின்றேன்.

எது எப்படியோ ஆளுநர் நியமன விடயத்தில் ஜனாதிபதிக்கு நான் முழுமையான அழுத்தத்தை கொடுத்து எமது கிழக்கு மக்களின் இருப்பை காப்பதற்கான போராட்டத்தை முன்னெடுப்பேன் என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை" என வியாழேந்திரன் தெரிவித்தார். (இ-7)

# தேசிய மரபுரிமையாக திரிபீடகம் பிரகடனம்



(கொழும்பு)

பௌத்தர்களால் பெரிதும் மதிக்கப்படும் திரிபீடகத்தை இலங்கையின் தேசிய மரபுரிமையாக பிரகடனப்படுத்தும் தேசிய நிகழ்வு நேற்று இடம்பெற்றது.

சங்கைக்குரிய மகா சங்கத்தினரின் ஆசீர்வாதத்துடன் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் மாத்தளையிலுள்ள வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த அலுவிகாரையில் இந் நிகழ்வு இடம்பெற்றது. (இ-7)

# 72 பேருக்கு இடமாற்றம்

(கொழும்பு)

பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியாக பணிபுரிந்த பிரதான பொலிஸ் பரிசோதகர்கள் 27 பேர் மற்றும் பொலிஸ் பரிசோதகர்கள் 45 பேரும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸ்மா அதிபரின் பணிப்புரையின் கீழ் பொலிஸ் ஆணைக்குழுவின் அனுமதிக்கமைய, சேவை அவசியம் கருதி உடனடியாக இந்த இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடக பிரிவு தெரிவித்துள்ளது.

இதற்கமைய கொழும்பு குற்றவியல் பிரிவு நிலைய பொறுப்பதிகாரியாக இது வரை பணி புரிந்த பொலிஸ் பரிசோதகர் கே.ஜே. பந்துனிக திபுல பொலிஸ் நிலையத்திற்கு மாற்றப்பட்டுள்ளார். (இ-7)

## ஒரு மாத சிசுவை மண்ணில் புதைத்த 2 பெண்கள் கைது

(ஹற்றன்)

ஹற்றன் பகுதியில் பிறந்து 28 நாட்களே ஆன சிசுவொன்றை கொலை செய்து மண்ணில் புதைத்த சம்பவம் தொடர்பில் சிசுவின் தாயும், அவரது தாயும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்ட இரண்டு பெண்களும் ஹற்றன் நீதவான் நீதிமன்றில் முன்னிலைப் படுத்தப்பட்ட நிலையில் எதிர்வரும் 18ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

சிசுவின் தாயை மனநல வைத்தியரிடம் அழைத்துச் சென்று பரிசோதனை மேற்கொள்ளுமாறு ஹற்றன் நீதவானால் சிறைச்சாலை அதிகாரிகளுக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. ஹற்றன், கொட்டகலை யூனிபில்ட் தோட்டப் பகுதியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சிசுவை உயிருடன் குழிதோண்டிப் புதைத்து விட்டு சற்றுநேரம் கழித்து புதைக்கப்பட்ட இடத்தில் இருந்து அதை தோண்டி எடுத்துக் கொண்டு, வைத்தியசாலைக்கு சென்று, தனது குழந்தைக்கு தொண்டையில் பால் இறுகி இறந்துள்ளதாக தாய் கூறியுள்ளார். விசாரணைகளைஆரம்பித்த பொலிஸார் சந்தேகத்தின் பேரில் இரண்டு பெண்களையும் கைது செய்துள்ளதாக தெரிவித்தனர்.

தனக்கும் தனது கணவருக்கும் இடையில் பிரச்சினை ஏற்பட்டு ஒரு மாதம் கடந்துள்ள நிலையில் இந்தச் செயலை செய்த தாக சிசுவின் தாய் பொலிஸாருக்கு வழங்கிய வாக்கு மூலத்தில் குறிப்பிட்டுள்ளார். (இ-7)

## மகிந்தவுடன் ஆணழகர் புஷ்பராஜ் சந்திப்பு



(பத்தரமுல்ல)

உலக ஆணழகர் சம்பியன்ஷிப் போட்டியில் வெற்றி பெற்ற லூசியன் புஷ்பராஜ், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை நேற்று முன்தினம் சந்தித்துள்ளார்.

பத்தரமுல்லையில் அமைந்துள்ள பொதுஜன பெரமுன முன்னணியின் அலுவலகத்திலேயே லூசியன் புஷ்பராஜ், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

இது தொடர்பில் கருத்து தெரிவித்து மகிந்த ராஜபக்ஷ உலக ஆணழகர் சம்பியன்ஷிப் போட்டியில் வெற்றி பெற்ற லூசியன் புஷ்பராஜை சந்தித்தமை மகிழ்ச்சியளிக்கின்றது. இவர் எமது நாட்டுக்குப் பெருமை சேர்த்துள்ளார்.

இவர் தொடர்பில் நான் பெருமிதமடைகின்றேன். எதிர்காலத்தில் இவர் எடுக்கும் முயற்சிகளில் வெற்றிபெற வாழ்த்துகின்றேன். அண்மையில் தாய்லாந்தில் உலக உடற்கட்டு, உடல் வாகு விளையாட்டு சம்மேளனத்தின் 10 ஆவது உலக சம்பியன்ஷிப் போட்டி நடைபெற்றது. இதன்போது, 100 கிலோகிராம் எடைக்கு மேற்பட்டவர்கள் பிரிவில் பங்கேற்ற லூசியன் புஷ்பராஜ் உலக கட்டழகராக தெரிவாகி வெற்றி பெற்றார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)


## மிஹின் லங்கா நிறுவனக் காரில் வலம் வந்த மகிந்தவின் சோதிடர்

### 8.2 மில்லியன் ரூபா இழப்பு

(கொழும்பு)

மகிந்த ராஜபக்ஷ தனது தனிப்பட்ட சோதிடரின் பாவனைக்காக கார் ஒன்றை வழங்கியதன்மூலம், மிஹின் லங்கா விமான நிறுவனத்துக்கு 8.2 மில்லியன் ரூபா இழப்பை ஏற்படுத்தியுள்ளார் என்று விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் மற்றும் மிஹின் லங்கா விமான நிறுவனங்களின் முறைகேடுகள் தொடர்பாக விசாரணை நடத்தி வரும் ஜனாதிபதி ஆணைக்குழுவிடம், மகிந்தவின் தனிப்பட்ட சோதிடரான சுமணதாச அபேகுணவர்த்தன, இது தொடர்பான விபரங்களை வெளியிட்டுள்ளார்.



"2007ஆம் ஆண்டு மகிந்த ராஜபக்ஷவின் உத்தரவின் பேரில் எனக்கு கார் ஒன்று வழங்கப்பட்டது.

மகிந்த ராஜபக்ஷவின் தலைமைப் பாதுகாப்பு அதிகாரியான மேஜர் நெவில் வன்னியாராச்சி, தொலைபேசியில் அழைத்து, ராஜகிரியவிலுள்ள லங்கா ஒரிக்ஸ் லீசிங் நிறுவனத்தில் வாகனம் ஒன்றைப் பெற்றுக் கொள்ளுமாறு கூறினார்.

நான் அங்கு காரின் சாவியைப் பெற்றுக் கொண்டேன். அந்த வாகனத்துக்கான ஒரு ஆண்டு காப்புறுதியும் பெற்றேன்.

நான் முன்னாள் ஜனாதிபதி மகிந்தவுக்கு மிகவும் நெருக்கமானவராக இருந்ததால், அந்தக் கார் எனக்குப் பரிசளிக்கப்பட்டதாக நினைக்கிறேன். எனினும், அந்தக் கார் மிஹின் லங்கா நிறுவனத்துக்குச் சொந்தமானது என்று எனக்குத் தெரியாது. அது யாருக்குச் சொந்தம் என்றும் எனக்குத் தெரியாது.

அந்தக் காரை, 2007 தொடக்கம் 2015 வரை, 8 ஆண்டுகள் நான் பயன்படுத்தினேன். மகிந்த ராஜபக்ஷ 2015 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் தோல்வியடைந்த பின்னர், அந்தக் காரை, லங்கா ஒரிக்ஸ் லீசிங் நிறுவனம் மீளப் பெற்றுக் கொண்டது" என்றும் சோதிடர் சுமணதாச சாட்சியமளித்துள்ளார்.

மகிந்த ராஜபக்ஷ ஆட்சிக்காலத்தில் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் மற்றும் மிஹின் லங்கா நிறுவனங்களால், 26 கார்கள் லங்கா ஒரிக்ஸ் லீசிங் நிறுவனத்தில் பெறப்பட்டதாகவும் இவற்றுக்கான தவணைக் கொடுப்பனவுகளை மிஹின் லங்கா நிறுவனமே செலுத்தியதாகவும் தெரியவருகிறது. (இ-7)

## மகாபொல பெறும் மாணவர்கள் 30 வீதத்தால் அதிகரிப்பு-அரசு

(கொழும்பு)

பல்கலைக்கழகங்களில் உயர் கல்வியைத் தொடரும், மாணவர்களுக்கு அரசால் வழங்கப்படும் மகாபொல புலமைப்பரிசில் பெறும் மாணவர்களின் எண்ணிக்கையை 30 சத வீதத்தால் அதிகரிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இதன்படி இவ்வருடம் வழமையைவிட மேலதிகமாக 4,000 பட்டதாரி மாணவர்கள் மகாபொல புலமைப்பரிசில் உதவியைப் பெற்றுக்கொள்ளவுள்ளனர்.

இதேவேளை, வருடாந்தம் 15 இலட்சம் ரூபாவுக்கும் குறைந்த வருமானம் பெறும் பெற்றோரின் பல்கலைக்கழகம் செல்லும் மாணவர்களுக்கு மகாபொல புலமைப்பரிசில் மற்றும் உதவித் தொகையை வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இதுவரை வருடாந்தம் 5 இலட்சம் ரூபாவுக்கும் குறைந்த வருமானம் பெற்ற பெற்றோரின் பிள்ளைகளுக்கு மட்டுமே மகாபொல புலமைப்பரிசிலும் உதவித் தொகையும் வழங்கப்பட்டு வந்த நிலையில் அரசாங்கம் பெற்றோரின் வருடாந்த வருமான எல்லையை 15 இலட்சம் ரூபாவரை அதிகரித்துள்ளது.

தற்போது 7,000 பட்டதாரிகள் வருடாந்தம் மகாபொல புலமைப்பரிசில் மற்றும் உதவித் தொகையை பெற்று வருவதாக மகாபொல புலமைப்பரிசில் நிதியத்தின் பணிப்பாளர் நாயகம் பராக்கிரம பண்டார தெரிவித்துள்ளார்.

தற்பொழுது ஒரு மாணவருக்கு மாதாந்தம் 5000 ரூபா வீதம் மகாபொல புலமைப் பரிசில் நிதி வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## பிரச்சினை இருந்தாலும் ஐ.தே.க்வை விட்டு விலகமாட்டோம்!

### அஷோக் அபேசிங்க உறுதி

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் பின்வரிசை உறுப்பினர்கள் மத்தியில் எவ்வாறான பிரச்சினைகள் இருந்த போதும் அவர்கள் கட்சியை விட்டு விலகிச் செல்ல மாட்டார்கள் என்று பிரதியமைச்சர் அஷோக் அபேசிங்க தெரிவித்துள்ளார்.

தற்போதுள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்பட்டு விரிவான கூட்டமைப்பை உருவாக்கவுள்ளோம்.

அதன்கீழ் எதிர்வரும் தேர்தலுக்கு முகம் கொடுப்பதற்கு ஐக்கிய தேசியக் கட்சி தற்போது தயாராகி வருகின்றது என்றும் அவர் தெரிவித்தார்.



கொழும்பில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்குப் பதில் வழங்கும் போதே பிரதியமைச்சர் அஷோக் அபேசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

## பேர்பெச்சுவல் ட்ரஷரீஸ் நிறுவனம் மீதான தடை தொடர்ந்தும் நீடிப்பு


(கொழும்பு)

பேர்பெச்சுவல் ட்ரஷரீஸ் நிறுவனம் (Perpetual Treasuries Ltd) மீது விதிக்கப்பட்டுள்ள தடை மேலும் ஆறு மாதங்களுக்கு நீடிக்கப்பட்டுள்ளது. இலங்கை மத்திய வங்கியால் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று மாலை 4.30 மணியிலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் பேர்பெச்சுவல் ட்ரஷரீஸ் நிறுவனத்திற்கான தடை மேலும் நீடிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய குறித்த நிறுவனத்திற்கு மேலும் ஆறு மாத காலத்திற்கு அதன் வியாபாரத்தினைக் கொண்டு நடத்துவதற்கும் முதல் நிலை வணிக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் முடியாது எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

## பாரவூர்தி விபத்து இருவர் உயிரிழப்பு!



(கொழும்பு)

நீர்கொழும்பு - கொழும்பு வீதி ஜாஎல - வெலிகம்பிட்டிய சந்தியில் பாரவூர்தி ஒன்று வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளானதில் இருவர் உயிரிழந்துள்ளனர்.

நேற்று அதிகாலை குறித்த விபத்து இடம்பெற்றுள்ளதுடன் பாரவூர்தி சாரதி றாகம வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

வீதியில் பயணித்துக் கொண்டிருந்த நபர் ஒருவரும் பாரவூர்தியின் உதவியாளரும் உயிரிழந்துள்ளனர். (இ-7)


# பாராட்டி வாழ்த்துகின்றோம்



சுவர்நிகா உதயன்- 182



அம்ஷிகா ரவீந்திரன்- 177



கரிஸ்னி சத்தியசீலன்- 174



கிஷோயினி சுகந்தன்-174




ஜெனோஷா ஜெயசந்திரன்-170

2018 ஆம் ஆண்டு இடம்பெற்ற புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த நிலைய மாணவர்களை மென்மேலும் பல சித்திகளைப் பெற பாராட்டி வாழ்த்துகின்றோம்.


வாழ்த்துவோர்: அராலி ஸ்ரீ முருகன் சனசமூக நிலையம்.

(6945)

# விழிப்புலனற்றோர் வாழ்வில் ஒளியேற்றிய லூயிஸ் பிரெய்ல்




உலக சுகாதார ஒழுங்கமைப்பின் புள்ளிவிபரத் தகவலின் படி உலகில் ஏறத்தாழ 39 மில்லியன் பேர் பார்வையற்றவர்களாக இருக்கின்றனர். இதில் 82 சதவீத மானோர் ஐம்பது வயதிற்கு மேற்பட்டவர்கள். 18 சதவீத மானோர் ஐம்பது வயதிற்கு






கீழ்ப்பட்டவர்கள்.

பிறவியிலேயே குருடர்களாக பிறப்பவர்கள் மிகச் சிலரே. எனினும் பலர் தம் குழந்தை பருவத்தில் தவிர்க்கப்படக்கூடிய காரணிகளால் பார்வையை இழக்கின்றனர்.

பிள்ளைகளில் போஷணைக் குறைபாடே பார்வைக் குறைபாட்டிற்கான பிரதான காரணியாக இருக்கின்றது. வளர்ந்தவர்களில் நீரிழிவு நோய், உயர் குருதியமுக்கம், விழித்திரையைத்தின்சிதைவு என்பன குருட்டுத் தன்மையை ஏற்படுத்தும் முக்கிய காரணிகளாகும்.

முன்பொரு காலத்தில்பார்வை இழந்தவர்கள் வாழத் தகுதியற்றவர்கள் என்று கருதப்பட்டனர். அந்தக் காலம் போய்விட்டது. கண்பார்வை இழந்தவர்கள் பிரெய்ல்முறையின் மூலம் இப்போது எல்லோரையும் போல படிக்க முடியும். பிரெய்ல் முறை பற்றி எல்லோருமே கேள்விப் பட்டிருப்போம். இதைக் கண்டு பிடித்தவர் பிரான்ஸ் நாட்டைசேர்ந்த லூயிஸ் பிரெய்ல் ஆவார்.

லூயிஸ் பிரெய்ல் நான்கு வயது சிறுவனாக இருந்த போது செருப்புதைக்கும் தனது தந்தையின் பெரிய ஊசியை வைத்து விளையாடிக் கொண்டிருந்த போது அந்த ஊசி கண்ணை குத்தி விட்டது. அவர் ஒரு கண் பார்வையை இழந்து விட்டார்.

அந்தக் கண்ணில் ஏற்பட்ட தொற்று சில மாதங்கள் கழித்து அடுத்த கண்ணிற்கு பரவி முழுப் பார்வையையும் இழந்து விட்டார். அவருக்கு பார்வைபோய் விட்டாலும், படிக்க வேண்டும் என்ற ஆவல் அவரிடம் நிறைய இருந்தது.

கண் பார்வை இழந்தவர்கள் படிக்க ஏதாவதொரு வழி கண்டுபிடிக்க வேண்டும் என்று யோசித்தார். பலரிடமும் கலந்தாலோசித்தார். ஒரு நாள் போர் வீரர் ஒருவரிடம் பேசிய போது, ஒரு தகவல்கிடைத்தது. போரின் போது தகவல்களை பரிமாற்றம் செய்யும் முறை பற்றி அவர் விளக்கினார்.

அந்த போர்வீரர் கையால் எழுதினால் விளக்கொளியில் தான் அதை படிக்க முடியும். விளக்கொளியை ஏற்றினால் எதிரிகள் இவர்களது இருப்பிடத்தை அறிந்து விடுவர்.

எனவே இருட்டில் தொட்டுப் பார்த்து படித்தறியும் முறையில் குறியீட்டு எழுத்துகளை அனுப்புவோம் என்று அந்த போர் வீரர் கூறியதை கேட்ட லூயிஸ் பிரெய்ல் யோசிக்கலானார். அவருக்கு எந்த ஊசி தன் கண்ணை குத்தியதோ அதே ஊசியைப் பயன்படுத்தி ஒரு தாளில்துளைகளை போட ஆரம்பித்தார். ஒரு தாளை எடுத்து அதன் மீது நெருக்கமாக ஆறு துளைகளை இட்டார் தொட்டு பார்த்தார்.

இன்னொரு விதமாக ஆறு துளையிட்டு மறுபக்கமாக தடவிப் பார்த்தார். கடதாசித் தாளின் பின்புறத்திலிருந்து ஊசி போன்ற எழுது கருவியினால் குத்துவதன் மூலம் பொங்கி நிற்கும் வண்ணம் குத்துக்கள் உருவாக்கப்படுகின்றன.

இவ்வாறு எழுதும் போது எதிர்த் திசையிலிருந்தே எழுத்துக்கள் குத்தப்படுகின்றன. இந்த அமைப்பில் புள்ளிகளை வெவ்வேறு விதமாக துளையிடுவதன் மூலம் ஆங்கில எழுத்துகளையும் அடிக்கடி பயன்படுத்தடும் வார்த்தைகளையும் உண்டாக்கினார்.

இப்படித்தான் இன்றும் விழிப்புலனற்றோர் முனைவர் பட்டம் வரையில் படிக்க உதவும் முறையை 1929 இல் விழிப்புலனற்றோருக்கான எழுத்து முறையொன்றை லூயிஸ் பிரெய்ல் கண்டு பிடித்தார். இதுவே இன்று உலகெங்கும் பயன்படுத்தப்படும் பிரெய்ல்எழுத்து முறையாகும்.

பிரெய்ல் முறையை உலகிற்கு அளித்து விழிப்புலனற்றோர் வாழ்வில் ஒளியேற்றிய லூயிஸ் பிரெய்ல் 1809 ஆம் ஆண்டு ஜனவரி 4 ஆம் திகதி பிறந்தார். இத் தினத்தையே நாங்கள் லூயிஸ் பிரெய்ல் தினம் என்று கொண்டாடுகிறோம்.

1828 ஆம் ஆண்டு குருடர் கல்விக்கான தேசிய நிறுவனத்தில் விழிப்புலனற்றோருக்கான ஆசிரியராக பணிபுரிய ஆரம்பித்தார். இவர் 1852 ஆம் ஆண்டு ஜனவரி ஆறாம் திகதி காலமானார்.

உலகமே பாராட்டிய இந்த முறைக்கு அவரது பெயரையே வைத்து விட்டார்கள். உள்ளூர் தேவாலயத்தில் கீ-போர்டும், செல்லோ இசைக் கருவியும் வாசித்து வந்த லூயிஸ் பிரெய்ல் இசையைக் கூட பிரெய்ல் முறையில் எழுதும் முறையை கண்டுபிடித்தார்.

பிற்காலத்தில் இவர் சிறந்த இசைக்கலைஞராக புகழ்பெற்றார். தனியொருவராக லூயிஸ் பிரெய்ல் செய்த இந்த சாதனைக்கு நாம் எல்லோருமே அவருக்கு கடமைப்பட்டுள்ளோம்.

அல்ஹாஜ் எம்.எப்.எம்.இக்பால் (ஜே.பி)

# அரசு நிமிர்ந்து நிற்க கூட்டமைப்பே காரணம்

## சிறிநேசன் கூறுகிறார்



(குருமன்வெளி)

அரசாங்கத்திடமிருந்து கௌரவமான முறையில் நிதியைப் பெற்று அபிவிருத்திகளை செய்யவேண்டுமே தவிர, தன்மானத்தை காவு கொடுத்துவிட்டு மேற்கொள்ளும் அபிவிருத்திகளுக்கு துணைபோகமாட்டோம் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஞா.சிறிநேசன் தெரிவித்தார்.

கம்பெரலிய திட்டத்தின் கீழ் மட்டக்களப்பு - குருமன்வெளி பகுதியில் புனரமைக்கப்பட்ட வீதி நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

இதில் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றிய சிறிநேசன்மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இன்று அரசாங்கம் நிமிர்ந்து நிற்பதற்கு கூட்டமைப்பே காரணம் எனக் குறிப்பிட்ட சிறிநேசன், அன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சரியாக செயற்பட்டிருக்காவிட்டால் இன்று தேர்தல் காலமாகவே இருந்திருக்குமெனத் தெரிவித்தார்.

அத்தோடு, புலம்பெயர்ந்த உறவுகள் கூறுவதைப் போல கடும்போக்கினை கடைப்பிடிக்க முடியாதென்றும் தெரிவித்தார். காரணம், மீண்டும் வன்முறைகள் உருவாகுமானால் அதனை தாங்கும் சக்தி தமிழ் மக்களிடம் இல்லையெனவும் சுட்டிக்காட்டினார்.

இந்நிலையில், இருக்கின்ற ஜனநாயக பெரும்பான்மை பலத்தை வைத்துக் கொண்டு சாணக்கியமான பாதையில் சென்று, உரிமைகளை பெறவேண்டிய நிலையில் உள்ளோம் எனவும் தெரிவித்தார்.

குறிப்பாக கடந்த கால அரசியல் சூழ்நிலையின் போது கூட்டமைப்பை நடுநிலை வகிக்குமாறு சிலர் கூறியதாகவும், அவ்வாறு செய்திருந்தால் இன்று மகிந்த ராஜபக்ஷ ஆட்சியமைத்திருப்பார் என்றும் தெரிவித்தார்.

யார் வெல்லவேண்டும் என்பதைவிட யார் தோற்கடிக்கப்படவேண்டும் என்பதில் தமிழ் மக்கள் இம்முறை கவனமாக உள்ளனர் என்றும், அந்தவகையில் கடந்த 2005ஆம் ஆண்டு வாக்களிக்காமல் விட்ட தவறை மீண்டும் செய்யாமல் சரியான தீர்மானங்களை மக்களுடன் இணைந்து கூட்டமைப்பு எடுக்குமென சிறிநேசன் மேலும் தெரிவித்தார். (இ-7)

# ஒஸ்லோ பிரதி மேயரான இலங்கைத்தமிழ் பெண் ஜனாதிபதியுடன் சந்திப்பு



(கொழும்பு)

ஒஸ்லோ நகரின் பிரதி மேயர் கம்சாயினி குணரத்னம் மற்றும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆகியோருக்கு இடையில் சந்திப்பு ஒன்று இடம்பெற்றுள்ளது.

இந்தச் சந்திப்பு ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று இடம்பெற்றது.

இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள கம்சாயினி குணரத்னம் வடக்கு- கிழக்கு உள்ளிட்ட முக்கிய பகுதிகளுக்கு சென்றிருந்தார்.

இந்நிலையில், தனது விஜயத்தின் ஒரு அங்கமாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை கம்சாயினி குணரத்னம் நேற்று சந்தித்து பேசியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# பாடசாலைகளுக்கு விசேட விடுமுறை

## கல்வி அமைச்சு அறிவிப்பு

(கொழும்பு)

க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை -2018 இன் இரண்டாம் கட்ட விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகளுக்காக மத்திய நிலையங்களாக பயன்படுத்தப்படும் 4 பாடசாலைகள் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை முதல் 17 ஆம் திகதி வரையில் மூடப்படும் என கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

கொழும்பு இசிபதன வித்தியாலயம், மாத்தறை மஹாநாம மகா வித்தியாலயம், குருநாகல் சீ.டபிள்யூ.டபிள்யூ. கன்னாங்கர வித்தியாலயம், கண்டி புனித அந்தோணி பாலிகா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளே இவ்வாறு மூடப்படவுள்ளன.

அத்துடன், மதிப்பீட்டுப் பணிகளுக்காக பயன்படுத்தப்பட்டுள்ள 22 பாடசாலைகள் பகுதியளவில் மூடப்பட்டுக் காணப்படும் எனவும் அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது. (இ-7)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கொடிகாமம் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 180 | 90 | 180 | 150 | 160 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 70 | 60 | 80 |
| பச்சைமிளகாய் | 500 | 500 | 350 | 300 | 400 |
| தக்காளி | 100 | 150 | 100 | 100 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 80 | 50 | 60 | 35 | 40 |
| கோவா | 120 | 160 | 100 | 70 | 100 |
| கரட் | 140 | 200 | 130 | 110 | 120 |
| பூசணி | 30 | 50 | 50 | 35 | 60 |
| புடோல் | 100 | 100 | 80 | 70 | 100 |
| வாழைக்காய் | 80 | 70 | 70 | 55 | 100 |
| சின்ன வெங்காயம் | 100 | 100 | 150 | 110 | 160 |
| பெரிய வெங்காயம் | 100 | 100 | 80 | 70 | 100 |
| பாகற்காய் | 250 | 300 | 200 | 200 | 250 |
| வெண்டிக்காய் | 150 | 100 | 100 | 70 | 120 |
| கருணைக் கிழங்கு | 60 | 50 | 50 | 40 | 80 |
| பயற்றங்காய் | 240 | 300 | 180 | 160 | 200 |
| லீக்ஸ் | 200 | 180 | 170 | 140 | 160 |
| பீற்றூட் | 180 | 100 | 140 | 100 | 160 |
| கறிமிளகாய் | 200 | 250 | 200 | 200 | 300 |
| முருங்கைக்காய் | 1000 | — | — | — | 600 |
| போஞ்சி | 150 | 200 | 140 | 100 | 140 |
| கத்தரிதம்புள்ள | 150 | 80 | 180 | 130 | 160 |
| கீரை – 1பிடி | 50 | 40 | 60 | 30 | 60 |
| தேசிக்காய் | 200 | 300 | 200 | 140 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 50 | 35 | 35 | 20-40 |
| இராசவள்ளி | 180 | 180 | 160 | 160 | 150 |
| வெங்காயப்பூ | 250 | 400 | 280 | — | — |
| முள்ளங்கி | 50 | 70 | 90 | 30 | 120 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 60 | 20 | 50 |
| வல்லாரை | 20 | 45 | 30 | 15 | 30 |
| ஈரப்பலா | 60 | 70 | 60 | 110 | 60 |

# புத்தாண்டுப் பலன்கள் -2019

## உத்தியோக முயற்சி கைகூடும், உன்னத வாழ்க்கை இனி அமையும்!



உறவினர்களை அனுசரித்துச் சென்றால்தான் உள்ளம் மகிழும் வாழ்க்கை அமையும் என்று சொல்லும் துலாம் இராசி வாசகர்களே!

வருடத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் இராசியிலேயே சஞ்சரிக்கின்றார். அவரோடு தொழில் ஸ்தானாதிபதி சந்திரனும் வீற்றிருக்கின்றார். எனவே தொழில் வளர்ச்சியும், தொகை அதிகரிப்பும், மன அமைதியும் கிடைக்கும் ஆண்டாக இந்த ஆண்டு உங்களுக்கு அமையப் போகின்றது. வாக்கு, தனம், குடும்பம் என்று வர்ணிக்கக் கூடிய 2ஆம் இடத்தில் குருபகவான் ஆட்சி செய்வதால் குடும்ப முன்னேற்றம் கூடுதலாக இருக்கும். ஆரோக்கியப் பாதிப்புகள் அகலும். ஆதரவுக்கரம் நீட்டுபவர்களின் எண்ணிக்கை உயரும்.

பதவிக்கு ஆசைப்படாமல் உதவிக்கு ஆசைப்படுபவர்கள் நீங்கள். அனைவரிடமும் அன்பு பாராட்டுவதால் செல்லுமிடங்களில் எல்லாம் உங்களுக்குச் செல்வாக்கு மேலோங்கும். உங்கள் வசீகரத் தோற்றத்தினாலும், சிறந்த பேச்சினாலும் வருபவர்கள் உங்கள் வசமாகிப் போவார்கள். பிடிவாதக் குணம் உங்களுக்கு அதிகமாக இருந்தாலும் பிரியமானவர்களிடம் விட்டுக் கொடுத்துச் செல்வீர்கள்.

**புத்தாண்டின் தொடக்கநிலை**

புத்தாண்டின் தொடக்கத்தில் கிரக நிலைகள் உங்களுக்குச் சாதகமாகவே விளங்குகின்றது. இராசிநாதன் சுக்கிரன் உங்கள் இராசியிலேயே பலம் பெற்றுச் சஞ்சரிக்கின்றார். அவரோடு தொழில் ஸ்தானாதிபதி சந்திரன் வீற்றிருக்கின்றார். தன ஸ்தானத்திலேயே குரு பகவான் உலா வருகின்றார். சகாய ஸ்தானத்தில் சனி, சூரியன், புதன் இருக்கிறார்கள். இதற்கிடையில் குருமங்கல யோகத்தோடு ஆண்டு தொடங்குகின்றது. எனவே முக்கியக் கிரகங்கள் எல்லாம் உங்களுக்கு முன்னேற்றம் தரும் விதத்தில் இருக்கின்றது. இதுவரை சிக்கனத்தைக் கையாண்டவர்கள் இனி செலவிற்கு அஞ்சமாட்டீர்கள். நில புலன்கள் வாங்கும் யோகமும், நிச்சயிக்கப்பட்ட திருமணத்தில் இருந்த தடை அகலும் வாய்ப்பும் வந்து சேரும். பெரிய மனிதர்களின் ஆதரவோடு பிரச்சினைகளில் இருந்து விடுபடுவீர்கள்.

2019 தொடக்கத்தில் விருச்சிக இராசியில் சஞ்சரிக்கும் குருபகவான் உங்கள் இராசிக்கு 6, 8, 10 ஆகிய இடங்களையும் பார்க்கின்றார். எனவே உத்தியோகத்தில் நிம்மதியில்லையே என்று இருப்பவர்களுக்கு இனி நிம்மதி கிடைக்கும். புதிய வேலை தேடுபவர்களுக்கு தகுதிக்கேற்ற பணி அமைவதில் இருந்த தடை அகலும். அரசு உத்தியோகத்திற்காக முயற்சி செய்தவர்களுக்கு அது கைகூடும்.

குருமங்கள யோகம் இருப்பதால் மங்கல காரியங்கள் மனையில் நடைபெறுவதற்கான அறிகுறிகள் தோன்றும். பிள்ளைகளின் கல்யாண வாய்ப்புகளை முன்னிட்டு சீர்வரிசைப் பொருட்களை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள்.

4 இல் கேது இருப்பதால் ஆரோக்கியத் தொல்லைகள் ஏற்பட்டாலும் அதை வெளிக்காட்டிக் கொள்ளமாட்டீர்கள். இருப்பினும் கேது இருக்கும் வீட்டிற்கு அதிபதியான சனி கொஞ்சம் வலிமை இழந்து இருப்பதால், இப்பொழுது சொத்துக்கள் வாங்கும் யோகம் உண்டு. குடும்ப உறுப்பினர்களில் யாருடைய ஜாதகத்தில் செவ்வாய் பலம் நன்றாக இருக்கின்றதோ, அவர்களது பெயரில் இடம் வாங்கினால் தான் அது நிலையாக இருக்கும். இல்லையேல் வாங்கிய வீட்டை விற்கும் சூழ்நிலை கூட உருவாகலாம்.

உங்கள் இராசிக்கு 10இல் ராகு இருப்பதால் சமூகத்தில் உயர்ந்த அந்தஸ்தைப் பெறுவீர்கள். அனுபவமிக்கவர்களின் ஆலோசனைப்படி தொழில் தொடங்கும் வாய்ப்பு கூடும். வீடு மாற்றங்களும், நாடு மாற்றங்களும் தானாகத் தேடிவரும். வரும் மாற்றங்களை யோசித்து ஏற்றுக்கொள்வது நல்லது. பொதுவாக ராகு-கேது பெயர்ச்சிக்கு முன்னதாகவே பிதுரார்ஜித சொத்துக்களில் உங்களுக்கு கிடைக்க வேண்டிய பங்கு கிடைக்கலாம்.

**ராகு-கேது பெயர்ச்சி**

ஆண்டின் தொடக்கத்தில் கடகத்தில் சஞ்சரிக்கும் ராகு, பெப்ரவரி 13ஆம் திகதி மிதுன இராசிக்குச் செல்கின்றார். அதே நேரத்தில் கேது மகர ராசியில் இருந்து தனுசு இராசிக்கு வருகின்றார். குறிப்பாக 9இல் சஞ்சரிக்கும் ராகு பொன், பொருள் குவிய வைப்பார் என்பர். எனவே தேவையான நேரத்தில் தேவையான தொகை வந்து சேரும். தந்தை வழிஉறவில் ஏற்பட்ட விரிசல்களும் அகலும். உற்றார், உறவினர்கள் உதவிக்கரம் நீட்டுவர். பழைய வாகனங்களைக் கொடுத்து விட்டுப் புதிய வாகனம் வாங்கும் முயற்சியில் ஆர்வம் காட்டுவர்.

கேது 3 ஆம் இடத்தில் இப்பொழுது சஞ்சரிக்கப் போகின்றார். 3 ஆம் இடம் ஒரு முக்கியத்துவம் வாய்ந்த இடமாகும். உடன்பிறப்புகளை குறிக்கும் அந்த இடத்தில் கேது வரும்பொழுது கூடப்பிறந்தவர்கள் உங்களுக்கு நன்மை செய்ய முன்வருவர். தொழிலில் நீங்கள் புதிய கூட்டாளிகளைச் சேர்க்க நினைக்கும் பொழுது உடன்பிறப்புகள் உங்களுக்குத் துணையாக இருப்பதோடு பங்குதாரர்களாகவும் வருவர். வியாபாரத்தில் இருந்த மந்த நிலை மாறும். பொதுநலத்தில் இருப்பவர்களுக்கு புதிய பொறுப்புகளும், பதவிகளும் கிடைக்கலாம். கொடுத்த கடன் வசூலாகும்.

கேது, குரு வீட்டில் இருப்பதால் நாணயமும், நம்பிக்கையும் கொண்ட நண்பர்கள் உங்களோடு பழகுவர். வெளிநாட்டிலிருந்து வரும் தகவல் வியக்கும் தகவலாக அமையும். வழக்கு வாபஸ் ஆகலாம். உத்தியோகத்தில் எதிர்பார்த்த சலுகைகளை மேலதிகாரிகள் வழங்குவர்.

**குருப்பெயர்ச்சிக் காலம்**

ஒக்டோபர் 28ஆம் திகதி குருப்பெயர்ச்சி நிகழ இருக்கின்றது. உங்கள் இராசிக்கு 2ஆம் இடத்தில் சஞ்சரித்து வரும் குரு பகவான் 3 ஆம் இடத்திற்கு செல்லப் போகின்றார். 3 ஆம் இடம் என்பது ஒரு முக்கியத்துவம் வாய்ந்த இடமாகும். அந்த இடத்திற்கு குரு வரும் பொழுது உடன்பிறப்புகள் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வர். விலகிச் சென்ற சொந்தங்கள் விரும்பி வந்திணைவர். குருவின் பார்வை உங்கள் இராசிக்கு 7, 9, 11 ஆகிய இடங்களில் பதிவாகின்றது. எனவே களத்திர ஸ்தானம் புனிதமடைகின்றது. கல்யாண வாய்ப்புகள் கைகூடும். வெளிநாட்டு அழைப்புகள் தானாக வந்து சேரலாம். தெய்வீக காரியங்களில் நாட்டம் செலுத்துவீர்கள். பணியாளர்களின் தொல்லை அகலும். தொழில் நடத்துபவர்களுக்கு எதிர்பார்த்ததைக் காட்டிலும் இலாபம் கூடுதலாக வந்து சேரும். புதிய ஒப்பந்தங்கள் கிடைக்கும். போட்டிக்கடைவைத்தோர்விலகுவர்.




**குருவின் அதிசாரமும், வக்கிரமும்**

ஆண்டின் தொடக்கத்தில், மார்ச் 13 ஆம் திகதி விருச்சிகத்தில் குரு அதிசாரமாக தனுசு இராசிக்குச் செல்கின்றார். இதிலேயே வக்கிரமாகவும் உலா வருகின்றார். இக்காலம் உங்களுக்கு இனிய காலமாகவே அமையப் போகிறது. உங்கள் இராசிநாதன் சுக்கிரனுக்கு குரு பகவான் பகை கிரகமாகும்.

எனவே குருவின் அதிசார காலமும், வக்ர காலமும் நன்மை தரும் காலமாகவே அமையும். தொட்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும். தொழில் வளர்ச்சி கூடும். பணத்தட்டுப்பாடுகள் அகலும். பணியில் இருந்த தொய்வு நிலை அகலும். தொலைபேசி வழித் தகவல் அனுகூலம் தரும். நண்பர்களை நம்பி ஒப்படைத்த பொறுப்புகள் நல்லவிதமாகவே முடிவடையும். சொத்துக்கள் வாங்கும் யோகம் கைகூடும். சொந்தபந்தங்கள் பகைமறந்து செயல்படுவர்.

**கவனமுடன் செயற்பட வேண்டிய காலம்**

7.5.2019 முதல் 24.6.2019 வரை சனி, செவ்வாய் பார்வைக் காலமாகும். இக்காலத்தில் மிதுனச் செவ்வாயைத் தனுசு சனி பார்க்கின்றது. இக்காலத்தில் மிகுந்த கவனமுடன் செயற்படுவது நல்லது. தொழிலில் தொல்லைகள் அதிகரிக்கும். பண நெருக்கடி உண்டு. வாங்கல்- கொடுக்கல்களில் ஏமாற்றங்களைச் சந்திக்க நேரிடும். நண்பர்களை நம்பி ஒப்படைத்த பொறுப்புகள் மீண்டும் உங்களிடமே திரும்பி வரலாம். இக்காலத்தில் சான்றோர்கள் மற்றும் ஆன்மிகப் பெரியவர்கள் மற்றும் அனுபவமிக்கவர்களின் ஆலோசனைகளைக் கேட்டு நடப்பது நல்லது.

5.6.2019 முதல் 29.6.2019 வரை ரிஷப சுக்கிரனை விருச்சிக குரு பார்க்கின்றார். இக்காலத்தில் கரைந்த சேமிப்புகளை ஈடுகட்டுவீர்கள். பிள்ளைகளின் எதிர்கால நலன் கருதி எடுத்த முயற்சி வெற்றிபெறும். கல்யாணச் சீர்வரிசைப் பொருட்களை வாங்கும் முயற்சி கைகூடும். தங்கம், வெள்ளி வாங்கி முதலீடு செய்வீர்கள். பயணங்களால் அலைச்சல் ஏற்பட்டாலும் ஆதாயம் கிடைக்கும். வழக்குகள் சாதகமாகும்.

**வளர்ச்சி தரும் வழிபாடு**

வெள்ளிக்கிழமை தோறும் சோமாஸ்கந்தர் வழிபாட்டை மேற்கொள்ளுங்கள். கும்பகோணம் அருகில் உள்ள திருநாகேஸ்வரத்திற்கும், பூம்புகார்அருகில் உள்ள கீழ்ப்பெரும்பள்ளத்திற்கும் சென்று ராகு-கேதுக்களை அனுகூலமான நாளில் வழிபட்டு வந்தால் பிணிகளும் அகலும். பிரச்சினைகளும் தீரும்.

**சனியின் வக்கிர காலம்**

8.5.2019 முதல் 3.9.2019 வரை தனுசு இராசியில் பூராடம் நட்சத்திரக் காலில் சனி வக்கிரம் பெறுகின்றார். உங்கள் இராசிக்கு 4, 5 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சனி பகவான். அவர் வக்கிரம் பெறுவது அவ்வளவு நல்லதல்ல. குடும்பத்தில் உள்ளவர்கள் குணம்மாறி நடக்கலாம். சச்சரவுகள் அதிகரிக்கும். விரயங்கள் கூடும். எந்த ஒரு வேலையையும் ஒரு முறைக்கு இருமுறை செய்யும் சூழல் உருவாகும். நினைத்தது ஒன்று, நடந்தது ஒன்றுமாக இருக்கின்றதே என்று கவலைப்படுவீர்கள்.

**பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்**

துலாம் இராசியில் பிறந்த பெண்களுக்கு இந்தப் புத்தாண்டு ஆபரணச் சேர்க்கை அதிகரிக்கும் ஆண்டாக அமையப் போகின்றது. மேலும் உங்கள் இராசியிலேயே இந்த ஆண்டு பிறப்பதால் மனக்கவலை மாறும். மதிப்பும், மரியாதையும் உயரும். பணப்புழக்கம் அதிகரிக்கும். கணவன்- மனைவிக்குள் பாசமும், நேசமும் கூடும். இல்லறம் இனிமையாக அமையும். தாய்வழி ஆதரவும், உடன்பிறப்புகளின் ஒத்துழைப்பும் நீங்கள் நினைத்தது போலவே நடைபெறும். மங்கல காரியங்கள், சுப நிகழ்ச்சிகள் ராகு-கேது பெயர்ச்சிக்குப் பிறகு சிறப்பாக முடிவடையும். 5 ஆம், 9 ஆம் மிஞ்சும் பலன்தரும் என்பதால், 9 ஆம் இடத்திற்கு ராகு வருவதற்கு முன்னதாகவே பிள்ளைகளின் எதிர்கால முன்னேற்றம் கருதி எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். மேலும் அவர்கள் வெளிநாடு சென்று படிக்க விரும்பினால் அதற்கான ஏற்பாடுகளையும் செய்து கொடுக்க முன்வருவீர்கள். சுபவிரயங்கள் அதிகரிக்கும். பணிபுரியும் பெண்களுக்கு எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும். வாகனம் வாங்கி மகிழும் யோகம் உண்டு. குலதெய்வ வழிபாடும், வராகி வழிபாடும் குடும்ப முன்னேற்றத்தைக் கூடுதலாகும்.

ஜோதிடக் கலாமணி
- சிவல்பூரி சிங்காரம் -

# விவசாயிகளின் பயிர் அழிவுகளுக்கு ஏற்ப நட்டஈடு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்

## கிளிநொச்சியில் அமைச்சர் ஹரிஸ் தெரிவிப்பு





(பரந்தன்)

**வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட விவசாயிகளின் பயிர் அழிவுகளுக்கு அமைய நட்ட ஈடுகள் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். நெல் வயல்கள் முழுமையாக அழிந்திருந்தால் 40 ஆயிரம் ரூபா காப்புறுதி சபையால் வழங்கப்படும். கால் நடைகள் இறந்திருந்தாலும் அதற்கான கொடுப்பனவுகள் வழங்கப்படும் என விவசாயம், கிராமப்புற பொருளாதார அலுவல்கள், கால்நடைகள் மேம்பாடு நீர்ப்பாசனம் மற்றும் மீன்பிடி நீரியல்வள அமைச்சர் எம்.ஹரிஸ் தெரிவித்துள்ளார்.**

அமைச்சர் எம்.ஹரிஸ் கிளிநொச்சிக்கு நேற்று விஜயம் மேற்கொண்டிருந்தார்.

வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட விவசாயம் மற்றும் கால்நடைகள், குளங்கள் உள்ளிட்ட தனது அமைச்சிற்குட்பட்ட விடயங்கள் தொடர்பில் ஆராய்வதற்கே அமைச்சர் எம்.ஹரிஸ் தனது அமைச்சின் செயலாளர் மற்றும் கமநல சேவைகள் திணைக்கள ஆணையாளர் நாயகம், கமநல நல காப்புறுதி சபையின் பணிப்பாளர் நாயகம் உள்ளிட்ட உயரதிகாரிகள் சகிதம் கிளிநொச்சிக்கு விஜயம் மேற்கொண்டிருந்தார்.

கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்ற நிலைமைகளை ஆராயும் கூட்டத்திலும் கலந்துகொண்டார்.

இதன் போது வெள்ள அனர்த்தம் காரணமாக கிளிநொச்சி மாவட்டத்தில் விவசாயம், கால்நடைகள், நீர்ப்பாசனம் போன்ற துறைகளில் ஏற்பட்ட அழிவுகள், அதனால் விவசாயிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் அதிகாரிகளால் அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டது.

இதன் போது கருத்து தெரிவித்த அமைச்சர் வெள்ளம் காரணமாக பாதிக்கப்பட்டவர்களுக்கு விரைவாக நட்ட ஈடுகள் வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். குறிப்பாக நெல் வயல்கள் முழுமையாக அழிந்திருந்தால் நாற்பதாயிரம் ரூபா காப்புறுதி சபையால் வழங்கப்படும். அதற்கான மதிப்பீடுகள் சரியாக மேற்கொள்ளப்படல் வேண்டும்.

அத்தோடு கால்நடைகள் இறந்திருந்தாலும் அதற்கான கொடுப்பனவும் வழங்கப்படும் எனத் தெரிவித்தார்.

முப்பது வருட யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்கள் தற்போது வெள்ளத்தினாலும் பாதிக்கப்பட்டுள்ளனர். எனவே இத் தருணத்தில் அவர்களுக்கு உதவி செய்ய வேண்டியது அனைவரதும் கடமையாகும்.

வெள்ளத்தினால் பாதிப்புக்களுக்கு அதிகம் பொறுப்பு சொல்ல வேண்டியது எங்களுடைய அமைச்சு. எனவே பாதிக்கப்பட்ட குளங்களை புனரமைப்பது குறித்து கவனம்செலுத்தப்படும். அத்தோடு இரண்டு வார காலத்திற்கு பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிகளை கிடைப்பதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும் என்றும் குறிப்பிட்டார்

மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்ற கூட்டத்தினை தொடர்ந்து அமைச்சர் உள்ளடங்கிய குழுவினர் வெள்ளத்தினால் அழிவடைந்த நெல் வயல்களை பார்வையிடுவதற்கு கள விஜயம் ஒன்றை மேற்கொண்டு கிளிநொச்சி பன்னாங்கண்டி மற்றும் முரசுமோட்டை பிரதேசங்களுக்கும் சென்றிருந்தனர்.

இதன்போது வெள்ளத்தினால் அழிவடைந்த நெற்பயிர்களை பார்வையிட்டதுடன், விவசாயிகளுக்கு இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த அமைச்சர், பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு கட்டம் கட்டமாக அவர்களுக்கு அந்த அழிவிற்கான இழப்பீடுகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

குறிப்பாக, வெள்ளம் ஏற்படுவதற்கு முன்னர் எடுக்கப்பட்ட செய்மதிப்படங்களையும் வெள்ளத்தின் போது எடுக்கப்பட்ட செய்மதிப்படங்களையும் வைத்து இந்த நட்ட ஈடுகள் வழங்கப்படுகின்றன.

இந்தபாதிப்புக்கள் தொடர்பான விபரங்களை அமைச்சின் கீழான அதிகாரிகள் மற்றும் உத்தியோகத்தர்கள் நேரடியாகச்சென்று பார்வையிட்டு மதிப்பீடுகளை மேற்கொள்வார்கள், அதன்படி கட்டம் கட்டமாக பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நட்ட ஈடுகள் வழங்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-312-281)




## நீதி மற்றும் சிறைச்சாலைகள் அமைச்சர்

# முல்லைத்தீவு,மாங்குளம் நீதிமன்ற கட்டடத்தொகுதிகளை பார்வையிட்டார்



(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மற்றும் மாங்குளம் பகுதிகளில் புதிதாக அமைக்கப்பட்டுவரும் நீதிமன்ற கட்டட தொகுதிகளை நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் தலதா அத்துகோரள நேற்று முன்தினம் பார்வையிட்டார்.

அன்றைய தினம் காலையில் ஒட்டுசுட்டான் பகுதியில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்தில் வைத்து உதவிகளை வழங்கி வைத்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து முல்லைத்தீவு பகுதியில் அமைக்கப்பட்டுவரும் நீதிமன்ற கட்டடத்தொகுதிக்கு சென்று அங்கு நடைபெறும் வேலைத்திட்டங்களை பார்வையிட்ட அமைச்சர் தொடர்ந்து மாங்குளம் பகுதிக்கு சென்று அந்த பகுதியில் அமைக்கப்பட்டு வரும் நீதிமன்ற கட்டடத் தொகுதியின் வேலைத்திட்டங்களை பார்வையிட்டார். (2-281)

# வடக்கில் 43 ஆயிரத்து 48 ஏக்கர் பயிர்ச்செய்கைகள் வெள்ளத்தினால் அழிவு

## மதிப்பீடுகள் இரு வாரங்களுக்குள் மேற்கொள்ளப்படும்

(கண்டாவளை)

வடக்கில் ஏற்பட்ட வெள்ளம் காரணமாக 43 ஆயிரத்து 48ஏக்கர் வரையான பயிர்ச்செய்கைகள் அழிவடைந்துள்ளதாக கிராமிய பொருளாதார விவசாய மற்றும் கால்நடை கமத்தொழில் நீர்ப்பாசன அமைச்சினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சிக்கு நேற்று விஜயம் செய்த அமைச்சர் மற்றும் அமைச்சின் செயலாளர், அமைச்சரக அதிகாரிகள் வெள்ளப் பாதிப்புக்கள் தொடர்பில் முற்பகல் 10.30 மணியளவில் மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலின் போது முல்லைத்தீவு. கிளிநொச்சி, யாழ்ப்பாணம் போன்ற மாவட்டங்களில் 43 ஆயிரத்து 48 ஏக்கர் பயிர்ச்செய்கைகள் வெள்ளத்தினால் அழிவடைந்துள்ளதாகவும் இதில் சோளச்செய்கை பத்து ஹெக்டேயர், நிலக்கடலை ஆயிரத்து 500 ஏக்கர் என்பனவும் அழிவடைந்திருப்பதாகவும் இது தொடர்பான மதிப்பீடுகள் இரண்டு வாரங்களுக்குள் மேற்கொள்ளமுடியும் என்று தெரிவித்த அமைச்சின் செயலாளர் நாயகம் கிளிநொச்சி மாவட்டத்தில் வெள்ளத்தினால் 28 வரையான குளங்கள் பகுதியளவில் சேதமடைந்துள்ளதுடன், 2018 ஆம் ஆண்டிலே புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்ட பத்து வரையான குளங்களின் புனரமைப்புப் பணிகளும் பாதிக்கப்பட்டுள்ளன.

இவற்றை அபிவிருத்தி செய்வதற்காக 31 மில்லியன் ரூபா நிதிதேவையென மதிப்பிடப்பட்டிருப்பதாகவும் இதே வேளை முல்லைத்தீவு மாவட்டத்தில் ஏழு வரையான குளங்கள் சேதமடைந்திருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-315)

# மன்னார் இ.போ.ச.சாலை முகாமையாளருக்கு இடமாற்றம்?

(மன்னார்)

இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குட்பட்ட வடமாகாண மன்னார் சாலை முகாமையாளர் எஸ்.காண்டீபனுக்கு நேற்று முன்தினம் 4ஆம் திகதி பிற்பகல் 4.30 மணிக்கு கொழும்புத் தலைமை அலுவலகத்துக்கு வருமாறு அழைப்புக் கடிதம் கிடைத்துள்ளதாக மன்னார் இ.போ.ச சாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இவ் விடயம் தொடர்பாக மன்னார் சாலை அதிகாரியைத் தொடர்பு கொண்டு வினவியபோது,

உரிய அதிகாரி இல்லையெனவும் கடந்த 4 ஆம் திகதி பி.ப 4.30 மணிக்கு கடிதம் ஒன்று கிடைத்துள்ளதாகவும் அதில் சாலை முகாமையாளரை கொழும்புத் தலைமை அலுவலகத்துக்கு வருமாறு அழைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

குறித்த சம்பவம் தொடர்பாக வடமாகாண இணைந்த தொழிற்சங்கத் தலைவரிடம் வினவிய போது, தமது போராட்டத்தின் முழு இலக்கும் பிராந்திய முகாமையாளர் தான் என்றும் தமது போராட்டத்தை வைத்து யாரோ ஒரு பிரிவினர் தமது காரியங்களைச் சாதிக்க நினைப்பதாக அவர் மேலும் தெரிவித்தார். (2-10)

# தேசிய உற்பத்தி திறன் போட்டி; முல்லை.மாவட்ட செயலகம் மூன்றாமிடம்

(முல்லைத்தீவு)

தேசிய உற்பத்தி திறன் போட்டியில் முல்லைத்தீவு மாவட்ட செயலகம் மூன்றாம் இடத்தைப் பெற்றுள்ளது.

2016/2017ஆம் ஆண்டுக்கான தேசிய உற்பத்தி திறன் போட்டியில் முல்லைத்தீவு மாவட்ட செயலகம் மூன்றாம் இடத்தினை பெற்றுக் கொண்டுள்ளதோடு புதுக்குடியிருப்பு பிரதேச செயலகம், கரைதுறைப்பற்று பிரதேச செயலகம் என்பனவும் மூன்றாம் இடத்தை பெற்றுள்ளன. (2)

# மாணவர்களுக்கு பாதணி பரிசுப்படிவம் விநியோகம்

(குருமன்காடு)

வவுனியா தெற்கு வலயத்திற்கு உட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கான பாதணி வழங்குவதற்கான பரிசுப் படிவம் பாடசாலைகள் ஊடாக வழங்கப்பட்டு வருகின்றன.

இலவசக் கல்வித் திட்டத்தை சிறப்பாக முன்னெடுக்கும் பொருட்டு அரசாங்கத்தால் இலவச பாடநூல், இலவச சீருடை விநியோகம் என்பவற்றைத் தொடர்ந்து இலவச பாதணி வழங்குவதற்கான பரிசுப் படிவம் வழங்கப்பட்டு வருகின்றது.

அதற்கமைவாக வவுனியா தெற்கு வலயப் பாடசாலைகளில் மாணவர்களுக்கான பாதணி பரிசுப் படிவம் தற்போது வழங்கப்பட்டு வருகின்றது.

1400 ரூபாய் மற்றும் 1500 ரூபாய் பெறுமதியில் இப் பரிசுப் படிவம் மாணவர்களின் வகுப்புக்கு ஏற்ற வகையில் வழங்கப்பட்டு வருகின்றது. (2-250)

அகப்பை பிடிப்பவன் நம்மவனானால் அடிப்பந்தி என்ன? நுனிப் பந்தி என்ன?

– தமிழ்ப் பழமொழி

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# அடுத்த கட்டம் என்னவென்று கூடி ஆராய வேண்டாமோ!

நாட்டின் அனைத்து மாகாணங்களினதும் ஆளுநர்கள் தமது பதவிகளை இராஜினாமாச் செய்ய வேண்டும் என்ற ஜனாதிபதியின் உத்தரவை அடுத்து ஆளுநர்கள் தமது பதவி விலகல் கடிதங்களை ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்தனர்.

இப்போது ஆளுநர்களை நியமிக்கும் நடவடிக்கை நடந்தாகிறது. கிழக்கு மாகாணத்துக்கு முஸ்லிம் இனத்தைச் சேர்ந்த ஒருவரை ஆளுநராக ஜனாதிபதி நியமித்துள்ளார்.

வட மாகாணத்துக்கு இன்னமும் புதிய ஆளுநர் நியமிக்கப்படவில்லை. தமிழர் ஒருவரை ஆளுநராக நியமிக்க வேண்டும் என்ற கோரிக்கை தமிழர் பக்கத்திலிருந்து வலுவாக எழவும் இல்லை.

இருந்தும் ஒரு சிலர், தமிழர் ஒருவரை ஆளுநராக நியமிக்கலாம்தானே என்று தத்தம் கருத்துக்களை முன்வைக்கின்றனர்.

அதேநேரம் வடக்கின் ஆளுநராக இருந்த றெஜினோல்ட் கூரேயை மீண்டும் ஆளுநராக நியமியுங்கள் என்ற கோரிக்கை கிளிநொச்சியில் எழுந்துள்ளது. இது தொடர்பில் கவனயீர்ப்புப் போராட்டமும் நடந்துள்ளது.

கிழக்கில் முஸ்லிம் ஒருவர் ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ளார். வடக்கில் சிங்களவர் ஒருவரையே ஆளுநராக ஜனாதிபதி நியமிப்பார் என்பதிலும் மாற்றுக் கருத்திருக்க முடியாது.

எனினும் வடக்குக்கு இதுவரை ஆளுநரை நியமிக்காத வகையில் தமிழர் ஒருவரை ஆளுநராக நியமியுங்கள் என்ற கோரிக்கைகள் எதுவும் தமிழ் அரசியல் தரப்புகளால் விடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை.

அல்லது வடக்குக்கு தமிழர் ஒருவரையே ஆளுநராக நியமிக்க வேண்டும் என்ற கவனயீர்ப்புகள் நடந்ததாகவும் பதிவு இல்லை.

ஐயா! தமிழர் ஒருவரை ஆளுநராக நியமித்தால் தமிழ்க் கட்சிகள் தொடர்பில் அண்டல் போடுவது கடினமாகிவிடும் என்பதுடன் தமிழ் அரசியல் கட்சிகளினால் உள்ளார்ந்தங்களை பகிர்ந்து கொண்டு சொந்த இலாபம் ஈட்ட முடியாமலும் போகும்.

எனவே சிங்களவர் ஒருவர் ஆளுநராக வந்தால் தமிழ் அரசியல் கட்சிகள் தொடர்பில் அல்லது தமிழ் அமைப்புகள் தொடர்பில் தகவல் கொடுத்து நல்ல பெயர் எடுத்து தங்கள் அலுவல்களை நிறைவேற்றிக் கொள்ளலாம் அல்லவா!

ஆகையால்தான் சில தமிழ் அரசியல் கட்சிகள் தமிழர் ஒருவரை ஆளுநராக நியமியுங்கள் என்று கேட்கவில்லை எனலாம்.

சரி எம் தமிழினம் தொடர்பில் ஏகப்பட்டகுறைபாடுகள் இருக்கின்றன. அவை களையப்பட வேண்டும் என்ற உண்மைகளுக்கு அப்பால்,

புதிய அரசியலமைப்புச் சீர்திருத்தம் நடைமுறைக்கு வராமல் பொதுத் தேர்தல் ஒன்று வருமாக இருந்தால் தமிழ் மக்களின் எதிர்காலம் என்னவாகும் என்பது பற்றியும் நாம் சிந்தித்தாக வேண்டும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பார்த்துக் கொள்ளும் என்றிருந்தாலோ அல்லது நாங்கள் பார்த்துக் கொள்வோம் மற்றவர்கள் தலையிடத் தேவையில்லை என்று கூட்டமைப்பு நினைத்தாலோ இரண்டும் தமிழ் மக்களுக்கே பாதகமாக அமையும்.

ஆகையால் புதிய அரசியலமைப்பு அரங்கேறாமல் போனால் தமிழ் மக்களின் அடுத்த கட்ட நடவடிக்கை என்னவாக இருக்க வேண்டும் என்பதைத் தீர்மானிப்பது தொடர்பில், அனைத்துத் தமிழ்க் கட்சிகளும் ஒன்றுகூடி ஆராய வேண்டும்.

இல்லையேல் தமிழினம் சதா அழுவது தான் தலைவிதி என்றாகிவிடும்.

# ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை குறைத்து மதிப்பிட வேண்டாம்

## தயாசிறி ஜெயசேகர

(கொழும்பு)

தமது கட்சியின் பலத்தை அறியாத நிலையில் ஒருபோதும் செயற்படக் கூடாது என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான தயாசிறி ஜெயசேகர தெரிவித்துள்ளார்.

கட்சியை கட்டியெழுப்பும் நடவடிக்கையில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன ஒரு தடையல்ல எனவும் அவர் தெரிவித்தார்.

தனது கட்சி தவறிய இடங்களை இனங்கண்டு அவற்றை சரிசெய்வதற்கு திட்டமிட்டுள்ளதாகவும் தயாசிறி ஜெயசேகர மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். (இ-7)

# திருவாசக முற்றோதல்

(புலோலி)

புலோலி அருள்மிகு வில்லிபாதி முருகன் ஆலயத்தில் இன்று காலை 8 மணியளவில் திருவாசக முற்றோதல் ஆரம்பமாகி தொடர்ந்து நடைபெறும். (ம)

# மணிவிழா

(மல்லாவி)

துணுக்காய் பிரதேச செயலாளர் பிரிவின் கீழ் மணிவிழாக் காணும் நிர்வாக கிராம அலுவலர் சிற்றம்பலம் சண்முகநாதனின் 35 ஆண்டுகள் கிராம அலுவலர் சேவையைப் பாராட்டும் சேவைநலன் பாராட்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு மு/மல்லாவி மத்திய கல்லூரியின் பிரதான மண்டபத்தில் இடம் பெறவுள்ளது. (ம-3)

# ஊடகங்கள் விமர்சனத்தைக் கைவிட்டால் விளம்பரம் வழங்குவோம் – சுஜீவ சேனசிங்க

(கொழும்பு)

அரசாங்கத்தை விமர்சிக்கும் போக்கை கைவிட்டால் ஊடகங்களுக்கு அரச விளம்பரங்களை வழங்குவதில் எந்தவித சிக்கலும் கிடையாது என இராஜாங்க அமைச்சர் சுஜீவ சேனசிங்க தெரிவித்தார்.

சில ஊடகங்களுக்கு அரச விளம்பரங்களை வழங்காதிருக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாக கூறப்படும் விடயம் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையில் அவர் மேற்கண்டவாறு தெரிவிததார்.

தன்னைக் கண்மூடித்தனமாக பேசும் ஒருவருக்கு உதவ யாரும் முன்வருவதில்லை. இதேபோன்றுதான் அரசாங்கத்தை விமர்சனம் செய்யும் ஊடகங்களுக்கு எவ்வாறு அரசாங்கம் விளம்பரங்களை வழங்கும் எனவும் அவர் கேள்வி எழுப்பினார். (இ-7)

# தேர்தல் வருவதனால் பொருட்களின் விலைகளை அரசாங்கம் குறைக்கும்

## மகிந்த ராஜபக்ஷ தெரிவிப்பு

தேர்தல் வருவதனால் வரவு-செலவுத் திட்டத்தில் பொருட்களின் விலைகளை அரசாங்கம் குறைக்கும் என்று எதிர்க கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

கொட்டியாக்கும்புர பிரதேசத்தில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டதன் பின்னர் செய்தியாளர்களைச் சந்தித்துப் பேசிய அவர்,

நாட்டில் அடுத்தடுத்து பல தேர்தல்கள் வரவுள்ளன. இதனால் இந்த ஆண்டிற்கான வரவு-செலவுத்திட்டத்தில் பல பொருட்களின் விலைகள் குறையும். ஆனால், தேர்தல்கள் முடிந்த பின்னர் மீண்டும பொருட்களின் விலை ஏறும்.

நாட்டு மக்களின் மீது பல சுமைகளை ஏற்படுத்தும் வகையில் இந்த அரசாங்கம் செயற்படும் என்றும் எச்சரித்தார்.

இதேவேளை, ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் தாமதமாகியுள்ள ஏனைய தேர்தல்களை நடத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார். (ம-3)

## வாழவேண்டும் இப்படி...

- "மூட்டைப் பூச்சியைப் போல்" அடுத்தவர் களைத் துன்புறுத்தி வாழக்கூடாது.
- எலியைப்போல் "பிறருடைய பொருட்களை திருடி உண்ணக்கூடாது.
- கரையான்களைப்போல்" மற்றவர்களின் பொருட்களைச் சேதப்படுத்த கூடாது ஆனால் எறும்புகளைப் போல தேனீக்களை போல தானாக உழைத்து உண்மையாக வாழ வேண்டும்.
- "வண்ணத்துப் பூச்சிகளைப் போல" மரண த்தை கண்டு அஞ்சாமல் மகிழ்ச்சியாய் இருக்க வேண்டும்.
- "கறவை மாடுகளைப் போல" பிறருக்குக் கொடுத்து உதவும் எண்ணங்கள் வளர்த்திட வேண்டும்.
- நாய்களைப் உண்மையான விசுவாசமும் பாதுகாக்கும். தன்மையும் எப்போதும் இருந்திடல்.
- "அன்னம் போல" தீயதை விலக்கி நல்ல தையே கருத்தில் கொள்ள வேண்டும்.

# 154 பாலைமர தீராந்திகளுடன் உழவு இயந்திரம் கைப்பற்று

## சாரதி கைது

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பொலிஸ பிரிவுக்குட்பட்ட வள்ளிபுனம் இடைக்கட்டு பகுதியில் 154 பாலை மரத் தீராந்திகளுடன் நின்ற உழவு இயந்திர சாரதியை கைது செய்த புதுக்குடியிருபபு பொலிஸார்உழவு இயநதிரம் மற்றும் தீராந்திகளையும் கைப்பற்றியுள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பொலிஸ பிரிவுக்குட்பட்ட வள்ளிபுனம் இடைக்கட்டு பகுதியில் மரம் கடத்தப்படுவதாக பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவலை அடுத்து புதுக்குடியிருப்பு பொலிஸ்நிலைய கடமை நேர பொலிஸ் பொறுப்பதிகாரி எஸ்.கே.பண்டார உள்ளிட்ட குழுவினர் மேற்கொண்ட நடவடிக்கையில் பாலை மரத்தீராந்திகளுடன் நின்ற உழவு இயந்திர சாரதியை கைது செய்ததோடு உழவு இயந்திரம் ஒன்றையும் தீராந்திகளையும் கைப்பறியுள்ளனர்.

இது தொடர்பில் மேலதிக விசாரணையை நடத்தி வரும் பொலிஸார் பொருட்களை 7ஆம் திகதி நீதிமன்றில் பாரப்படுத்தவுள்ளதாகவும் அன்றைய தினம் பிரஸ்தாப நபரையும் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் தெரிவித்தனர். (2-281)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை திங்கட்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணி வரை மணிவரை மன்னார் பிரதேசத்தில நானாட்டான் பிரதேசம், முருங்கன் பிட்டியிலிருந்து செம்மண்தீவு வரை, செம்மண்தீவு **Ware House**, டொன் பொஸ்கோ, முருங்கனிலிருந்து சிலாவத்துறை வரை, முள்ளிக்குளம், அரிப்பு, சிலாவத்துறை கடற்படை முகாம், முள்ளிக்குளம் கடற்படை முகாம் ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும். (9)

# இயேசுநாதரின் திருவாக்கியங்கள்



- உன் வாழ்நாள் பூராவும் நீ காதலிக்கும் மனைவியுடன் ஆனந்தமாக வாழ்.
- கணவர்களே! மனைவி பலவீனமான பாத்திரமாய் இருப்பதினாலே அவர்களுக்கு மதிப்புக் கொடுத்து அறிவிற்கேற்ப அவர்களுடன் கூடி வாழுங்கள்.
- மனைவிமார் மனநிறைவு உடையவர்களாயும், புறம் கூறாதவர்களாயும், ஆசை அடக்கம் கொண்டவர்களாயும் எல்லா விடயங்களிலும் விசுவாசமுள்ளவர்களாயும் இருப்பார்களாக.
- சண்டைக்காரியோடு விசாலமான வீட்டில் வசிப்பதை விட வீட்டுக் கூரையின் ஒரு மூலையிலே குடியிருப்பது மேல்.
- முட்டாளை உரலில் இட்டு உலக்கையால் நொய்யோடு சேர்த்து இடித்தாலும் அவனது முட்டாள்தனம் நீங்கிவிடாது.
- குதிரைக்குச் சவுக்கு, கழுதைக்கு கடிவாளம், மூடனின் முதுகுக்குப் பிரம்பு.
- ஒன்றின் ஆரம்பத்தைவிட அதன் முடிவு சிறந்தது. உயிர்ப்பில் மமதையை விட உயிர்ப்பில் பொறுமை சிறந்தது.
- உன்னை உயர்த்திக் கொள்வதில் ஏதாவது நீ முடத்தனமாகச் செய்திருந்தால் அல்லது தீங்கைப் பற்றி எண்ணமிட்டிருந்தால் உன் வாயை மூடிக் கொண்டிரு.

# வருத்தப்படாத வாலிபர் சங்கத்தின் தைத்திருநாள் கொண்டாட்டங்கள்

இளவாலை வருத்தபபடாத வாலிபர் சங்கத்தினால் ஆண்டுதோறும் கொண்டாடப்பட்டுவரும் தமிழர் திருநாளான "பொங்கல் விழா" இம்முறை இன்னும் இன்னும் பிரமாண்டமாய் கொண்டாட .ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

பொங்கல் தினத்தை சிறப்பிக்க எதிர்வரும். 12ஆம் திகதி முதல் யாழ்.மாவட்ட ரீதியில் தலைசிறந்த 16 அணிகள் மோதும் யாழ். மாவட்ட தாச்சி சங்கத்தின் அனுசரணையுடனான தாச்சிப்போட்டிகள் ஆரம்பமாக உள்ளதுடன், 13ஆம் திகதி இரவு மின்னொளியில் இறுதி ஆட்டம் இடம்பெறவுள்ளது!

ம்ரதனோட்டப் போட்டி எதிர்வரும் 13 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணிக்கும், பட்டமேற்றுப்போட்டி பொங்கல் தினதன்று காலை 8.30 மணி முதல் இடம்பெறவுள்ளதுடன் சறுக்குமரம் ஏறுதல், கயிறுழுத்தல் தலையணைச்சண்டை, கிடுகுபின்னல் சிறார்களுக்கான போட்டிகள் மற்றும் ஏனைய பொங்கல் விழா போட்டிகள், கலைகலாசார நிகழ்வு,நேத்திரம் சஞ்சிகை வெளியீடு, அதிர்ஷ்ட இலாப சீட்டிழுப்பு என்பன பிற்பகல 1.00 மணிவரை வாலிபத் திடலில் நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. (க)

## அரையிறுதிக்குள் நுழைந்த யங்ஹென்றிஸ் மற்றும் சென்.மேரிஸ்

வடமாகாண உடற்கல்வி டிப்ளோமா ஆசிரியர் சங்கத்தின் ஏற்பாட்டில் அழைக்கப்பட்ட 12 கால்பந்தாட்ட அணிகளுக்கிடையில் அணிக்கு 7 பேர் கொண்ட கால் பந்தாட்ச் சுற்றுப்போட்டி யானது உரும் பிராய் இந்துக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.

இந்தச் சுற்றுப்போட்டியில் 12 அணிகள் பங்குபற்றின. அணிகள் 4 பிரிவுகளாகப் பிரிக்கப்பட்ட முதற்சுற்று ஆடடங்கள் லீக் முறையில் நடைபெற்றன. ஒவ்வொரு பிரிவிலும் முதல் இரண்டு இடங்களைப் பெற்ற அணிகள் காலிறுதிக்கு தகுதி பெற்றன.

அந்தவகையில் ஊரெழு றோயல், நாவாந்துறை சென்.மேரிஸ், குப்பிளான் குறிஞ்சிக்குமரன், மயிலங்காடு ஞானமுருகன், இளவாலை சென்.லூட்ஸ், தெல்லிப்பழை நாமகள், கிளிநொச்சி உருத்திரபுரம், இளவாலை யங்ஹென்றிஸ் அணிகள் தகுதி பெற்றன.

இதில் மூன்றாவது காலிறுதியாட்டம் 4 ஆம் திகதி நடைபெற்றது. இதில் நாவாந்துறை சென்.மேரிஸ் அணியை எதிர்த்து குப்பிளான் குறிஞ்சிக்குமரன் அணி மோதியது. மேரிஸ் அணி, 02:01 என்ற கோல்கள் கணக்கில் வெற்றி பெற்றது. மேரிஸ் சார்பாக ஜக்சன், மதி ஆகியோர் தலா ஒரு கோலையும், குப்பிளான் சார்பாக ரிதுசன் ஒரு கோலையும் அடித்தனர்.

நான்காவது காலிறுதியாட்டத்தில் இளவாலை யங்ஹென்றிஸ் அணியை எதிர்த்து இளவாலை சென். லூட்ஸ் அணி மோதியது.

இதில் யங்ஹென்றிஸ் அணி, 04:02 என்ற கோல்கள் கணக்கில் வென்றது. யங் ஹென்றிஸ் சார்பாக தனேஸ் 2 கோல்களையும் மகிபன் மற்றும் மகிந்தன் ஆகியோர் தலா ஒரு கோலையும் அடித்ததுடன். சென். லூட்ஸ் அணி சார்பாக அடிக்கப்பட்ட இரண்டு கோல்களை தமிழ் மற்றும் அஜித் ஆகியோர் அடித்தனர். (க-26)

# மாமனிதர் குமார் பொன்னம்பலத்தின் நினைவு தினமும் மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியும்





மாமனிதர் குமார் பொன்னம்பலத்தின் 19 ஆம் ஆண்டு நினைவு தினமும் மென்பந்து கிரிக்கெட் சுற்றுப போட்டியும் நேற்று வவுனியா கனகராயன்குளம் பொது விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.

தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் விளையாட்டுத்துறையின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந் நிகழ்வில் ஈகச்சுடரினை தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் செயலாளர் செல்வராசா கஜேந்திரன் ஏற்றி வைக்க, தேசிய அமைப்பாளர் மணிவண்ணன் குமார் பொன்னம்பலத்தின் திருவுருவப் படத்திற்கு மலர் மாலையை அணிவித்தார்.

இதனையடுத்து நிகழ்வில் கலந்து கொண்டவர்கள் மற்றும் கிரிக்கெட் போட்டியில் பங்கேற்கும் விளையாட்டுக்கழகங்களின் வீரர்கள் அன்னாருக்கு மலர் அஞ்சலி செலுத்தியிருந்தனர்.

இதனைத் தொடர்ந்து குமார் பொன்னம்பலம் ஞாபகர்த்த மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டி நடைபெற்றது. (க-250)



பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதனின் பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டில் இருந்து கீரிமலை கூவில் பிரதேசத்தின் கிளானை சிவானந்த விளையாட்டு கழகத்திற்கு ஒலிபெருக்கி சாதனம் கடந்த வெள்ளிக்கிழமை தெல்லிப்பழை பிரதேச செயலகத்தில் வைத்து.வலிகாமம் இணைப்பாளர் திருஞானசீலன் மற்றும் வலி.வடக்கு பிரதேச சபை உறுப்பினர் ஆதவன் ஆகியோரினால் கையளிக்கப்பட்டது. (க-30)


பேராதனைப் பல்கலைக்கழகத்தின் (வெளிவாரி) 2017ஆம் ஆண்டுக்கான 06.06.2018இல் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் கலைமாணிப் பட்டம் பெற்ற புதிய உயர் கல்லூரி மாணவர்களை

பாராட்டி வாழ்த்துகின்றோம்




(6957)

வாழ்த்துவோர் - புதிய உயர் கல்லூரிச் சமூகம், யாழ்ப்பாணம்

## 359 ரூபாயால்...

கரிக்க வேண்டும் என கோரிக்கை விடுக்க ப்பட்டுள்ளது.

ஒவ்வொரு 2 மாதங்களுக்கும் ஒருமுறை மேற்கொள்ளும் விலை மறுசீரமைப்பிற்கு ஏற்ப இந்த வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ள தாகவும் கூறப்படுகின்றது. இருப்பினும், இந்த வேண்டுகோளுக்கு நுகர்வோர் அதிகார சபை இதுவரையில் அனுமதி வழங்கவில் லையெனவும் குறிப்பிடப்படுகின்றது. (ம-3)

## நாடு சீர்குலைந்...

நாட்டில் தற்போது அனைத்து துறைக ளும் சீரழிந்து வருவதாக மக்கள் விடுதலை முன்னணி குற்றம்சாட்டியுள்ளது.

மஹரகமவில் நேற்று இடம்பெற்ற நிகழ் வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய அதன் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திஸாநாயக்க இதனைக் குறி ப்பிட்டுள்ளார். (ம-3)

## ஐ.நா. பிரகடன...

அடைந்துள்ள நிலையில், இன்னமும் இவ் விவகாரம் தொடர்பிலான குற்றவாளிகள் தண்டிக்கப்படவில்லை. இந்நிலையில் இவ் விடயம் தொடர்பில் ஐரோப்பிய ஒன்றியம் வெளியிட்டுள்ள செய்தியிலேயே மேற்கண் டவாறு இலங்கைக்கு ஒத்துழைப்பு வழங்கத் தயாராகவுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.(ம-3)

## மகிந்தவுடன்...

இது தொடர்பில் மேலும் தெரியவருகை யில்,

ராஜபக்ஷ அணியுடன் இரகசிய தொடர்பு களை பேணியதால் கட்சியுடன் முரண்பட் டிருந்த சண்.குகவரதனின் வலதுகரம் சஜீ வானந்தன், அமைச்சர் மனோ கணேசனு டன் 65 கோடி ரூபாய் பேரம் பேசிய குரல் பதிவினை ராஜபக்ச அணியுடன் இரகசிய தொடர்புகளை பேணிவந்ததால், ஜனநாயக மக்கள் முன்னணி தலைமையுடன் முரண் பட்டிருந்த மேல்மாகாணசபை உறுப்பினர் சண்.குகவரதனின், ஆதரவாளர் சஜீவானந் தன், இலஞ்சம் பெற்றுக்கொண்டு மகிந்த ராஜபக்ஷ அரசில் சேரும்படி, அமைச்சர் மனோ கணேசனுடன், அரசியல் நெருக்கடி வேளையான ஒக்டோபர் 31-ம் திகதி, ரூபாய் 65 கோடிக்கு பேரம் பேசிய இந்த ஐந்தேமுக் கால் நிமிட குரல் பதிவினை அமைச்சர் மனோ கணேசன் தலைமையிலான ஜன நாயக மக்கள் முன்னணியின் இளைஞர் அமைப்பான ஜனநாயக இளைஞர் இணை யம் வெளியிட்டுள்ளது.

குறித்த குரல் பதிவில் பேரம் பேசுகின்ற சஜீவானந்தன், ஜனநாயக மக்கள் முன்ன ணியின், இளைஞர் அமைப்பான ஜனநாயக இளைஞர் இணையத்தில் இருந்து பல மாத ங்களுக்கு முன் கட்சி விரோத செயற்பாடுக ளால் வெளியேற்றப்பட்டவராவார்.

குறித்த கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்ட இவர். இன்னமும் சிலகாலம் அமைச்சர் ரவி கருணாநாயக்கவுடன் தொடர்புகளை பேணி வந்துள்ளார். அமைச்சர் மனோ கணேசனை மிக கடுமையாக விமர்சனம் செய்து வந்துள்ளார்.

ஜனநாயக மக்கள் முன்னணியிலிருந்து தற்போது இடை நிறுத்தப்பட்டுள்ள கட்சியின் மேல்மாகாணசபை உறுப்பினர் சண்.குக வரதனின் மிக நெருங்கிய ஆதரவாளர் சஜீ வானந்தன் ஆவார்.

கடந்த திங்கட்கிழமை, அமைச்சர் மனோ கணேசனுக்கு எதிராக, சண். குகவரதன் கொழும்பில் நடத்திய ஊடக மாநாட்டில், சண்.குகவரதனுடன் மேடையில், குரல் பதி வில் பேரம் பேசுகின்ற சஜீவானந்தனுடன் ஒன்றாக அமர்ந்திருந்தார் எனவும் சண். குகவரதன் தலைமையில் இவர்கள் புதிய அரசியல் பயணம் போவதாக ஊடக மாநாட் டில் அறிவித்துள்ளனர்.

சண்.குகவரதனின் வலதுகரமான சஜீ வானந்தன், குரல் பதிவில், "நீண்டகாலமாக ப்ரோசில் இருக்கும் மதில்மேல் பூனை" என்று அமைச்சர் ரவி கருணாநாயக்கவையும் போட்டுக்கொடுத்துள்ளார். அமைச்சர் மனோ கணேசன், நெருக்கடி வேளையில் தன்னுடன் பேசிய ஏனையவர்களை பற்றி சொல்கிறார்.

இந்த குரல் பதிவில், பேசப்பட்ட பல விடய ங்கள் இன்னமும் இருப்பதாகவும், இது குற் றப்புலனாய்வு பொலிசாரிடம் மேலதிக விசார ணைக்காக ஒப்படைக்கப்பட உள்ளதாகவும் ஜனநாயக மக்கள் முன்னணியின் உப தலைவர் சின்னத்தம்பி பாஸ்கரா தெரிவி த்துள்ளார். (ம-3)

## முன்கூட்டியே...

ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

இது தொடர்பாக, மகிந்த ராஜபக்ஷவுடன், ஜனாதிபதி ஏற்கெனவே ஆலோசனை நடத் தியுள்ளதாக அரசியல் வட்டாரங்கள் தகவல் வெளியிட்டதாகவும் அந்தச் செய்தியில் கூற ப்பட்டுள்ளது.

அரசியலமைப்புக்கு அமைய, ஜனாதிப தித் தேர்தலை ஜனாதிபதி மைத்திரிபால சிறி சேன எதிர்வரும் 9ஆம் திகதிக்கு பின்னர் எந்த நேரத்திலும் அறிவிக்க முடியும்.

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் ஆதரவும் ஜனாதிபதிக்கு கிடைக்கும் வாய் ப்பு உள்ளது.

இந்தப் பின்னணியிலேயே ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் பொதுச்செயலரை அவர் மாற்றியுள்ளார் என்றும், மாகாணங்களுக்கு தனது ஆதரவாளர்களை ஆளுநர்களாக நிய மித்துள்ளார் என்றும் கூறப்படுகிறது. (ம-3)

## உண்ணாவிரதத்...

சிவசீலன் என்ற அரசியல் கைதியே நேற்று காலை உண்ணாவிரத போராட்டத்தை ஆர ம்பித்துள்ளார்.

தனது கோரிக்கை கடிதத்தை அநுராத புரம் சிறைச்சாலை பொறுப்பதிகாரி மூலம், சிறைச்சாலை ஆணையாளருக்கு அனுப்பி வைத்துள்ளார்.

நீதிமன்றங்கள் எங்கள் வழக்குகளை இழுத்தடிக்கின்றன. எமது வழக்கு விசாரணை களிற்கு நீதிபதிகள் சமுகமளிப்பதில்லை. எனது வழக்கை முடித்து, குறுகியகால தண் டனைக்கு இணக்கம் தெரிவித்திருந்தேன்.

எனினும், எனது வழக்கு நீண்டகால மாக இழுத்தடிக்கப்பட்டு வருகிறது. எங்கள் வழக்குகளை துரிதப்படுத்தும்படி கேட்டுக் கொள்கிறோம் என அந்த கடிதத்தில் குறிப் பிடப்பட்டுள்ளது.

சிவப்பிரகாசம் சிவசீலன் என்ற அரசியல் கைதியின் தந்தையார் கடந்த சில தினங்க ளின் முன்னர் காலமாகியிருந்தார். அதற்காக சில மணித்தியாலங்கள் விடுமுறை அவரு க்கு வழங்கப்பட்டிருந்தது.

இதேவேளை, அநுராதபுரம் சிறைச்சா லையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல்கைதிகள், கட்சிபேதமின்றி தமிழ் அரசியல் தலைவர்கள் அனைவர் மீதும் சர மாரியான குற்றச்சாட்டுக்களை சுமத்தியுள்ளனர்.

சில மாதங்களின் முன்னர் நாம் உண் ணாவிரத போராட்டத்தை ஆரம்பித்தபோது, எல்லா கட்சியினரும் சிறைச்சாலைக்கு வந்து உண்ணாவிரத போராட்டத்தை கைவிட வைத்தார்கள். அதன்பின்னர் யாருமே எம்மை கணக்கிலெடுக்கவில்லை. அப்போது எமக்கு உத்தரவாதம் தந்த தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் எம்.பிக்களும் சரி, பின்னர் எமது விடயத்தை ஆராய்வதாக சொன்ன அங்கஜன் இராமநாதன், வியாழேந்திரன் தரப்பு என்றாலும் சரி, எமது விடயத்தில் தலையிட்ட மற்றைய எல்லா கட்சிகளுமே எம்மை ஏமாற்றிவிட்டனர்.

இப்பொழுது அவர்கள் யாருமே எமது தொலைபேசி அழைப்பிற்கு பதிலளிப்பதில்லை. வடமாகாணசபை உறுப்பினர் ஒருவர் இங்கு வந்தார். இப்பொழுது எம்முடையதும், குடும் பத்தினரதும் தொலைபேசி இலக்கங்களை டைவேர்ட் செய்து வைத்துள்ளார்.

சட்டமா அதிபர் திணைக்களத்துடன் பேசி எமது வழக்குகளை துரிதப்படுத்துவதாக, இணக்கப்பாட்டின் அடிப்படையில் வழக்கை முடித்து, புனர்வாழ்விற்கு அனுப்ப சட்டமா அதிபர் திணைக்களத்தில் பேசுவதாக சொன்னார். எதுவுமே நடக்கவில்லை என சரமாரியாக குற்றம்சுமத்தியுள்ளனர்.

இதேவேளை, இன்று அல்லது நாளை யில் இருந்து அரசியல்கைதிகளில் இன்னும் சிலர் உண்ணாவிரத போராட்டத்தில் குதிக்க வுள்ளதாகவும் தெரிகிறது. (ம-3-9)

## கூட்டமைப்பின...

கூட்டத்தின் போதே அவர் இவ்வாறு குறிப் பிட்டார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

வெள்ளம் அனர்த்த பாதிப்புக்கள் தொட ர்பில் ஆராய்வதற்காக குறிப்பாக எனது அமைச்சின் கீழ் வருகின்ற விவசாயம், நீர் பாசனம், கமநல சேவைகள், மீன்பிடி போன்ற துறைகளில் ஏற்பட்டுள்ள பாதிப்புக்கள் தொட ர்பில் ஆராய்ந்து பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவும் பொருட்டு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இக் கூட்டத்திற் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது ஆனால் அவர்கள் எவ ரும் கலந்துகொள்ளவில்லை.

பாராளுமன்ற பிரதிக் குழுக்களின் தலை வர் செல்வம் அடைக்கலநாதன் நாட்டில் இல் லாததன் காரணமாக தனது செயலாளரை அனுப்பியிருக்கின்றார். மற்றும் அமைச்சர் றிசாட் பதியூதீன் சுகவீனம் காரணமாக வ்ர வில்லை தனது பிரதேச சபை தவிசாளர் ஒரு வரை அனுப்பியிருக்கின்றார். ஏனைய எவ ரும் கலந்துகொள்ளவில்லை எனவும் அமை ச்சர் பி.ஹரிஸன் தெரிவித்தார். (ம-3)

## தமிழ் அரசியல்...

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு நீண்டகாலமாக தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்யுமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சாந்தி ஸ்ரீஸ்கந்தராஜா, நீதி அமைச்சர் தலதா அத்துக்கோரளவிடம் நேரடியாக கோரிக்கை விடுத்தார்.

எனினும் பாராளுமன்ற உறுப்பினர் சாந்தி ஸ்ரீஸ்கந்தராஜாவின் கோரிக்கை தொடர்பில் எந்தவொரு பதிலையும் வழங் காது அமைச்சர் தலதா அத்துக்கோரள நழு விச்சென்றுள்ளார்.

இலங்கையில் கடந்த வருடம் டிசம்பர் மாதம் 21 ஆம் திகதி தொடக்கம் பெய்த பல த்த மழை காரணமாக ஏற்பட்ட வெள்ளத் தால் வடமாகாண மக்களின் இயல்பு வாழ் க்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தம் காரணமாக 10 ஆயிரத்து 118 குடும்பங்களைச் சேர்ந்த 32 ஆயிரத்து 551 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தநிலையில் முல்லைத்தீவு ஒட்டுசுட் டான் பகுதியில் வெள்ளத்தினால் பாதிக்கப் பட்ட மக்களை, நீதி மற்றும் சிறைச்சாலை கள் மறுசீரமைப்பு அமைச்சர் தலதா அத்துக் கோரள நேற்று நேரில் சென்று பார்வையிட்ட துடன், ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் வெள்ளத் தினால் பாதிக்கப்பட்ட 490 குடும்பங்களுக்கு தேவையான உதவி பொருட்களையும் வழ ங்கி வைத்தார்.

இந்த நிகழ்வில் உரையாற்றிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சாந்தி ஸ்ரீஸ்கந்தராஜா அரசியல் கைதிகளை விடுதலை செய்யுமாறு கோரி க்கை விடுத்தார்.

எனினும் அந்த நிகழ்வில் உரையாற்றிய நீதி அமைச்சர் தலதா அத்துகோரள பாராளு மன்ற உறுப்பினர் சாந்தி ஸ்ரீஸ்கந்தராஜா வின் கோரிக்கை தொடர்பில் எந்தவொரு கரு த்துக்களையும் வெளியிடவில்லை.

இந்நிலையில் நிகழ்வின் நிறைவில் ஊடகவியலாளர்கள் நீதி அமைச்சர் தலதா அத்துகோரளவிடம் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் கேள்வி எழுப்பினார்கள்.

இதற்கு பதிலளித்த அவர் அரசியல் கைதிகளின் விவகாரம் தொடர்பில் பாராளு மன்றத்தில் கதைத்துள்ளேன். அங்கு ஒரு முடிவு எட்டுவதாக பதிலளித்து விட்டு சென் றுள்ளார். (ம-3)

# மாணவிகளுடன் சேஷ்டை; பாடசாலை அதிபர் பொலிஸாரால் கைது

(பனிக்கன்குளம்)

வவுனியாவில் பாடசாலை மாணவியை பாலியல் ரீதியான சேஷ்டை மேற்கொண் டார் என்ற குற்றச்சாட்டில் பாடசாலை அதி பரை நேற்று முன்தினம் மாலை பொலிஸார் கைது செய்தனர்.

வவுனியா நகருக்கு அண்மையில் அமை ந்துள்ள பாடசாலையொன்றின் அதிபர் கட ந்த மாதம் பாடசால்லயில் தரம் 11இல் கல்வி கற்கும் பாடசாலை மாணவிகளிடம் அங்க சேஷ்டைகள் புரிந்துள்ளார்.

இவ் விடயத்தை மாணவிகள் பெற்றோரி டம் கூறியதையடுத்து வலயக் கல்வி பணி மனை, மற்றும் வவுனியா பொலிஸ் நிலைய த்தில் பாதிக்கப்பட்ட மாணவ சமூகம் சார்பாக பெற்றோர்கள் மேற்கொண்ட முறைப்பாட் டினை அடுத்து குறித்த பாடசாலையினு டைய அதிபரை பொலிஸார் நேற்று மாலை கைது செய்து பொலிஸ் தடுப்பு காவலில் வைத்துள்ளனர்.

மேலதிக விசாரணைகளின் பின்னர் அதிபரை வவுனியா மாவட்ட நீதவான் நீதி மன்றத்தில் ஆஜர்படுத்தவுள்ளதாக பொலி ஸார் தெரிவித்தனர். (ம-281)

## இருவெவ்வேறு...

இந்த இரண்டு கொள்ளைச் சம்பவங்கள் தொடர்பாக யாழ்ப்பாணம் பொலிஸ் நிலைய த்தில் முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

பொலிஸ் நிலையத்தில் பதிவு செய்யப்ப ட்ட முறைப்பாடுகளில் இரண்டு கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபட்டவர்கள் ஒரே வகை யான மோட்டார் சைக்கிளில் வந்தவர்கள் என்று முறைப்பாட்டாளர்களால் தகவல் வழ ங்கப்பட்டுள்ளது.

சம்பவங்கள் தொடர்பில் விசாரணை களை ஆரம்பித்துள்ள யாழ்ப்பாணம் பொலி ஸார், சம்பவ இடங்களில் உள்ள கண்கா ணிப்பு கமராக்களின் பதிவுகளை பெற்று விசாரணைகளை முடுக்கிவிட்டுள்ளனர்.

இரண்டு கொள்ளைச் சம்பவங்களில் பெண்களிடமிருந்து சுமார் 5 பவுண் தங்கச் சங்கலிகள் அபகரிக்கப்பட்டுள்ளன என்று முறைப்பாடுகளின் அடிப்படையில் பொலி ஸார் தெரிவித்தனர். (ம-3)

## காணி விடுவிப்...

களை நேற்று சனிக்கிழமை நேரில் சென்று பார்வையிட்ட பின்னர் இடம்பெற்ற ஊடக வியலாளர் சந்திப்பில் அவர் இதனைக் கூறி னார். அவர் அங்கு குறிப்பிடுகையில்,

இராணுவத்தினரிடம் உள்ள காணிகள் கட்டம் கட்டமாக விடுவிக்கப்படுகின்றது. எதிர்காலத்திலும் விடுவிக்கப்படும். இதே வேளை கிளிநொச்சி, மாங்குளம் பகுதியில் பொருளாதார மையம் அமைக்கப்படவுள் ளது என்றும் தெரிவித்தார். (ம-3)

நடமாடும் மிருக வைத்திய சேவை
குரும்பசிட்டி தெல்லிப்பழைக்கு அண்மை யில் மிருக வைத்திய தேவைகளுக்கு.
தொடர்பு Dr.K. கிருபாகரன்
077 973 8802
குரும்பசிட்டி, தெல்லிப்பழை.

**கொவிசெத**
திகதி 2019.01.05
சீட்டிழுப்பு இலக்கம் 1995
ஆங்கில எழுத்து: I
வெல்லப்பட்ட இலக்கங்கள்: 08 14 18 35
தேசிய லொத்தர் சபை

**செவன**
திகதி 2019/01/05
சீட்டிழுப்பு இலக்கம் 150
ஆங்கில எழுத்து: W
வெல்லப்பட்ட இலக்கங்கள்: 07 19 23 57
தேசிய லொத்தர் சபை

**ஜாதிக சம்பத**
சீட்டிழுப்பு திகதி 05-01-2019
சீட்டிழுப்பு இலக்கம் 906
ஆங்கில எழுத்து: T
வெற்றி இலக்கங்கள்: 0 9 3 8 3 0
தேசிய லொத்தர் சபை

**சுபிரி வாசனா**
திகதி 2019/01/05
சீட்டிழுப்பு இலக்கம் 1392
எழுத்து: 19
வெற்றி இலக்கம்: 02 30 39 65 29 40
தேசிய லொத்தர் சபை

## மணமகள் தேவை

குருகுலம், 07.05.1985, ஏழில் செவ்வாய் கேட்டை நட்சத்திரம் கிரகபாவம் 28. வெளிநாடு பிரசாவுரிமை உடைய மணமகனுக்கு, படித்த, அழகு வாய்ந்த மணமகள் தேவை.

தொடர்புகளுக்கு : 077 453 4304

(C-5027)

## பணிப் பெண் தேவை

கொழும்பில் வீட்டுவேலைக்கு 40 - 50 வயதுக்கு இடைப்பட்ட பணிப்பெண் தேவை.

தொடர்புகளுக்கு: 0712215415, 0777364077

## A/L பொருளியல் MCQ - ① ② & ③

முதல் நான்கு அலகுகளுக்குரியது

33 உப அலகுகள் & விடயத் தலைப்புகளில் ஒழுங்குபடுத்தப்பட்டது — 1280 MCQs

2019 A/L புதிய மாதிரி வினாத்தாள் - அமைப்பு, புள்ளித்திட்டம், நோக்கங்கள், வினாவகைகள், பரீட்சை நுட்பங்கள், சிறப்புக் குறிப்புக்கள், வழிகாட்டல் குறிப்புக்கள் அடங்கியது

2015 A/L & 2016 A/L பரீட்சையில் 99 புள்ளிகளும்
2017 A/L & 2018 A/L பரீட்சையில் 100 புள்ளிகளும் — 100/100

பெறவைத்த நூல்களின் ஆசிரியர் - வே.கருணாகரன்

ரூபா 480

* எல்லாப்புகழும் இறைவனுக்கே!

2019 பழைய பாடத்திட்டப் பரீட்சைக்குரிய வினாவிடை & MCQ நூல்களும்

பூபாலசிங்கம் புத்தகசாலை/ அன்னை புத்தகசாலை

## Personal Classes

கோண்டாவில் (ஐயப்பன் கோவில் அருகாமை)

### A/L 2019 Day Class

**வர்த்தகப்பிரிவு**

ஆரம்பம்

07.01.2019 திங்கள் மாலை 5 மணி

| | |
|---|---|
| பொருளியல் | : S. ஜெயக்குமார் |
| கணக்கீடு | : A.T. சுரேன் |
| வணிகக்கல்வி | : T.S ரிஷி |

தொடர்புகளுக்கு: 0777238597

## புதிய பிரிவுகள்

ஆரம்பம் 2019 யூலை பரீட்சைக்கான

**aat (Sri Lanka)**
(AA1, AA2, AA3)

Qualification :- G.C.E. O/L 6 Passes
Medium - Tamil & English

Jaffna College
Undergraduate Dept.
464, Hospital Road, Jaffna.
0212223382 / 0212229149

(C-5028)

## D.C.M

யாழ். நகர் (வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை அருகாமை)

### A/L 2019 Day Class

07.01.2019 (திங்கள்)

**கலைப்பிரிவு**
காலை - 7.00 மணி

**வர்த்தகப்பிரிவு**
மாலை - 2.00மணி

தொ.பே: 077 011 9434

## கண்ணன் திருமணசேவை

### திரு.பே.சந்திரகாயன்

கச்சாய் வீதி, சாவகச்சேரி

பதிவு இல. 0442

தொ.பே.இல. 077 404 6090

எம்பிபிஎஸ் டொக்டர், எஞ்சினியர், கணக்காளர், ஆசிரியர், PR உள்ள வெளிநாட்டு ஆண், பெண் என சகல விதமான குறிப்புகளும் உண்டு.

பதிவுக் கட்டணமாக ஆயிரம் (1000) ரூபாய் பெற்றுக்கொள்ளப்படும்

தொடர்புகளுக்கு :
க.மார்க்கண்டு
கோண்டாவில்.
T.P. No : 076 311 0179

வாசுகி
தபால் கந்தோர் வீதி, சாவகச்சேரி.
T.P. No : 0774525772

(6946)

## DUTCH (Netherlands)

மொழியை இலகுவாக கற்கவும் Embassy இனால் நடாத்தப்படும் விசாவுக்கான பரீட்சையில் சிறப்பாக சித்தியடையவும் நெதர்லாந்து நாட்டிலிருந்து வருகை தந்த ஆசிரியரினால் (Mr.Michael), Audio, Video மற்றும் தமிழ் விளக்கங்களுடன் கற்பிக்கப்படுகிறது.

**Netherland** அரசாங்கத்தினால் **SPONSOR (M.V.V)** வீசா பரீட்சைக்கான புதிய பாடத்திட்டத்திற்கமைய வகுப்புக்கள் நடைபெறுகின்றன. ஏற்கனவே **Netherland** தூதரக பரீட்சையில் சித்தியடையாதவர்களுக்கும், கூடிய கவனம் தேவைப்படுகிறவர்களுக்கும் விஷேட வகுப்புக்களும் மாதிரிப் பரீட்சைகளும் தமிழ் விளக்கத்துடன் உண்டு. தூர இடங்களில் உள்ளவர்களுக்கு **ONLINE** வகுப்பு வசதி உண்டு.

மாணவர்கள் கவனத்திற்கு : இலங்கையில் போலியான ஆசிரியர்கள் இருப்பதாக எமக்கும் Netherland தூதரகத்திற்கும் தகவல் கிடைத்துள்ளது. எனவே உங்களது ஆசிரியரை தெரிவு செய்ய முன் நெதர்லாந்திலிருந்து உங்களை Sponsor செய்பவர் மூலம் நீங்கள் தெரிவு செய்யும் ஆசிரியருடன் Dutch மொழியில் பேசி அவர் உத்தரவாதம் மிக்கவரா? என்பதை உறுதிப்படுத்திய பின்னர் கற்கை நெறியை மேற்கொள்ளுங்கள். இதனால் உங்கள் பணம். நேரத்தை மிச்சப்படுத்தலாம்...

Netherland தூதரகத்தினால் நீண்ட கால நன்மதிப்பை பெற்ற ஒரே International Language Academy

குறிப்பு : எமது கிளை யாழ்ப்பாணத்திலும் வெகுவிரைவாக ஆரம்பிக்கப்படவுள்ளது.

**Dutch Lanka Academy**
Galle Road, Dehiwala (Colombo)
**Tel : 0777251332, 0112718811**

நெதர்லாந்து தூதரக பரீட்சையில் சித்தியடைவதற்கு 100% உத்தரவாதம் அளிக்கப்படும்.
**Condition Apply

(6904)

## யாழ்ப்பாணத்தில் முதன்முறையாக 150 ஸ்டோல்கள் ஒரே நேரத்தில்

வீரசிங்கம் மண்டபம் - யாழ்ப்பாணம்

### 4 நாட்களுக்கு மட்டும்

**2019 ஜனவரி 6ம், 7ம், 8ம், 9ம் திகதிகளில்**
**(ஞாயிறு, திங்கள், செவ்வாய், புதன்)**

நேரம்: மு.ப. 10.00 - பி.ப. 8.00 வரை (பகலுணவு நேர இடைவெளி இல்லை)

இறக்குமதி செய்யப்பட்ட எக்ஸ்குலுசிவ் டிசைனர்

### ஜுவல்லரி விற்பனைத் திருவிழா - 2019

கோல்ட் கவரிங், ஹைதராபாத் பேர்ல்ஸ், ஜெய்பூர் குன்டன், கிறிஸ்டல், அமெரிக்கன் டயமன்ட், கொரியன் ஸ்டோன் ஜுவல்லரிகளை இலங்கை பெண்களும் வாங்கலாம்.

**ரூபாய் 200/- மற்றும் 400/- மட்டுமே**

உண்மையான ஏற்றுமதி பெறுமதி 1500/- முதல் 3000/- ஐ கொண்ட ஜுவல்லரிகளை நாம் உங்களுக்கு தருவது

**ரூபாய் 200/- மற்றும் 400/- மட்டுமே**

இந்த விளம்பரத்தில் அனைத்து டிசைன்களின் பெயர்களையும் குறிப்பிட முடியாத படியால் சிலவற்றை மட்டுமே குறிப்பிட்டுள்ளோம்.

| | | | |
|---|---|---|---|
| ▸▸ கொரியன் ஸ்டோன் ஸ்டட்ஸ் ....... | ரூ.200/- மட்டுமே | ▸▸ கோல்ட் கவரிங் செயின் ....... | ரூ.400/- மட்டுமே |
| ▸▸ கோல்ட் கவரிங் செயின் பென்டட் ....... | ரூ.200/- மட்டுமே | ▸▸ அவுஸ்திரேலியன் டயமன்ட் நெக்லஸ் செட்... | ரூ.400/- மட்டுமே |
| ▸▸ அவுஸ்திரேலியன் டயமன்ட் பிங்கரிங் ....... | ரூ.200/- மட்டுமே | ▸▸ கோல்ட் பிளேட் வலயல் செட் ....... | ரூ.400/- மட்டுமே |
| ▸▸ வெஸ்டன் ஸ்டைல் இயரிங் ....... | ரூ.200/- மட்டுமே | ▸▸ கோல்ட் பிளேட் செயின் ....... | ரூ.400/- மட்டுமே |
| ▸▸ அமெரிக்கன் டயமன்ட் இயரிங் ....... | ரூ.200/- மட்டுமே | ▸▸ சில்வர் பிளேட் கொலுசு ....... | ரூ.400/- மட்டுமே |
| ▸▸ கோல்ட் கவரிங் ஆண்கள் மோதிரம் ....... | ரூ.200/- மட்டுமே | ▸▸ அவுஸ்திரேலியன் டயமன்ட் பிரேஸ்லட்.... | ரூ.400/- மட்டுமே |
| ▸▸ கொரியன் ஸ்டோன் சாரி பின் ....... | ரூ.200/- மட்டுமே | ▸▸ கோல்ட் கவரிங் பெண்கள் & ஆண்களுக்குரிய பிரேஸ்லட்... | ரூ.400/- மட்டுமே |

**விசேட சலுகை : திருமணம் மற்றும் பார்டிகளுக்கான விசேட ஜுவல்லரிகள் ரூ. 600/- முதல் ரூ. 8,000/- வரையான விலைகளில் உள்ளன.**

**இடம் : வீரசிங்கம் மண்டபம், 10/1, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.**

அனுமதி இலவசம் — மொபைல் : 076 5886866

(C-5029)

## வெளிநாட்டு பல்கலைக்கழக நேர்முக அனுமதி

HigherStudy.lk

**வெளிநாட்டு பல்கலைக்கழகங்களில் கல்வி கற்கும் அரிய வாய்ப்பு**

[மலேசியா மற்றும் சீனா]



**O/L அல்லது A/L உடன் Foundation மற்றும் Degree கற்கும் வாய்ப்பு**

O/L & A/L மாணவர்களுக்கான புலமைபரிசில்களுடன் நேர்முகத் தேர்வு

100% இலவச நேர்முக பரீட்சை

இடம் : Jetwing Jaffna (காகில்ஸ் அருகாமை)
காலம் : 12th ஜனவரி 2019 (9.30 am - 1.30 pm)

தொடர்பு : 077 408 3570 — info@higherstudy.lk

(1569)

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 06.01.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

விலை : 30.00

Registered as a Newspaper in Srilanka

வாரமலர்

# வலம்புரி


சங்குநாதம்

Viber 076 636 3378

நாதம் 199

வள்ளுவர் ஆண்டு 2049 06.01.2019 தொலைபேசி : 021 222 3378

# பௌத்தத்திலும் மன மாற்றம்





உங்கள் சங்குநாதத்தில் அரசியல் - அறிவியல் - ஆன்மிகம் - ...

# ஆலடி மாநாடு

**வாத்தியார்** வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர். இறை வணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறை வணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

என்ன கங்காணியார் சோர்மானமாக இருக்கிறியள். விதானையார் விசாரிக்க, அதையேன் கேட்கிறியள். நேற்று முன்தினம் வடபிராந்திய போக்குவரத்துச் சபையின்ர இணைந்த தொழிற்சங்கம் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டதல்லோ. பஸ் இல்லாமல் கால்கடுக்க நடந்ததால உடல் சோர்மானமாகப் போய்ச்சுது. கங்காணியாரின் பதில் ஆலடி மாநாட்டை விழிப்படையச் செய்தது.

**சாத்திரியார்:** வடமாகாணத்தில இருக்கிற ஒரு சில தொழிற்சங்கங்கள் எடுத்ததற்கெல்லாம் பணிப்புறக்கணிப்பில ஈடுபடுவதைத் தான் தங்கட தொழிலாகக் கொண்டிருக்கினம் போல.

**பண்டிதர்:** அதுமட்டுமல்ல மாறி மாறி அறிக்கை விடுகிற வேலையிலும் ஈடுபடுகிற சின்னத்தனம் சில அமைப்புகளில நடக்குது.

**மூப்பர்:** தட்டிக் கேட்க ஆளில்லை எண்டால் தாங்கள் நினைத்தால் எதுவும் செய்வம் எண்ட சண்டித்தனப்போக்குகள் எங்கட இனத்தின்ர எதிர்கால முன்னேற்றத்தையே நிர்மூலமாக்கி விடப்போகுது.

**பண்டிதர்:** அதிகாரிகள் முறைகேடாக நடந்தால் அது தொடர்பில் உரிய இடங்களுக்குத் தெரியப்படுத்த வேணும். இதைவிட்டிட்டு பொதுமக்கள் பாதிக்கப்படக்கூடிய வகையில பணிப்புறக்கணிப்பில ஈடுபடுகிறதை ஒருக்காலும் அனுமதிக்க முடியாது.

**வாத்தியார்:** நீங்கள் இப்படிச் சொல்லுறியள். வடபிராந்திய போக்குவரத்துச் சபையின்ர இணைந்த தொழிற்சங்கம் பணிப்புறக்கணிப்பில ஈடுபட்டதாலதானே அந்த உயர் அதிகாரிக்கு இடமாற்றம் வழங்கி கொழும்புக்கு அழைத்திருக்கினம். பணிப்புறக்கணிப்புச் செய்யாவிட்டால் அது நடக்குமோ?

**விதானையார்:** வாத்தியார் சொல்லுறதிலும் நியாயம் இருக்கத்தான் செய்யுது. பணிப்புறக்கணிப்பில ஈடுபட்டால்தான் நடவடிக்கை எடுப்பம் என்ற மாதிரி உயர்மட்ட நிர்வாகம் செயற்படுவதால தான் பணிப்புறக்கணிப்பில ஈடுபடுகிற சூழ்நிலை ஏற்படுகுது.

**கங்காணியார்:** இது விடயத்தில அரசியல் சூழ்ச்சிகளும் இருப்பதாகத் தகவல்.

**விதானையார்:** என்ன கங்காணியார் சொல்லுறியள்.

**கங்காணியார்:** நீங்கள் பணிப்புறக்கணிப்புச் செய்தால்தான் அந்த அதிகாரியை இடமாற்ற முடியுமெண்டு ஒரு தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர் கொடுத்த ஆலோசனையாலதான் பணிப்புறக்கணிப்பு நடந்ததாகக் கேள்வி.

**சாத்திரியார்:** அட, சங்கதி அப்படியோ.

**வாத்தியார்:** யார் ஆலோசனை குடுத்தாலும் தொழிற்சங்கங்கள் பொறுப்போட நடக்கவேணும். அதிலும் அத்தியாவசிய சேவைகளில எடுத்த எடுப்பில பணிப்புறக்கணிப்புச் செய்யிறதால பொதுமக்கள் தான் பாதிக்கப்படுவினம். எனவே இது விடயத்தில எதிர்காலத்திலேனும் தொழிற்சங்கங்கள் கவனத்தில எடுக்கவேணும் எண்டு ஆலடியில ஒரு தீர்மானம் எடுப்பம்.

(மாநாட்டுத் தலைவர் வாத்தியார் இவ்வாறு அறிவிக்க, அதனை அனைவரும் ஏகமனதாக ஏற்றுக் கொண்டனர்)

**மூப்பர்:** நாங்கள் பணிப்புறக்கணிப்புத் தொடர்பில கதைக்கிறம். ஆனால் சில திணைக்களங்கள் சர்வாதிகாரப் போக்கில நடக்கிறதை ஒருத்தரும் கண்டு கொள்ளுகினம் இல்லை.

மூப்பர் இவ்வாறு கூறியதும் ஆலடியில் சில நிமிடங்கள் மௌனம் நிலவியது. திணைக்களங்களில் சர்வாதிகாரமா? அது எங்கே? என்பதை அறிவதற்காக, மூப்பர் நீங்கள் சொல்லுறது எனக்கு விளங்கல்ல. தெளிவாச் சொல்லுங்க. சாத்திரியார் சதாசிவம் கோரிக்கை விட்டார்.

**மூப்பர்:** சாத்திரியார், யாழ்ப்பாணம் கச்சேரியில இருக்கிற மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்திற்கு நீங்கள் ஒருக்காலும் போகல்லப் போல. அங்க போறது எண்டால் நாலாம் மாடிக்குப் போற பயத்தில தான் சனங்கள் போகினம். அந்தளவுக்கு அதட்டல், ஏச்சு என சர்வாதிகாரம் கோலோச்சுது.

**சாத்திரியார்:** இதென்ன நாசமறுப்பு. மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் பொதுமக்களுக்கு சேவை வழங்குகிற ஒரு திணைக்களம். அங்க எப்படி சர்வாதிகாரம் காட்ட முடியும்.

**மூப்பர்:** சாத்திரியார் நீங்கள் கனடாவில கனகாலம் இருந்ததால உங்களுக்கு இங்க நடக்கிற விடயங்கள் தெரியாமல் இருக்கும். ஆனால் யாழ்ப்பாணக் கச்சேரி வளாகத்தில இயங்குகிற மோட்டார் ரபிக்குக்கு ஒருக்கால் போனால் தெரியும். அங்க கடமையாற்றுகிற செக்குறிட்டிக்காட்டே சினம்கொண்ட இராணுவச் சிப்பாய் மாதிரித்தான் நிற்பார். அங்கபோ, இஞ்சபோ. தப்பித்தவறி யாரேனும் அந்த ஒழுங்கைக்குள்ள மோட்டார் சைக்கிளை நிறுத்தினால் போதும் லைசென்ஸ் பறிப்பன் எண்டு செக்குறிட்டிக் கார்ட் வெருட்டுவாராம். இதைவிட எக்ஸாமினர்மார் இருக்கினம். அவையளின்ர எடுப்புகளை நினைச்சா படையப்பா படம் எந்த மூலைக்கு.

தங்களை யாரும் எதிர்த்தால் லைசென்ஸ் எடுக்க முடியாது எண்ட ஆணவத்தோட அவர்கள் நடந்து கொள்வதாகப் பலரும் சொல்லுகினம்.

**பண்டிதர்:** அப்ப அங்க இருக்கிற அதிகாரிகள் இது பற்றிக் கவனிக்கிறதில்லைப் போல.

**மூப்பர்:** அதிகாரிகள் கவனிக்கிறதோ! யாழ்ப்பாணத்தில இருக்கிற ஒரு சில லேணர்ஸ் உரிமையாளர்கள்தானே அங்க அதிகாரிகள். அவர்கள் தான் அந்தத் திணைக்களத்தை நடத்துகினம்.

**விதானையார்:** இதுபற்றி நானும் கேள்விப்பட்டனான் தான். லேணர்ஸ் உரிமையாளர்கள் எக்ஸாமினர்மாரோட நிற்பினம். அங்க வேலை செய்யிற உத்தியோகத்தர்கள் கூட எக்ஸாமினரிட்டக் கூடப் போகமுடியாது. அது மட்டுமல்ல...

**வாத்தியார்:** என்ன விதானையார் சொல்லுறியள்.

**விதானையார்:** தனிப்பட்ட முறையில யாரேனும் விண்ணப்பம் கொண்டு போய் எக்ஸாமினரிட்ட கையெழுத்து வாங்கப் போனால் அங்க நிற்கிற லேணர்ஸ்காரர் தனிப்பட்ட விண்ணப்பத்தில எக்ஸாமினர் கையெழுத்து வைப்பதைத் தடுத்துப் போடுவாராம். அப்படி அண்மையிலும் ஒரு சம்பவம் நடந்திருக்குது.

**கங்காணியார்:** விதானையாற்ற கதையைக் கேட்க தலையைச் சுத்துது. அது என்ன சம்பவம் விதானையார்.


**விதானையார்:** அண்மையில ஒருவர் தனிப்பட்ட முறையில லைசென்ஸ் புதுப்பிக்கப் போயிருக்கிறார். அந்த விண்ணப்பத்தில எக்ஸாமினர் கையெழுத்திட ஆயத்தமான போது அவரோட நிண்ட அந்த லேணர்ஸ்காரர் இதுக்கு கையெழுத்து வைக்க ஏலாது. சொந்தமாகக் கார் இருந்தால்தான் கையெழுத்து வைக்கலாமெண்டு தடுத்துப் போட்டாராம். அப்ப சம்பந்தப்பட்டவர் கொழும்புக்கு அல்லது லேணர்ஸுக்குத்தான் போக வேண்டியுள்ளது.

**வாத்தியார்:** பார்த்தியளோ அந்தச் சிங்கள எக்ஸாமினர் கையெழுத்து வைக்கத் தயாரான போது எங்கட தமிழன் தடுத்துப்போட்டான் பார்த்தியளோ. இதைத்தான் எங்கட முதலமைச்சர் விக்னேஸ்வரன் ஐயா ஒரு தமிழன் முன்னேறுவதை இன்னொரு தமிழன் விரும்பமாட்டான் என்று சொன்னவர் போல..

**விதானையார்:** இந்த மாதம் 3 ஆம் திகதி அங்க நடந்த பரீட்சையில உரிய நேரம் வழங்கப்படவில்லை எண்டு பெரும் குறை. அதுமட்டுமல்ல பரீட்சைக்கு வந்த ஒரு இளைஞனை கண்டபாட்டில ஏசித் துரத்தினதாகவும் கேள்வி.

**பண்டிதர்:** யாழ்ப்பாணம் மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தில அதிகாரம், அடக்குமுறை, அதட்டல் இல்லாமல் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் பார்த்துக்கொள்ளவேணும். இதைச் செய்யாவிட்டால் அந்தத் திணைக்களத்திற்கு முன்னால ஓர் ஆர்ப்பாட்டம் செய்யிறது பற்றி பாவனையாளர் பாதுகாப்பு அமைப்புக்கள் சிந்திக்க வேணும்.

இவ்வாறு பண்டிதர் கூற, அதனை ஆமோதிப்பது போல ஆலடிப் பிள்ளையார் கோயில் கண்டாமணியும் ஒலிக்க, ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.



## போக்குவரத்து திணைக்களத்தில் சர்வாதிகார ஆட்சி நடக்குதாம்!

ஆதித்தன்

# கூட்டமைப்பின் திட்டம் வெற்றி தருமா?

2019 பெப்ரவரி மாதத்திற்குள் புதிய அரசியலமைப்புச் சீர்திருத்தம் பாராளுமன்றிற்கு வந்துவிடும் என்ற நம்பிக்கையை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெளியிட்டுள்ளது.

இதே கருத்தை மீண்டும் பிரதமராகப் பதவியைப் பொறுப்பேற்றுக்கொண்ட ரணில் விக்கிரமசிங்கவும் தெரிவித்திருந்தார்.

புதிய அரசியலமைப்பு அமுலுக்கு வந்தால், அது தமிழ் மக்களுக்கு முழுமையான தீர்வாக அமையாவிட்டாலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வெற்றி என்ற நினைப்பை தமிழ் மக்களிடம் ஏற்படுத்தவே செய்யும்.

ஆனால் அரசியலமைப்புச் சீர்திருத்தம் இந்த வருடம் பெப்ரவரி மாதத்திற்குள் அல்ல இந்தப் பிறப்பில் வருமா? என்பது தான் இப்போதிருக்கின்ற ஐயம்.

புதிய அரசியலமைப்பை எதிர்ப்பதென முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தரப்பு கங்கணம் கட்டி நிற்கிறது. பிரதமராகப் பதவியேற்று நாட்கணக்கில் அந்தப் பதவியை இராஜினாமாச் செய்து தலைகுனிவைச் சந்தித்த மகிந்த ராஜபக்ஷவுக்கும் அவர் தரப்பிற்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மீது கடும் கோபம் உண்டு.

இதை இன்னமும் இலகுவாகக் கூறுவதாயின் பிரதமராக இருக்கக்கூடிய ரணில் விக்கிரமசிங்கவைவிட, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மீதே மகிந்த அணிக்கு கடும் ஆத்திரம் உள்ளது.

ஆக, கூட்டமைப்புக்கு எதிராகத் தமது செயற்பாடுகளை முன்னெடுக்கவேண்டும் என்பது அவர்களின் நிலைப்பாடாகும். இந்நிலையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் மூலமாக புதிய அரசியலமைப்புச் சீர்திருத்தத்தைக் கொண்டு வந்துவிட வேண்டும் என்ற நினைப்போடு செயற்படுகின்ற கூட்டமைப்பின் எண்ணம் நிறைவேறாமல் போவதற்காக மகிந்த தரப்பு அரசியலமைப்பைக் கடுமையாக எதிர்க்கும் என்பது மேன்முறையீடு அற்ற உண்மை.

இவ்வாறு புதிய அரசியலமைப்பை மகிந்த தரப்பு எதிர்க்கும் போது அது தொடர்பான அவர்களின் பிரசாரம் புனைகதைகளாகப் பரப்பப்படும் என்பதும் ஏற்புடைய உண்மை.

புதிய அரசியலமைப்பு நடைமுறைக்கு வந்தால், அது நாடு பிளவுபடுவதாகவே இருக்கும். அதாவது விடுதலைப்புலிகள் எதை விரும்பினார்களோ அது நடந்தாகும். நாட்டைப் பிளவுபடுத்துவதற்காக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கூட்டமைப்புடன் இணைந்து செயற்படுகின்றார். ரணில் விக்கிரமசிங்க மூலம் நாட்டைப் பிளவுபடுத்துபடுத்துவதற்காகவே அவரைக் கூட்டமைப்பு ஆதரித்தது என்றெல்லாம் கதை விடப்படும். இதனை நம்புகின்ற சிங்கள மக்கள் கணிசமாக இருக்கவே செய்வர்.



அதேநேரம் புதிய அரசியலமைப்புச் சீர்திருத்தம் அவசியமானது; அதனை நடைமுறைப்படுத்தாவிட்டால் இனப்பிரச்சினைக்கான தீர்வை எட்டமுடியாமல் போகும். இந்நிலைமையானது சர்வதேச அழுத்தங்களை இலங்கை மீது ஏற்படுத்தும் எனக் கூறுவதற்கான ஏற்பாடுகள் எதனையும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தரப்போ அல்லது தமிழ்த் தேசியக் கூட்டமைப்போ செய்யப் போவதில்லை. இதன் காரணமாக மகிந்த தரப்பின் பிரசாரம் தென்பகுதியில் மிகப் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தப் போவதும் உறுதி.

இவை ஒருபுறமிருக்க, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மீது கடும் கோபமுற்றிருக்கும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன புதிய அரசியலமைப்புத் தொடர்பில் கொண்டிருக்கக்கூடிய நிலைப்பாடு பாதகமாகவே இருக்கும் என்பதையும் கூறித்தானாக வேண்டும்.

மகிந்த ராஜபக்ஷ தனக்கிருக்கக்கூடிய பெரும்பான்மைப் பலத்தைப் பாராளுமன்றத்தில் நிரூபித்தால் மட்டுமே பிரதமராக இருக்கமுடியும் என்ற கட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை சந்தித்த ஜனாதிபதி மைத்திரி கூட்டமைப்பை நடுநிலை வகிக்குமாறு பல தடவைகள் கேட்டிருந்தார். எனினும் அதனைக் கூட்டமைப்பு அடியோடு நிராகரித்திருந்தது. இவ்வாறு கூட்டமைப்பு நிராகரித்த நிலையில்,

பெரும்பான்மைப் பலத்தை நிரூபிக்க முற்பட்டால் மகிந்த ராஜபக்ஷ தோற்பார் என்பதைப் புரிந்து கொண்ட ஜனாதிபதி மைத்திரி எதுவும் செய்ய முடியாத நிலையில் பாராளு மன்றக் கலைப்பை அறிவிக்கின்றார்.

இந்த நடவடிக்கை தவறான ஆலோசனையின் கீழ் இடம்பெற்றதாயினும் இச்செயற்பாடே ஜனாதிபதி மைத்திரிக்கு மிகப்பெரும் அவகௌரவத்தைக் கொடுத்ததெனலாம்.

நிலைமை இதுவாக இருக்கையில், புதிய அரசியலமைப்பை அமுல்படுத்துகின்ற விடயத்தில் ஜனாதிபதி மைத்திரியும் உடன்பட மாட்டார் என்பது தெட்டத் தெளிவானது.

இந்நிலையில்தான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முயற்சி தோல்வியடைவதாக இருக்கும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசியலமைப்பை அரங்கேற்றாமல் இன்னொரு தேர்தலை எதிர்கொள்வதென்பது முடியாத காரியம்.

அதிலும் தமிழ் மக்களுக்குத் தீர்வு கிடைக்காவிட்டால் அரசியலிலிருந்து ஒதுங்குவேன், எனது பதவி விலகல் குறித்த கடிதத்தில் ஐம்பது வீதமானது எழுதி முடிக்கப்பட்டுவிட்டது என்றெல்லாம் கூறுகின்ற கூட்டமைப்பின் பேச்சாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ. சுமந்திரன்; தேர்தலுக்காக தமிழ்மக்களிடம் வரும்போது அதிகப்படியான கேள்விகளுக்கு விடையளிக்க வேண்டியவராகவும் இருப்பார்.

இவை ஒருபுறமிருக்க, அரசியலமைப்பை நிறைவேற்றுவேன் என்று உறுதியளித்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் ஒற்றையாட்சி என்ற சொற்பதத்தினூடாக அரசியலமைப்பை தள்ளிப்போட முற்படுவதும் தெரிகிறது.

எது எவ்வாறாயினும் ரணில் விக்கிரமசிங்கவுடன் சேர்ந்து வடபகுதியில் சில வேலைத்திட்டங்களை முன்னெடுத்து அதன் மூலம் தமிழ்மக்களை ஆசுவாசப்படுத்தலாம் என்று எதிர்பார்த்திருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் திட்டத்தை தவிடுபொடியாக்கும் வகையில் ஆளுநர்களை மாற்றுகின்ற படலத்தை ஜனாதிபதி மைத்திரி ஆரம்பித்துள்ளார்.


வடக்கில் நியமனம் பெறும் ஆளுநர், ஜனாதிபதி மைத்திரியின் றிமோட்டில் இயங்குவாரேயன்றி பிரதமரை அவர் ஒரு பொருட்டாகக் கருதப்போவதில்லை என்பதும் அந்த வகையில் உரிய ஒருவரை நியமிப்பதற்காகவே வடக்கு ஆளுநரின் தெரிவில் கால அவகாசம் ஆகிறது என்பதும் ஏற்புடைய உண்மை.

ஆக, ஒட்டுமொத்தத்தில் கூட்டமைப்பின் திட்டங்களும் காய்நகர்த்தல்களும் படுதோல்வியில் முடியப் போகின்றதையே சமகால அரசியல் போக்கு காட்டி நிற்கின்றது.

**திருநீலகண்டன்**




# எதையும் ஆராய்ந்து செய்



பாலக்காடு என்னும் ஊரில் நீலகண்டன் என்னும் யானைப்பாகன் வாழ்ந்துவந்தான். இவன் ஞானகி என்னும் பெண்யானையை உயிருக்கு உயிராக வளர்த்து வந்தான். இவனது குடும்பம் யுத்தம் காரணமாக வெளிநாடு சென்றுவிட்டது. அக்குடும்பத்தினர் நீலகண்டனையும் வெளிநாடு வருமாறு வற்புறுத்தினர்.

ஆனால் அவனோ? எப்படி ஞானகியை விட்டு வெளிநாடு செல்வது. எனக்கு பணம் பெரிதல்ல! என் யானை இறந்துவிடும் என்பதால் இவன் யானையை பெரிதாக வளர்த்து தன் யானை மூலம் வருமானம் ஈட்டத்தொடங்கினான்.

யானையை கோயில் தேவைக்கு பயன்படுத்தல், மங்கலகரமான வைபவங்களுக்கு கூட்டிச் செல்லல், யானை மீது சவாரி செய்தல் இவ்வாறு நீலகண்டன் தன் யானையான ஞானகியுடன் மகிழ்வாக வாழ்ந்து கொண்டிருந்தான்.

நீலகண்டனும் எத்தனை நாட்களுக்குத்தான் ஒண்டிக்கட்டையாக இருப்பதுஎன்று அவனும் காதலித்து திருமணம் புரிந்தான். அவர்களின் இல்லறப் பயனாக ஓர் குழந்தை பிறந்தது. ஆனால் அவனது திருமணம் ஊரில் உள்ள வெங்கடேஷ் என்பவனுக்கு பிடிக்கவில்லை.

அத்துடன் வெங்கடேஷிற்கு நீலகண்டனதும் அவனது யானையினதும் புகழ் மிகு வளர்ச்சி மீது எரிச்சல் கொண்டான். நீலகண்டனை கொல்லும் சதியில் ஈடுபட்டான். அப்போது நீலகண்டன் மீது வெங்கடேஷ் துப்பாக்கியால் தாக்க முற்படும் போது யானையான ஞானகியானது நீலகண்டனைக் காப்பாற்ற வேண்டும் என்பதற்காக அவனை மாடியில் இருந்து தள்ளியது. நீலகண்டன் சிறுகாயங்களுடன் தப்பித்துக் கொண்டான்.

ஆனால் வெங்கடேஷ் தன்னைத் தாக்க முற்பட்டதை அறியாத நீலகண்டன் நான் வளர்த்த யானை என்னையே கொல்ல முற்படுகிறது.

கோபம் வந்தால் பாகனைக் கொல்லும் என்பதை ஞானகியைப் பார்த்தாலே தெரிகிறது. இந்தச் சனியனை வளர்த்த நேரம் எருமை மாட்டை வாங்கி வளர்த்து இருக்கலாம் என்று கூறி யானையை உடனே வேறொருவனுக்கு விற்றான் நீலகண்டன்.

ஞானகியோ நீலகண்டன் பிரிவைத் தாங்காது தும்பிக்கையை உயர்த்தி பிளிறியது. பின் சிறிது நாட்கள் கழிந்தன.

அந்த ஊரில் உள்ள பிரபு என்பவன் நடந்த உண்மைகளை நீலகண்டனுக்குக் கூற அவன் தனது அவசர புத்தியையும் தன் யானையின் விஸ்வாசத்தையும் எண்ணிக் கலங்கினான்.

**த.மயூரதன்,**
**இணுவையூர்.**



**பா.மேரிஆன் பிறித்திக்கா, 9ஏ, யா/கனகரட்னம் ம.ம.வித்தியாலயம், SOS சிறுவர் கிராமம், சதயம் இல்லம்.**

# சுத்தம்



கண்ட கண்ட இடத்தில் குப்பை
போடக்கூடாது - நாம்
குப்பைகளினை நிலத்தில்
போடக் கூடாது!

குப்பைத் தொட்டி எதற்கு என்று
மறக்கக் கூடாது - நாம்
எந்த நோயும் அண்ட இடம்
கொடுக்கக் கூடாது

குப்பைகளை பெருக்கி தொட்டியிலே
போட்டிட வேண்டும் - நாம்
சூழல் தூய்மை காப்பதிலே
முந்திட வேண்டும்


சோம்பல் தானே நோய்களுக்கு
முதல் படியாகும் - நமக்கு
சுற்றுப்புறச் சூழல் தானே
அடிப்படையாகும்!

சுத்தம் நமக்கு சுகம் தரும்
நித்தம் எமக்கு பலன் தரும் - நாமும்
நோய் இல்லாமல் நூற்றாண்டுகள்
வாழ்ந்திட வேண்டும்

**பி.கிரிதரன், இணுவில் மேற்கு.**



**எங்க தாத்தா தினமும் கம்பங் கூழ், கேப்பங் கூழ் தான் குடிப்பார். அப்போ தினமும் "கூல் ட்றிங்ஸ்" தான் என்று சொல்லு**







TNA
Tamil National Alliance
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

## என்ன வியாசரே நாடு அமைதியா இருக்குப் போல?

தமிழ் — யாழ்ப்பாணம்

தர்மம் தலைகாக்கும் என்பது எதுவோ?

மழை கொட்டுகிறது. வீதியில் ஒரு குருவிக் குஞ்சு மழையில் நனைந்து நடுங்கியபடி கிடக்கிறது. சற்று நின்று அதை கையில் எடுத்துக் கொண்டு எடுத்து அடி வைக்க கிளை ஒன்று முறிந்து அவர் முன் வீழ்கிறது.

அந்தக் குருவியைக் காப்பாற்றும் எண்ணம் அவரிடம் இருந்திருக்காவிட்டால் அந்தக் கிளை அவர் தலையில் வீழ்ந்திருக்கும். இது தான் தர்மம் தலைகாக்கும் என்பது.

மதி — வதிரி

எமது பண்பாடு, கல்ாசாரம் எப்படி இருக்கிறது?

பன்றியோடு கூடிய கன்றும் மலம் உண்ணும் என்ற பழமொழியை ஒருக்கால் நினைத்துப் பார்ப்போமா.

தென்பகுதியில் இருந்து உயர் படிப்பிற்காக வரும் மாணவர்கள் ஒவ்வொருவரும் தனது ஆண் நண்பர்களை கைகோர்த்து நடப்பது, சைக்கிளில் ஒன்றாகத் திரிவது போன்ற செயற்பாடுகள் எங்கள் சமூகத்தையும் கொஞ்சம் உதைக்கத்தான் பார்க்கிறது.

நடவடிக்கை தேவை. இல்லையேல் அந்த நிலைதான் எம்பிள்ளைகளுக்கும் என்பதை புரிந்துகொள்ள வேண்டும்.

ரேணு — வடமராட்சி

அனைத்துக்கும் முடிவு இருக்கும் என்றால் முடிவில்லாதது எது?

மனித வாழ்வு முடிவில்லாதது தான். மனிதன் பிறக்கும் போது தோன்றும் ஆசை அவன் இறக்கும் போது கூட நிறைவடைவதில்லை.

ஒவ்வொரு நாளும் ஏன் ஒவ்வொரு நிமிடமும் ஏதோ ஒன்றில் ஆசை கொண்டபடியே இருப்பான். அது இறப்பு வரை தொடர்ந்து கொண்டே இருக்கும்.

ஜுபா — கரவெட்டி

புலிகளை கூட்டமைப்பு குறைகூறுகிதே?

சிங்கம் இல்லாக் காட்டுக்கு நரி ராஜா என்றொரு பழமொழி உண்டு தம்பி அதைப் புரிந்து கொண்டால் சரி. இவையின்ர கடந்த காலப் பேச்சுக்களை ஒடுக்க மீள் பிரசுரம் செய்தால் நிலைமை எப்படி இருக்கும் தம்பி. யோசிச்சுப் பாருங்களன். விடுதலைப் புலிகளால் ஆசிர்வதிக்கப்பட்டவர்கள் நாங்கள். எங்களுக்குத் தான் ஏகபோக உரிமை இருக்கு. மற்றவர்கள் எல்லோரும் துரோகிகள் என்று கட்டுப்பாடு போட்டவர்களின்ர சுயரூபம் தெரியுது தானே காணும்.

## ரணில் ஒற்றை ஆட்சியாம் கூட்டமைப்பு சமஷ்டியாம்... ஏதும் விளங்குவதில்லையே?

வேந்து — மானிப்பாய்

என்னங்க எனும் வார்த்தை எப்போது இனிக்கும்?

உன் தொலைபேசி கடவுச் சொல் மனைவிக்குத் தெரியாத வரை.

சுதன் — குப்பிளான்

கூட்டமைப்பு சொல்லும் அரசியல் அமைப்பு வருமா, வராதா?

தம்பி சுதன் மேற்கால சூரியன் உதிக்கும் எண்டு பலரும் சொன்னா நீ நம்பிவிடுவியோடா.

சுயநல அரசியல்வாதிகள் இப்படித்தான்டா ஏதோ உலகத்தைக் கட்டி ஆளுறேண்டு இந்தச் சனம் நம்புதெண்டு நினைச்சு ஒரு மாயை உலகில மிதந்து கொண்டு இப்படி மேற்கால உதிக்கும் எண்டு சொல்லுவினம் போடா டேய் தலை வெடிக்குதடா.

**உங்கள் எணத்தில் தோன்றும் கேள்விகளை வியாசரிடம் கேளுங்கள் 021 567 1532, 076 636 3378 என்ற Viber இலக்கத்துக்கோ SMS அனுப்புங்கள்**

## பணம் இருந்தால்...

பணம் இருந்தால் உன்னை உனக்குத் தெரியாது. பணம் இல்லாவிட்டால், யாருக்கும் உன்னைத் தெரியாது. - ஸ்மித்.

பணக்காரனாய் சாக வேண்டும் என்பதற்காக வறுமையில் வாழ்வது வடிகட்டிய முட்டாள்தனம் - ஜீவெனால்.

பணக்காரன் ஆக வேண்டுமா? அதற்குப் பணத்தைக் குவிக்க வேண்டியது இல்லை. தேவைகளைக் குறைத்துக் கொள். - வீப்பர்

நாம் பணக்காரர்களாக இருக்க கடமைப்பட்டிருக்கவில்லை. ஆனால் ஒழுக்கமுள்ளவர்களாக இருக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். - பெர்னார்ட்ஷா.

பணப்பிரச்சினை என்றால், எல்லோரும் ஒரே மதத்தினர்தான். - வால்டேர்.

பணம் ஒன்றே வாழ்வின் இலட்சியம் என்றால் அது தவறான வழியிலேதான் தேடப்படும். - கோல்ட்டஸ்.

## கூட்டமைப்பு சொல்லும் அரசியல் அமைப்பு வருமா வராதா?

தரணிகா — கவுந்தில்

ரணில் ஒற்றை ஆட்சியாம். கூட்டமைப்பு சமஷ்டியாம். ஏதும் விளங்குவதில்லையே?

தரணிகா தமிழர்கள் என்னதான் மாற்றங்களைச் செய்தாலும் எந்தக் காலத்திலும் சிங்களத் தலைமைகள் தமிழர்களுக்கான தீர்வைத் தரப்போவது இல்லை என்பது தான் உண்மை.

தற்போதைய அரசியல் சூழலையாவது பயன்படுத்தி சர்வதேசத்தினர் உதவியுடன் தமிழர்களுக்கான தீர்வைப் பெற்றுக் கொள்ள ஒரு அருமையான சந்தர்ப்பம் கிடைத்தது. அதை கெடுத்து யாருக்கு முட்டுக்கொடுத்து நிமித்தி விட்டார்களோ அவர்களே இப்போது ஒற்றை ஆட்சி என்று கொக்கரிக்கிறார்கள். இருந்த எதிர்க்கட்சியையும் பறிகொடுத்து பரிதவிக்கிறது தமிழ்த் தலைமை.

தாரு — பளை

ஜோக் சொல்லுங்கள் வியாசரே?

ரஷ்யாவில் ரேசன் கடை ஒன்றில் நீண்ட வரிசை. ரொம்ப நேரமாக கால்கடுக்க வரிசையில் நின்ற ஒருவன் பொறுமை இழந்தான்.

நாட்டின் இந்த நிலைக்கு காரணம் கோர்பச்சேவ் தான். நான் அவரைக் கொன்று விட்டுத்தான் மறு வேலை பார்ப்பேன் என்று வரிசையில் இருந்து விலகிச் சென்றான். போன வேகத்தில் திரும்பி வந்தான் மறுபடியும் வரிசையில் நின்று கொண்டான். வரிசையில் நின்றவர்கள் கேட்டார்கள். நீ போன காரியம் என்னாச்சு என.

அவன் சோர்வோடு பதில் சொன்னான். அங்கே கோர்பச்சோவை கொலை செய்ய நினைக்கும் ஆட்களின் வரிசை இதை விடப் பத்து மடங்கு அதிகமாக இருக்கிறது.

ஹேஜித் — சாவகச்சேரி

நான் படிக்க என்ன செய்யணும் மாமா?

அடேய் இதை ஒரு படிச்சவனிட்ட கேக்கணும்டா.

தயா — யாழ்ப்பாணம்

அடி வாங்குவதா, அடி கொடுப்பதா சிறந்தது?

சில இடத்தில் அடி வாங்குவதும் சில இடத்தில் அடி கொடுப்பதும் பலரைத் திருத்தும் என்பது உண்மை.

செல்வன் — இணுவில்

என்ன வியாசரே நாடு அமைதியா இருக்குப் போல?

அப்பாவி அது உனக்குப் பிடிக்கலையா? நம்மட அரசியல் வாதிகள்தான் குட்டையைக் குழப்பி மீன்பிடிக்கப் பார்க்கிறார்கள் எண்டா நீயுமா.

**உங்கள் கேள்விகளை 021 567 1532 / 076 636 3378 எனும் இலக்கத்துக்கு SMS அனுப்புங்கள்**

## கனவிலே ஒருத்தி




வல்லைவெளி தாண்டி வந்தேன்
வல்லைவெளிக் கடலைத் தாண்டி
தேய்பிறைப் பொட்டோடு ஒருத்தி
சூட்டியிலே மாட்டிக்கொண்டா

வானத்து அழகு ஒளியாய்
மாமரத்து மாம்பழமாய்
இதயத்தில் நீ புள்ள
பதிந்து போனாயே

ஆவரங்கால் சந்தியில
கோண் அடிச்சு நீ போகையிலே
இதயம் நின்று துடிக்குதடி
நீர்வேலிச் சந்தியிலே உதட்டைச் சுளிக்கிறியே

நீண்ட நெடும் கூந்தல் காட்டி
என்னை நீ வருடுகின்றாய்
சாந்துப்பொட்டு வைத்து
சாந்தமாய் என்னைப் பறிக்கிறாயே

குருவிச் சொண்டு நகத்தாலே
நெற்றியில் விழும் சுருள் மயிரை
சுருட்டி என்ர இதயத்தை சுருட்டுகிறாயே
கனவில வந்து கிசுகிசுத்துப் போறியே...

ஆ. முல்லைதிவ்யன்

## எக்காலம்

வழுவிலா நீ சூற்றாய்
வையம் தழுவி நிற்கும்
பழுதிலாப் பைந் தமிழால்
பாரே மகிழ் கிறது!

தமிழில் எழுதிவிட்டு
ஆங்கிலத்தில் ஒப்ப மிடும்
தான்தோன்றித் தமிழர் தம்மால்
தமிழினமே குனிகிறது!

ஏற்றம் எடுத்தியம்பும்
எழிலான மொழிப் பிளம்பால்
மாற்றம் தமைச் சமைக்கும்
மாண்பு கொணல் எக்காலம்?

வெற்றதாய் தமை விடுத்து
பிறிதொரு தாய் நாடி நிற்கும்
குற்றமுள்ள நெஞ் சுடையோர்
குணம் பெறுத லெக்காலம்?

சாதி மத பேதமென்ற
சகதி தமைச் சங்கரித்து
மோதி அழிந் திடும்நாள்
முகிழ்ந் திடுத லெக்காலம்

கூத்தாடி வி.சி. குஞ்சிதபாதம்

## அப்பரும் சுப்பரும்

அப்பர்: அடேய் சுப்பா
மடைத்தமிழனுக்கு நாம்
எது சொன்னாலும் ஏற்கும் புத்தியடா

சுப்பர்: ஓமப்பு ஓம்
நல்ல நாடகம் தானே
நாம் நடிக்கிறது
சொல்லச் சொல்ல இனிக்கும்
சூடான வார்த்தைகளை
மைக்குப் பூட்டி நாம்
அவுட்டு விட்டால்
வருமெல்லோ புள்ளடி...

அப்பர்: அதெண்டால் சரி காணும்
முதுகெலும்பு உள்ளவைதான்
முன்னுக்கு வளைவினம்
எமக்குத்தான் அது
இம்மியும் இல்லையே
நாம் எந்தப் பக்கமும் வளைவோம்

சுப்பர்: சண்டை சச்சரவு
சனத்துக்குத் தேவையில்லை
திண்ட மிச்சத்தைக் கக்கும்
வௌவால்களின் எச்சம், எச்சமோ?

அப்பர்: புரியவில்லையடா சுப்பா?

சுப்பர்: வாயாலை திண்டு
வாயால கக்கினா
அது எச்சமில்லை, மிச்சம்

அப்பர்: ஹஹஹ... புரிஞ்சுது புரிஞ்சுது

சுப்பர்: கக்கக்க போ என்ற
புலிகேசி வேசம் எமக்கு
சக்கையா பொருந்திட்டுது
இது இன்னும் சனத்துக்குத்
தெரியேல்ல

அப்பர்: சனம் என்னடா சனம்
கால்சட்டைப் பையன்
கை இரண்டையும் விட்டா
சில்லறை தட்டவேணும்

சுப்பர்: அது சரி அது சரி
இவை எக்கேடு கெட்டால்
எமக்கென்ன
எம் சந்ததி செல்வச் செழிப்போட
வாழ்ந்தால் சரி

மாவை. நா.கஜேந்திரன்

## இன்பம் பொங்க வருக

அவலங்கள் நிறைந்த இம்மண்ணில்
அவலங்கள் நீங்கிட அன்போடு
வருக புத்தாண்டே
கார் இருள் நீக்கி காவியம் படைத்திட
இனிமையாய் வருக புத்தாண்டே
துன்பங்கள் போக்கி
இன்பங்கள் நிறைந்திட
புது இசையோடு வருக புத்தாண்டே
விடுதலை வேண்டி ஏங்கியே தவிக்கும்
எம் இன மனங்களில் புத்தொளி வீசிட
புதுப்பிறப்பாய் வருக புத்தாண்டே
தீமைகள் நீங்கி நீதிகள் நிலைத்திட
மனநிறைவுடன் வருக புத்தாண்டே
மனமெல்லாம் செழித்து
மங்கள்ம் இசைத்திட
இன்பமாய் வருக புத்தாண்டே

சீ.இன்பராஜ், மந்துவில் மேற்கு

## இன்னும் பல்லாண்டு இனிதே வாழ்ந்திடுவாய்...!

நலங்காட்டும் செய்திகளை நாளும் சுமந்தே
நற்றமிழில் சொல்லுகின்ற ஏடாகி
பலமான தரமதுவாய்ப் பவனிவந் தூரெங்கும்
பரந்தே பத்திரிகையில் முதலாகி
கலகலக்கும் கன்னியர் காளையர் முதியோர்
கரங்களிலே தினந்தவழும் சிறப்பாகி
நிலம்புலர இல்லங்களில் நீ வந்து சேர்ந்தே
நிகரில்லாப் பல்சுவைப் புத்தகமாய்
ஆயிரமாம் வாசகரின் எண்ணங்களி லெல்லாம்
அரசியலை ஆன்மீகக் கருத்துக்களை
தேயாத முத்தமிழின் தேனான படைப்புகளை
தேவையெனும் விஞ்ஞானப் புதுமைகளை
நயமாக நாளும் பதிவுசெய்த வலம்புரியே
வயதுனக்கு இருபதெனின் புதுமையன்றோ
வாய்மையுள வலம்புரியாய்
இன்னும் நீ இமயம்தொட
வளர்கவென வாழ்த்துகின்றேன் வாழிவாழி!!

நீர்வை இரா. தில்லைராஜன்

## மௌனத்தின் தேடல்- 429



### கசப்பான நினைவுகள்

கம்பி வேலியருகே
கால்கடுக்க காத்திருந்து
உறவுகள் வருவார்களா?
உணவும் உடையும்
தருவார்களா- என
ஏங்கிய ஏங்கிய அந்தக் காலம்
ஒரு தசாப்தமானாலும்
நீங்காது எம்மைவிட்டு- அந்த
கசப்பான நினைவலைகள்
வேண்டவே வேண்டாம்
எம்மினத்திற்கு இனியும் ஒரு
கம்பிவேலி சமாச்சாரம்

சி.கஜா, முரசுமோட்டை

## மௌனத்தின் தேடல் -430



அன்பு வாசகர்களே உங்கள் மனதில் தோன்றும் கவிதைகளை
ஆசிரியர் மௌனத்தின் தேடல்
வலம்புரி- சங்குநாதம்
இல.03,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்

### காத்திருப்பு

சுயமாய் வாழும்
உரிமை இழந்து
தொலைந்து போன
உறவுகளின் முகம் காண
கனவுகளும்
கற்பனையுமாக
கம்பிவேலிக்குள்
கட்டாயமாக காலம்
தொலைப்பதுதான்
நமக்கான தனி விதியோ!

நல்லூர் தேன்நிலா

### ஏக்கப்பார்வை

ஆழிப்பேரலையால்
தனிமையாக்கப்பட்டீர்களா- இல்லை
அநியாயக் குண்டுத்தாக்குதலால்
தனிமை தழுவியதா?
வளரும் தளிர்களே
உங்கள் ஏக்கப் பார்வை
அன்னை அப்பனை தேடுகின்றதா?
துள்ளித்திரியும் பருவம்
துவண்டு வாடவேண்டாம்
ஏக்கம் கலையட்டும்
உயர்ந்த நிலையைப்
பிடிக்க முனைவோமாக

அபி, இலமாலினா, சங்கானை

### தமிழினத் தாகம் தீர்க்க

அடித்த கம்பிக்குள்
அடக்கமுடியுமா?
இடிமுழக்கமிடும்
இத்துணை சக்தியாம்
விடிவுக்காகவே
விழித்துக்காத்திருக்கும்
குடிகளைக் கூட்டில்
குந்த வைப்பீரோ
அடிக்கு மேலடி வீழ
அம்மியும் நகருமாம்
துடிக்கும் தமிழினத்
தாகத்தை தீர்க்க
மிடி அகலவே நம்
மண் மீளப் பிறக்குமே

வை.க.தவமணிதாசன், கொக்குவில்

### செவி சாய்க்குமா?

முள்ளுக் கம்பிக்குள்
பள்ளிச் சிறுவர்கள்
சொல்ல நினைப்பதை
செவிசாய்க்குமோ ஐ.நா!

கே.எஸ். சிவஞானராஜா
கொக்குவில்

### முள்வேலிக்குள்ளே

பெற்றாரும் அருகிலில்லை- உடன்
பிறந்தோரும் உயிரோடில்லை
தூக்கி வளர்த்த பாட்டியுமில்லை
பக்கத்துவீட்டு நண்பனுமில்லை
துள்ளித் திரிந்த
முற்றமுமில்லை- நாம்
பாய்ந்து குளித்த
குளங்களுமில்லை
அடிவயிற்றுக்கு அன்னமுமில்லை
இந்த அநாதைகளுக்கு
ஆதரவுமில்லை
மழைத்தாய் நீர் தெளிக்க
இரத்த வெள்ளத்தில்
நாம் குளித்தோம்
வஞ்சகன் நிலம் பிடிக்க
அஞ்சியஞ்சி இடம்பெயர்ந்தோம்
வீட்டுச் சுவற்றுக்குள்
விளையாடிய- நாம்
இன்று முள்வேலிக்கு முன்னால்
காவல் காக்கிறோம்
அன்பினை எதிர்பார்த்து

ம.தர்சன், வேலணை

### சோலையாகும்

கம்பிக் கூட்டில்
கலங்கிய சிறுவர்
நாளைய கலங்கரை
விளக்குகள்
காத்திருங்கள்
விடியும் ஒருநாள்
வீரர்கள் ஆவீர்

வே.குரு, பண்ணாகம்

### ஏங்கும் விழுதுகள்

இதுவெறும் கார்னிவலும் அல்ல
கண்காட்சியும் அல்ல
கரிகாலன் தோற்றபின்
கம்பிவேலிக்குள்
கைதிகளாகிய
கந்தகப் பூக்கள்
விடுதலைக்காக
ஏங்கும் விழுதுகள்

ஜெ.விஜயலட்சுமி
சேரன் சுவையகம், மல்லாவி

### சிறுவர் சிறைச்சாலை

முட்கம்பி வேலிக்குள்
சிறையில் வாடும் சிறுவர்
விடுதலை வேண்டி ஏக்கத்தோடு
வெளியே பார்த்திருக்கின்றார்
என்ன பாவம் செய்து
இந்நிலைக்காளாகி
தாங்கா வேதனையில்
சிக்கித் தவிக்கின்றார்
பெற்றோரைப் பிரிந்து
கல்வியையுமிழந்து
சுதந்திரத்துக்காகப்
போராட நினைக்கின்றார்

துரை, தென்மட்டுவில்

### எக்காலம்

உறவுகளைத் தேடி
ஏங்கிய விழிகளோடு
முட்கம்பிவேலிக்குள் வாழும்
இந்தப் பிஞ்சு மனங்களின்
அவல வாழ்க்கை
மாறுவது எக்காலம்

மா.செழியன், வேலணை-03

அலெக்ஸ் பரந்தாமன் - புதுக்குடியிருப்பு

# மால்



சிறுகதை

சே... என்ன வாழ்க்கை...? என்ன மனிசர்கள்...?

அழகையாவுக்கு மனம் குமைச்சல் கொள்ள ஆரம்பிக்கின்றன. எங்கேயாவது தனிமையாக, மனித சஞ்சாரமற்ற இடத்தில் போயிருந்து ஓவெனக் கதறி அழ வேண்டும்போல இருந்தது அவரது மன உணர்வு.

முன்பெல்லாம் மனம் குமைச்சல் கொள்ளும் போதிலெல்லாம் கிராமத்தின் ஒதுக்குப் புறத்திறகு முன்பாக அமைந்திருந்த புளியடி காளி கோயிலுக்குச் சென்று மன அமைதி வேண்டித் திரும்புபவராக இருந்தார். ஆனால் இப்போது காளியையும் நவீனமயப்படுத்தியிருந்தார்கள் ஊரின் பணமுதலைகள்.

அழகையா கிராமத்தில் நல்லதொரு கமக்காரன். பாடசாலைக்குச் சென்று படித்த நாட்கள் குறைவு. அவர் வாழும் கிராமம் ஒரு விவசாயக் கிராமமாகையால் எட்டாம் வகுப்பு வரை கல்வி கற்றுவிட்டு பெரும்பாலான மாணவர்கள் பெற்றோருடன் விவசாயத்தில் ஈடுபட ஆரம்பித்து விடுவார்கள். உழைப்புக்கு முதலிடம் கொடுத்து உன்னதமாய் நிமிர்ந்து நின்றது அந்தப் பசுஞ்சோலைக் கிராமம்.

அழகையாவால் இப்பொழுதெல்லாம் கிராமத்தின் அழகை ரசிக்க முடியவில்லை. எல்லாமே மாறியிருந்தன. அதுவும் நாட்டில் யுத்தம் நடைபெற்று ஓய்ந்து விட்ட பின்பு கிராமத்தின் எழிலும் அங்குள்ள மனிதர்களின் முன்னைய இயல்பு வாழ்வும் படுமோசமாக மாறியிருந்தன. விவசாயத்தை நம்பி வாழ்ந்தவர்களில் பலரின் பிள்ளைகள் நாட்டில் நடைபெற்ற யுத்தத்தைக் காரணம் காட்டி அந்நிய தேசங்களில் சஞ்சாரம் செய்யத் தொடங்கிய பின், நவீனம் என்ற பெயரில் கிராமத்தில் எல்லாமே மாற்றம் பெறத் தொடங்கின.

ஆனால் அழகையாவால் நவீனத்துக்குள் உட்புக முடியவில்லை. அவர் கமக்காரன் என்ற மரபில் இரு ந்து வந்தவராகையால் எதையும் உடற்பிரயா சம் மூலமே பெற விரும்பினார். சொகுசு வாழ்க்கை க்கு அவரது உடம்பு இடம் கொடுக்க மறுத்து நின்று அவர் தமது பழைமைவாதக் கொள்கைகளில் இருந்து கீழிறங்கி வர மறுத்தார். இதன் நிமித்தம் குடும்பத்திற்குள்ளேயே முரண்நிலை உருவாக ஆரம்பித்தது. கிராமத்தில் பலர் அவரை ஒதுக்க ஆரம்பித்தார்கள். அழகையாவோ அநாகரிகத்தின் சின்னங்களாகத் தோற்றம் பெற்று நின்ற பலரை தன்னை விட்டு அந்நியப்படுத்தி வைத்தார். கிராமத்தவர்கள் மட்டுமன்றி குடும்ப அங்கத்தவர் களும் அவரை ஒரு பழைய பஞ்சாங்கம் என்ற கணிப்பீடு ஒன்றைப் போட்டு புற மொதுக்கத் தொடங்கினார்கள்.

ஆரம்பத்தில் அழகையாவால் இதைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை. பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதை விடுத்து அவற்றை மனதுக்குள் வைத்து அமுக்கிக் குமையத் தொடங்கினார். பேரப்பிள்ளைகளின் வெளிநாட்டுப் பணம், அவரது வாழ்க்கையோடும் வரித்துக்கொண்ட கொள்கையோடும் உரசிப் பார்க்கத் தொடங்கின.

" ஊரில நாலு மனிசர் எப்பிடி வாழுதுகள்... எண்டதைப் பார்த்தெண்டாலும் உந்த மனுசன் திருந்துதில்லையே..."

வீட்டின் பின் வளவுக்குள் செழித்து நின்ற இராசவள்ளிக் கொடிகளைத் தடிப் பந்தலில் தூக்கிக் கட்டிவிட்டு முன்பகுதிக்கு வந்தபோது அவரது மனைவி கூறியது அச்சொட்டாகவே விழுந்தது அவர் காதில்.

அழகையாவுக்குச் சற்று அதிர்ச்சி கலந்த உணர்வு உடலினுள் ஊர்ந்து தணிந்தது. அவள் கூறியது தற்செயலாக ஏற்பட்டதா? அல்லது தன்னைக்கண்டதும்காணாதது போன்று கூறித் தன் அதிருப்தியை வெளிப்படுத்தினாரா?

அழகையாவின் மனம் குழப்பத்தில் ஆழ்ந்தது. ஆயினும் அவர் அதைத் தன் மனைவி முன்- வெளிக்காட்டிக் கொள்ளவில்லை. கையோடு கொண்டு வந்த மண்வெட்டியையும் சிறிய கத்தியையும் குசினித் தாழ்வாரச் சுவரோரம் இருந்த அம்மிக் கல்லின் மேல் வைத்து விட்டு கைகால்களைக்கழுவுவதற்காக கிணற்றடிக்குச் சென்றார்.

அவரது மனம் வெம்பி நசிந்த பழத்தைப் போலிருந்தது. கூடவே அழுகை வருவது போன்ற உணர்வு. அவர் அந்த உணர்வினைக் கட்டுப்படுத்த முனைந்தார்; முடியவில்லை. மகன், மருமகள், பேரப்பிள்ளைகள் பார்த்தால் பரிசு கேடாகப் போய் விடும்... என்ற மன உந்தலில் இடுப்பில் கட்டியிருந்த வேட்டியை உரிந்து, பக்கத்தில் வளர்ந்து நின்ற கிளுவங்கதியாலில் போட்டுவிட்டு கோவணகட்டுடன் கிணற்றில் இருந்து நீரை அள்ளிக் குளிக்க ஆரம்பித்தார்.

" உதென்னடி உந்தமனிசன் இப்ப மாலேக்கை குளிக்குது...?"

மனைவி மருமகளுக்குக் கூறுவது அழகையாவுக்கு தெளிவாகக் கேட்டது. அவர் எதுவும் கூறவில்லை. வாளி நீரை முகத்திலே ஊற்றிக்கொண்டிருந்தார். முகத்தில்இருந்து ஒழுகும்கிணற்று நீரோடு அவரது கண்ணீரும் கலந்து ஒழுகிக் கொண்டிருந்தது. மனதின் குமைச்சல் தீரும்வரை அவர் அள்ளிக்குளித்துக்கொண்டேயிருந்தார்.

சற்று நேரத்திற்கு முன்பு மனைவி கூறிய அந்த வார்த்தைகள் திரும்பவும் மகுடி இசை கேட்ட அரவம் போல மனதுக்குள் நின்று எழுந்து ஆடத் தொடங்கியது.

நாலு மனிசரைப் போல வாழ வேணுமெண்டால் நான் இனி ஒவ்வொருத்தருக்கும் முன்னாலை நடிக்கவேணும்; முகமூடி போடவேணும்... அதெல்லாம் எனக்குச் சரிவராது. தணிச்சுப்போய் றோட்டு வழிய தலைவிரி கோலமாகத் திரிஞ்சாலும் நான் கடைசி வரைக்கும் என்னை மாற்றிக் கொள்ள விரும்பமாட்டன்.

அவரது உள்ளார்ந்த உணர்வொலிகள் திரும்பத் திரும்ப அவருக்குள் அலறிக் கொண்டேயிருந்தன.

அன்று காலையில் நடந்த சம்பவம்... அழகையாவை அது வெகுவாகவே பாதித்து விட்டது.

வீட்டின் முற்றத்துக்கு அருகாக "மால்" என்றழைக்கப்படும் முதிரை மரக் கொப்புகளாலான தென்னை ஓலை களால் வேயப்பட்ட பதினாறு அடி விஸ் தீரணமுள்ள ஒரு கொட்டில் இருந்தது. இதைக் கொட்டில் என்று எவரும் அழைப் பதில்லை. "மால்" என்றே அழைப்பார்கள். பரம்பரை பரம்பரையாக ஒவ்வொரு தலைமுறைகளா லும் அந்த மால் பாதுகாக்கப்படும். அதற்குள் உண்டு, உறங்கி, களைப் பாறி, வேளாண் விளை பொருட்களையும் பாதுகாத்து வந்தனர் மூத்த தலைமுறையினர்.

அந்தக் கிராமத்தில் உள்ள ஒவ்வொரு மண்வீடுகளுக்கும் முன்பாகவுள்ள முற்றத்துக்கு அருகில் இவ்வாறு மால்கள் கட்டப்பட்டிருக்கும். இவ்வாறு தன் வீட்டில் கட்டப்பட்ட மால் இருப்பிடத்தை இன்றைய நாகரிகத்துக்குப் பொருத்தமில்லையெனக் கூறி அதை அகற்றவேண்டும்... என மகன் கூறியபோது அழகையாவால் தனது மன உணர்வுகளைக் கட்டுப்படுத்த முடியவில்லை. அடுத்தகணம்... மகனுக்கு முன்பாக ஒரு ருத்ரதாண்டவமே ஆடிவிட்டார்.

இது என்ரை பரம்பரைச் சொத்து. இந்தச் சொத்தை நான் இருக்கும் வரைக்கும் அங்காலை இஞ்சாலை அரக்கெடுக்க விடமாட்டன். நான் செத்தாப்போலை இந்த மாலுக்கையிலிருந்துதான் என்ர பிணம் சுடலைக்குப் போகவேணும்.

அவர் உறுதிபடக்கூறியபோது வீட்டில் உள்ளவர்களால் மேற்கொண்டு எதுவும் செய்யமுடியாமல் போய்விட்டது. மனைவி கூட மகனது பக்கம் நின்றே தனது நியாயத்தை ஒப்புவித்தாள்.

அவளும் மனதளவில் மாறிவிட்டதை அழகையா உணர்ந்து கொண்டார். இப்போதெல்லாம் இரவு நேரங்களில் மாலுக்குள்ளே வந்து துணையாக உறக்கம் கொள்ளப்போவதில்லை அவள். மாபிள் பதிக்கப்பட்ட நவீன கல்வீட்டு வசதிக்குள் இரவு பத்து மணிவரை மருமகளுடன்இணைந்து தொடர் தொலைக்காட்சி நாடகங்களைப் பார்த்து விட்டு அங்கேயே உறங்கிவிடுவாள்.

மால் பிரச்சினை உருவான நாளிலிருந்து மகன் தன் முகம் பார்த்துக் கதையாமல் விலகிச் செல்வது அவர் மனதைச் சற்று நெருடவே செய்தது. அத்தோடு மருமக ளும் தன் பிள்ளைகளை பெரும்பாலும் அவரோடு சேருவதற்கு விரும்புவதில்லை. மனைவி மட்டும் பட்டும் படாமலும் அவருக்குப் பணிவிடை செய்து கொண்டிருந்தாள்.

அழகையாவுக்கு வெறுத்துவிட்டது வாழ்க்கை...சே... என்ன மனிசர்கள்...?

" மிதமிஞ்சிய பணமும் தற்கால நவீன மும் இதுவரை நமது பரம்பரைக்குச் சோறு போட்ட வேளாண் தொழிலைப் பாதித்துவிடுமோ..." என்ற யோசனைகளோடு கூடிய கவலைகள் அவருள் எழ ஆரம்பித் தன.

நான் இருக்கும் வரைக்கும் தான் இந்த மாலும் வேளாண் தொழிலும்... அதுக்குப் பிறகு...?

இது என்ரை பரம்பரைச் சொத்து. இந்தச் சொத்தை நான் இருக்கும் வரைக்கும் அங்காலை இஞ்சாலை அரக்கெடுக்க விடமாட்டன். நான் செத்தாப்போலை இந்த மாலுக்கையிலிருந்து தான் என்ர பிணம் சுடலைக்குப் போகவேணும்

அவரது விழிகள் இரண்டும் பனிக்கத் தொடங்கின. நான் இல்லாத காலம் தற்போது தனக்கு இளைப்பாறுதலைத் தந்து கொண்டிருக்கும் இந்த மாலுக்கு ஏற்படப் போகும் நிலையை நினைக்க... அவரால் அதை நினைத்துப் பார்க்க முடியாமல் இருந்தது.


வேதனைகளும் விலக்கி ஒதுக்கப்பட்ட சூழ்நிலைகளையும் நினைத்துக் கவலைப்பட்டு அந்தக் கவலைகளே அவருள் நாளடைவில் நோயாளி... அந்த நோயிலிருந்து விடுபட முடியாமல் ஒருநாள் விடுபட்டுப் போனார் அழகையா இவ்வுலகை விட்டு.

இப்பொழுது அந்த நவீன கல்வீட்டுக்கு முன்பாக அவரது மால் காணப்பட வில்லை. அதற்குப் பதிலாக கொங்கிறீற் தூண்களிலான தகரக்கொட்டகைக்குள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன தற்கால இரண்டு சக்கர இயந்திரவண்டிகள்.

# புதிய தலைமையை உருவாக்குவோம் நீதியரசர் விக்னேஸ்வரனுக்கு தமிழர் விடுதலை கூட்டணி அழைப்பு

தமிழ் மக்களின் பிரச்சினைகள் நாளாந்தம் வளர்ந்து கொண்டே போகின்றதேயன்றி, தீர்வு எதுவும் ஏற்படுவதாகத் தெரியவில்லை. நடைமுறைகளை அவதானிக்கும் போது மேலும் எத்தனை தீபாவளிகள் தாண்டும் எனத் தெரியவில்லை. சுயநலம் கருதி சிலர் செயற்பட்டமையாலேயே இந்த நிலை ஏற்பட்டுள்ளது. சுயநலத்தை உதறித் தள்ளிவிட்டு ஒன்றுபட்டு செயற்பட வருமாறு அக்கறை கொண்ட தமிழ் கட்சிகளை தமிழர் விடுதலை கூட்டணி வினைந்து அழைக்கின்றது.. கடந்த கால வரலாற்றை நம் தலைவர்களில் சிலரும், அவர்களின் சில தொண்டர்களும் உதாசீனம் செய்ததே இதற்குக் காரணமாகும்.

1970 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா அரசாங்கத்திற்கு புதிய குடியரசு அரசியல் சாசனத்தை உருவாக்க மக்கள் ஆணை வழங்கியிருந்தனர். அதனை தமிழ் மக்கள் எதிர்நோக்கக்கூடிய கஷ்டங்களை முன்கூட்டியே அறிந்த எஸ்.ஜே.வி.செல்வநாயகம் இந்த புதிய அரசியல் சாசனத்தை எதிர்ப்பதற்கு ஒத்துழைப்புத் தருமாறு அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியின் தலைவர் ஜீ.ஜீ.பொன்னம்பலத்திற்கு கோரிக்கை விடுத்தார். ஒற்றுமையின் அவசியத்தை உணர்ந்த இரு தலைவர்களும் தங்களுக்கிடையே 22 ஆண்டுகளாக காணப்பட்ட வேற்றுமைகளை மறந்து 1972 ஆம் ஆண்டு தமிழர் ஐக்கிய முன்னணி என்ற அமைப்பை உருவாக்கி, அது 1976 ஆம் ஆண்டு தமிழர் விடுதலை கூட்டணி என பெயர் மாற்றம் பெற்றது. தமிழ்ப்பிரதேசங்களில் இயங்கும் மிகப் பெரும் தமிழ் அரசியல் கட்சிகள் என் பதால்,இவ்விரு கட்சிகளின் இணைவு ஏக பிரதிநிதித் துவத்தின் தன்மையை இக்கட்சிக்கு வழங்கியது போல் தோன்றியது. ஆனால் அது அப்படியல்ல. வேறுபல சிறிய கட்சிகளும் தமிழர் விடுதலை கூட்டணியுடன் இணைந்ததுடன், இடதுசாரி கட்சிக ளும் குறிப்பிடத்தக்க அளவு வலுவிழந்தன. எது எப்படி இருப்பினும் உலகளாவிய ரீதியில் குடியேறியுள்ள இலங்கை தமிழ் மக்கள் இந்த ஒற்றுமையை மிகவும் பாராட்டி, இணைப்பை இரு பெரும் தமிழ் அரசியல் ராட்சகர்கள் மீள கைகோர்த்த மையை பலவிதத்திலும் பிரமாதமாகக் கொண்டாடினார்கள். இவ்விரு தலைவர்களும் ஏற்கனவே நடந்தது போல



மீண்டும் பிளவு படக்கூடாது என்பதில் மிகவும் உறுதியாக இருக்க வேண்டுமென்று தமிழர் விடுதலை கூட்டணியை தமது சொத்தாக தமிழ் மக்களுக்கு விட்டுச் சென்றனர். இந்த இணைப்பை மேலும் பலப்படுத்தவும் மலைநாட்டு தமிழ் மக்களையும் ஒரே கொடியின்கீழ் கொண்டுவரும் நோக்கத்தோடும் தான் வகித்த தலை வர் பதவியை தந்தை செல்வநாயகம் 1976 ஆம் ஆண்டு நடந்த கட்சி மாநாட்டில் தானாக முன்வந்து, ஜீ.ஜீ.பொன்னம்பலம், எஜ்.தொண்டமான் ஆகியோருடன் பகிர்ந்துகொண்டார்.

தந்தை செல்வா, ஜீ.ஜீ.பொன்னம்பலம் ஆகியோரின் மறைவுக்குப் பின்னர் 1977 ஆம் ஆண்டு நடந்த பாராளுமன்ற பொதுத் தேர்தலில் தமிழர் விடுதலை கூட்டணி உதயசூரியன் சின்னத்தில் போட்டியிட்ட முதலாவது பொதுத் தேர்தலாகும். அத்தேர்தல் நியமனக்குழுவில் ஒரு அங்கத்தவராக எஸ்.தொண்டமானும் இடம்பெற்றிருந்தார். தேர்தல் முடிவுகளில் சந்தேகத்திற்கிடமின்றி ஒற்றுமையை தமிழ் மக்கள் மிகப் பாரதூரமாக எடுத்துக்கொண்டார்கள் என்பது தெளிவாகியது. போட்டியிட்ட முதல் தேர்தலிலேயே தமிழர் விடுதலை கூட்டணி ஈட்டிய வெற்றி ஒவ்வொருவரையும் தமக்கிடையே நிலவி வந்த பேதங்களை மறந்து, மீண்டும் நண்பர்களாகவும், உறவினர்களாகவும் பழகினார்கள். ஆயுதம் தாங்கிய குழுக்கள் தமிழ் மக்கள் வாழ்ந்த பகுதிகளில் தமது செயற்பாடுகளை ஆரம்பிக்கத் தொடங்கியவரை இந்த ஒற்றுமை நீடித்தது. அதன் பின்னர் தொடர்ந்த நீண்டகால யுத்தம் காரணமாக பல்வேறு இழப்புக்கள் மற்றும் அரசியல்


**60 ஆண்டுகள் விக்னேஸ்வரனை நான் அறிவேன். ஒன்று மட்டும் உறுதியாக கூற என்னால் முடியும் ஏனைய சிலர் தொடர்ச்சியாக செய் து வருவதுபோல அவர் நம் மினத்தை விற்கவோ, காட்டிக்கொடுக்கவோ மாட்டார்**

ரீதியான சவால்களுக்கு மத்தியில் தொடர்ந்து பய ணிக்க வேண்டிய நிர்ப்பந்தம் யாவருக்கும் ஏற்பட்டது. சாத்வீகப் போராட்டம் தோற்றமையினால்தான் ஆயுதக் குழுக்கள் ஆரம்பிக்கப்பட்டன என்ற கூற்று ஏற்கக் கூடியதல்ல.

நடந்துபோன விடயங்களை மீண்டும் கிளறிப் பார்க்க நாம் விரும்பவில்லை. நடந்தவை நடந்தவையாக இருக்கட்டும். ஆனால் சில விடயங்களை குறிப்பிட்டே ஆகவேண்டும். விரும்பத்காத சக்திகள் எவையும் தமிழரசுக் கட்சியின் சின்னத்தையும் அதன் பெயரையும் துஷ்பிரயோகம் செய்யக்கூடாதென்ற ஒரே காரணத்திற்காகவே தனது கணவர் தமிழரசுக் கட்சியின் பதிவை பாதுகாத்து வைத்திருந்தார் என்றும், தமிழரசுக் கட்சியை அவருக்கு ஒருபோதும் புனரமைக்கும் எண்ணம் இருக்கவில்லை என்றும், அவரால் வளர்க்கப்பட்ட சிலர் தமிழரசுக்கட்சியின் பெயரை துஷ்பிரயோகம் செய்யவும், அதனை புனரமைக்க முயல்வதும் கவலைக்குரியது எனவும், இவர்கள் மீது அவர் வைத்திருந்த நம்பிக்கையை முறியடித்திருக்கின்றார்கள் எனவும் திருமதி அமிர்தலிங்கம் மிக்க தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார். நான் மிக அழுத்தம் திருத்தமாக கூறுவது யாதெனில், செல்வநாயகமோ, ஜீ.ஜீ.பொன்னம்பலமோ அன்றி தமிழர் விடுதலை கூட்டணியின் ஆரம்பகால உறுப்பினர்களோ இவர்களில் எவரும் தமிழரசுக்கட்சியை புனரமைப்புச்செய்ய ஒருபோதும் விரும்பியிருக்கவில்லை. இந்தக்கைங்கரியத்தை ஒரு பேராசை பிடித்த நபர், தந்தை செல்வா இறந்து 28 ஆண்டுகளின் பின் தன்நலம் கருதியே செய்துள்ளார். அதேபோல், தமிழ்த்தேசிய கூட்மைப்பு என்ற பெயரை காலத்திற்குக் காலம் பயன்படுத்தி மக்கள் ஒற்றுமையாக வாக்களிக்க வேண்டும் எனவும், தேர்தலை சர்வதேச சமூகம் உன்னிப்பாக கவனிக்கின்ற தாகவும் போன்ற வார்த்தைகளைப் பயன்படுத்தி தமிழ் மக்களின் வாக்குகளை பெற்றுக் கொண்டார்கள். வெற்றி பெற்றவுடன், தங்களுக்குள் தனியாக, குழுவாகப் பிரிந்து செயற்படுவார்கள். அதன் விளைவை கடந்த காலங்களில் இடம்பெற்ற தேர்தல்களில் பிரதிபலித்ததை நாம் கண்கூடாகப் பார்த்தோம். தொடர்ந்தும் அந்த மாயைக்குள் சிக்கி தவிக்காமல், மக்கள் விடுபட்டு வந்து உண்மையை உணர்ந்து செயற்பட ஆரம் பித்தமையாலேயே உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பிற்கு பெரும் வீழ்ச்சி ஏற்பட்டது. இதே சிந்தனையில் மக்கள் செயற்பட்டால் பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வு பெற்றுக்கொள்ள முடியும்.

இக்கட்டத்தில் எதுவித பதவிகளுக்கும் ஆசைப்படாது 60 ஆண்டுக்கு மேல் மக்கள் சேவையில் ஈடுபாடு கொண்டிருந்த நான், எனது அரசியலில் இன்றைய நிலைப்பாட்டை நம் மக்களுக்கு தெளிவுபடுத்த விரும்புகின்றேன். சட்டக்கல்லூரி யில் 60 ஆண்டுகள் நீதியரசராக விக்னே ஸ்வரனை நான் அறிவேன். இரண்டொரு சந்தர்ப்பத்தில் அவரைப் பற்றிய தப்பான அரசியல் விமர்சனங்கள் வந்தபோது, அவற்றையும் கண்டித் துள்ளேன். ஒன்று மட்டும் உறுதியாகக் கூற என்னால் முடியும். ஏனைய சிலர் தொடர்ச்சியாக செய்து வருவதுபோல அவர் நம்மினத்தை விற்கவோ, காட்டிக் கொடுக்கவோ மாட்டார் என்பதை நான் அறிவேன். இந்த நிலைமையைத்தான் தீர்க்கதரிசன மாக "ஆண்டவன்தான் தமிழ் மக்களைப் காப்பாற்ற வேண்டும்" என அன்று தந்தை செல்வா கூறியிருக்கலாம்.

இன்றுவரை தேர்தல்களில் தமிழர் விடுதலை கூட்டணி தனித்து எல்லா வட்டாரங்கள், தொகுதிகளிலும் போட்டியிடும் தீர்மானத்துடனேயே உள்ளது. அப்படி இருப்பதற்கு நியாயப்படுத்தக்கூடிய பல காரணங்கள் உண்டென்பதை சகல கட்சிகளின் தலைவர்களும் தம் தம் மனச்சாட்சியைத் தொட்டு கேட்க வேண்டும். ஆகவே, நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் தமிழர் விடுதலை கூட்டணியின் தலைமை ஏற்கும் பட்சத்தில் அவருடன் இணைந்து செயற்பட நாம் தயாராக உள்ளோம். இதே ஏற்பாட்டைத்தான் நான்கு ஆண்டு களுக்கு முன்னர் அவருக்கு எமது கட்சியின் தலைவர் பதவியை வழங்க முன்வந்தேன் என்பதை யும் இவ்விடத்தில் குறிப்பிட விரும்புகின்றேன். எனவே, 1972 ஆம் ஆண்டு தமிழர் விடுதலை கூட்டணி ஆரம்பிக்கப்பட்ட போது, அக்கட்சிகள் ஒன்றாக சங்கமித்த



மையேயன்றி, பங்காளிகளாக இருக்கவில்லை. இதே போன்றதொரு நிலைமை ஆரம்பத்திலேயே உருவாகுமாக இருந்தால், தேர்தல் முடிந்ததும் அனைவரும் ஒரே கட்சியாக தமிழர் விடுதலை கூட்டணியை ஏற்று, புதிய நிர்வாகத்தையும் தெரிய வைத்து தந்தை செல்வாவின் கனவை நனவாக்குவோம். என்னைப் பொறுத்தவரையில், எமது பிரச்சினை தீரவேண்டும் என்பதேயொழிய, எதுவித பதவியையும் இலக்கு வைத்து இன்றுவரை செயற்படவில்லை என்பதை உறுதியாகக் கூறி, நல்லெண் ணம் படைத்த அனைவரையும் ஒன்று சேர வருமாறு அழைக்கின்றேன்.

அன்புடன் இன ஒற்றுமையை விரும்பும்
வீ.ஆனந்தசங்கரி



# சிறுவர்களிடம் சிமாட்போன்



## பெற்றோர் கவனத்திற்கு

ஸ்மார்ட் போன் பழக்கத்தால் குழந்தைக்கு ஏற்படக் கூடிய பாதிப்புகள் எவை என்பதை அறிவது முக்கியமாகும். குழந்தைகளுக்கு ஸ்மார்ட் போனை கொடுத்தால் பலவிதமான பாதிப்புகள் ஏற்படுவதாக ஆய்வுகள் கூறுகின்றன.

குழந்தையின் பேச்சு ஆற்றல் விருத்தியடையும் காலத்தில் அவர்கள் விளையாடுவதற்கு ஸ்மார்ட் போனை கொடுத்தால் அவர்களின் பேச்சு ஆற்றல் விருத்தியடைவது தாமதம் அடையும் என்று கண்டறியப்பட்டுள்ளது. இதனால் சொல்லாற்றல் குறைவதுடன் அவர்கள் மற்றவர்களுடன் கலந்துரையாடுவது குறைந்துவிடும்.

அதேபோல அவர்களது எழுத்து ஆற்றலும் பாதிக்கப்படும். விரல் நுனிகளால் போனைத் தட்டிக் கொண்டிருக்கும் அவர்கள் தங்களது விரல்களை வளைத்து எழுத்துக்களை உறுப்பாக எழுதுவதில் ஆர்வம் விட்டுப் போய் எழுதும் ஆற்றல் பாதிக்கப்படும்.

குழந்தைகளுக்கு தூக்கம் பெரியவர்களைவிட அதிகநேரம் தேவை என்பது உங்களுக்குத் தெரிந்திருக்கும். ஆனால் ஸ்மார்ட் போனில் ஆர்வம் கொண்டு அதில் நேரத்தை செலவழிக்கும் குழந்தைகள் தூங்கும் நேரம் குறைந்து விடுகிறதாம். அண்மைய ஆய்வு முடிவுகளின்படி குழந்தை ஒரு மணிநேரம் ஸ்மார்ட் போனில் செலவிட்டால் 15 நிமிடங்கள் தூக்கம் குறைகிறதாம். இவற்றைவிட, ஸ்மார்ட் போனில் பார்க்கும் விடயங்களால் உடலியல் மற்றும் உளவியல் தாக்கங்களும் குழந்தைக்கு ஏற்படுகிறது.

ஸ்மார்ட் போனில் இருந்து நீலக் கதிர் வீச்சு ஏற்படுகிறது. நீலக் கதிர்களால் உடற் கடிகார இயங்கங்களில் மாற்றங்கள் ஏற்படலாம். அதாவது தூங்கும் நேரம், விழித்தெழும் நேரம் போன்ற எமது நாளாந்த செயற்பாட்டில் தாக்கத்தை ஏற்படுத்தும். அத்துடன் அந்தக் கதிர்கள் கண்களினுள் ஆழப் புகுந்து நுண்பார்வைக்கு முக்கியமான மக்கியூலா பகுதியை பாதிக்கும். இது குணப்படுத்த முடியாத பாதிப்பு ஆகும்.

கிருமித் தொற்று நோய்கள் குழந்தைக்கு வருவதற்கான வாய்ப்புகள் அதிகமாகின்றன. ஏனெனில் 90 சதவிகிதத்திற்கு மேலான போன்களில் கிருமி பரவியிருப்பதாக ஆய்வுகள் சுட்டிக் காட்டுகின்றன.

குழந்தையை ஸ்மார்ட் போனிலிருந்து விடுவிப்பதற்கு நீங்கள் முக்கியமாகச் செய்ய வேண்டியது என்னவெனில், நீங்கள் முன்மாதிரியாக இருப்பதுதான். நீங்கள் ஸ்மார்ட் போன் பாவனையை கட்டுப்படுத்துவது அவசியம்.

முக்கியமாக குழந்தையின் கண்பார்வை படும் இடத்திலிருந்து பாவிக்க வேண்டாம். அதில் அழைப்பு வந்தால் அதற்கு மறுமொழி கொடுத்துவிட்டு உடனடியாகவே அதை குழந்தையின் கைபடாத இடத்தில் வைத்து விடுங்கள்.

நீங்கள் ஸ்மார்ட் போனில் நோண்டிக் கொண்டிருப்பது குழந்தையின் கவனத்தை ஈர்த்து, அதன் ஆவலைத் தூண்டி குழந்தையையும் அதில் கைபோட வைக்கும். இந்த விடயத்தில் பெற்றோர் முன்மாதிரியாக இருப்பது அவசியம். அத்துடன் பெற்றோர் ஸ்மார்ட் போனில் நேரத்தைச் செலவழித்துக் கொண்டிருப்பதானது குழந்தை தான் அலட்சியப்படுத்தப்படுவதான உணர்வைக் கொடுத்து அதை ஏக்கமடையச் செய்யும் என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

குழந்தையுடன் பேசுவது, அதற்கு விருப்பமான கதைகளைக் கூறுவது, அதனுடன் சேர்ந்து விளையாடுவது, அதன் வயதிற்கும் ஆர்வத்துக்கும் ஏற்ற விளையாட்டுப் பொருட்களை வாங்கிக் கொடுப்பது ஆகியவற்றைச் செய்யுங்கள்.

குழந்தையை வெளியே அழைத்துச் செல்வதும், அதன் வயதுள்ள குழந்தைகளுடன் சேர்ந்து விளையாடுவதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுப்பது போன்றவையும் உங்கள் குழந்தையின் கவனத்தை ஸ்மார்ட் போனிலிருந்து விடுவிப்பதற்கு உதவும்.

பொதுவாக இரண்டு வயதுவரை குழந்தைகள் தன்னைச் சுற்றியுள்ள உலகைப் பழகிப் புரிந்து கொள்ள வேண்டிய காலம். பெற்றோருடனும் மற்றவர்களுடனும் ஊடாட வேண்டிய காலம். ஸ்மார்ட் போன் ஆகவே ஆகாது. மூன்று வயதில் அவர்கள் ஸ்மார்ட் போன் ஊடாக சிலவற்றைக் கற்கக் கூடிய காலம். கண்காணிப்போடு குறிப்பிட்ட நேரத்திற்கு மட்டும் ஸ்மார்ட் போனைக் கொடுக்கலாம்.

உங்கள் குழந்தைக்கு என சொந்தமாக ஒரு ஸ்மார்ட் போன் எப்போது கொடுக்கலாம்? பதினொரு வயதிற்கு மேலேயே நல்லது என 2017 வந்த ஒரு ஆய்வு ஒன்று கூறுகிறது.

**நீங்கள் ஸ்மார்ட் போனில் நோண்டிக் கொண்டிருப்பது குழந்தையின் கவனத்தை ஈர்த்து, அதன் ஆவலைத் தூண்டி குழந்தையையும் அதில் கைபோட வைக்கும். இந்த விடயத்தில் பெற்றோர் முன்மாதிரியாக இருப்பது அவசியம்.**

# இது நம்ம கதைகள்... 32


## முற்பகல் செய்யின்....


19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஓர் நாள்........

ஸ்கொட்லாந்து நாட்டின் குக்கிராமமொன்றில் பச்சைப்பசேலென்று பரவிக்கிடந்த வயல்வெளியில் விவசாயி கியூ பிளேமிங் தன் வேலையில் மும்முரமாக ஈடுபட்டுக் கொண்டிருந்தார்.

நிசப்பதமான - ரம்மியமான அந்தக் காலைப் பொழுதை ஊடுருவி திடீரென "என்னைக் காப்பாற்றுங்கள்..... காப்பாற்றுங்கள்" என்ற ஈனக்குரல் எதிரொலித்தது.

அதிர்ச்சியடைந்த பிளேமிங் தன் வேலையைக் கைவிட்டு குரல் கேட்ட திசை நோக்கி ஓடினார். சகதி நிறைந்த குழியொன்றில் அகப்பட்ட சிறுவனொருவன் மெல்லமெல்ல மூழ்கிக் கொண்டிருப்பதைக் கண்ணுற்றார். உடனடியாகவே செயற்பட்டு அவனை மீட்டெடுத்து, ஆசுவாசப்படுத்தி வீட்டிற்கு அனுப்பி வைத்தார்.







மறுநாள் காலை புலர்ந்தது. பிளேமிங்கின் வீட்டின் முன் விலையுயர்ந்த ஆடம்பரக்கார் ஒன்று வந்து நின்றது. அதிலிருந்து இறங்கிய தனவந்தரான ரண்டோல் பிரபு தன்னை பிளேமிங்கால் காப்பற்றப்பட்ட சிறுவனின் தந்தையென்று அறிமுகம் செய்து கொண்டார். தன் மகனின் உயிரைக் காப்பாற்றியதற்காக நன்றி தெரிவித்து பெரும் தொகைப் பணத்தை கியூ பிளேமிங்கின் கைகளில் திணித்தார்.

கியூ பிளேமிங் அதனை வாங்க மறுத்துவிட்டார். "பிறரின் துன்பத்தில் கரம் கொடுப்பதற்கே கடவுள் நம்மை மனிதர்களாக படைத்திருக்கிறார். எனவே இந்தப் பணத்தைத் தந்து என் உதவியை சிறுமைப்படுத்த வேண்டாம்" என்றார். பிளேமிங்கின் நல்ல மனப்பாங்கை வெகுவாகப் பாராட்டினார் ரண்டோல் பிரபு. பிளேமிங்கின் மகனான அலெக்ஸ் பிளேமிங்கை உயர் கல்விச்சாலையொன்றில் சேர்த்து அவனை கற்பிக்கும் பொறுப்பையாவது தன்னிடம் தருமாறு ரண்டோல் பிரபு கெஞ்சிக் கேட்டார். பிளேமிங்கும் அதற்கு சம்மதித்தார்.

சிறுவனான அலெக்ஸ் பிளேமிங் நாட்டின் உயர் கல்விச்சாலையொன்றில் சேர்க்கப்பட்டான். கல்வியில் சிறந்து விளங்கினான். உயிரியல் விஞ்ஞானியாக பிரகாசித்த அவன்தான் பிற்காலத்தில் பென்சிலின் தடுப்பு மருந்தைக் கண்டுபிடித்து கோடிக்கணக்கானோரின் உயிர்களைக் காத்த சேர். அலெக்சாண்டர் பிளேமிங்.

பிளேமிங் மற்றும் ரண்டோல் பிரபுவின் குடும்பங்களுக்கிடையிலான உறவு பல்லாண்டுகளாகத் தொடர்ந்தது. ஒரு கட்டத்தில் ரண்டோல் பிரபுவின் மகன் வின்சன்ற் நிமோனியா நோயால் இறக்கும் தறுவாயில் இருந்தபோது அலெக்சாண்டர் பிளேமிங் கண்டுபிடித்த பென்சிலின் மருந்தே அவனுயிரைக் காத்தது. இவ்விதமாக பிளேமிங் குடும்பத்தால் இரு தடவை உயிரிப் பிச்சையளிக்கப்பட்ட வின்சன்ற் வேறு யாருமல்ல, இங்கிலாந்தின் புகழ்பூத்த பிரதமராக விளங்கி இரண்டாம் உலக யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வந்த சேர். வின்சன்ற் சேர்ச்சில் அவர்களே.

இந்தக் கதை புனையப்பட்டது. இதில் உண்மையில்லை என்று வாதிப்போருமுளர். ஆனால் சேர்ச்சிலின் உயிர் இருதடவைகள் பிளேமிங் குடும்பத்தால் காப்பாற்றப்பட்டது என்ற குறிப்பு சேர். வின்சன்ற் சேர்ச்சிலின் வரலாற்றுக் குறிப்பில் காணப்படுகின்றது. எது எவ்வாறாயினும் நன்மை செய்தால் நன்மையே விளையும் என்பதற்கு இதுவொரு உதாரணம்.


**நாம் செய்யும் நன்மைகள்
என்றோ ஒரு நாள் நம் துணையாகும்**

**எப்.எக்ஸ்.அன்ரன்**

# வெந்நீர் ஊற்று... வானவில் ஆறு... உலகின் சில அதிசய இடங்கள்

உலகில் அனைத்துப் பகுதிகளிலும் நிலப்பரப்புகள் ஒரே மாதிரியாக இருப்பதில்லை. சில இடங்கள் நம்மை ஆச்சரியப் படுத்தும், சில இடங்கள் அச்சமூட்டும். சில இடங்களில் அதன் அழகைக் கொஞ்சம் அதிகமாகவே உணர முடியும். அவற்றை நேரில் பார்த்தால் கண்களுக்குத் தெரிவது கற்பனையா? இல்லை நிஜமா என்ற சந்தேகம் கூட ஏற்படும். அப்படி இயற்கையாகவே உருவான சில இடங்கள் உலகில் இருக்கின்றன.

## ஆன்ட்டிலோப் செங்குத்துப் பள்ளத்தாக்கு (Antelope Canyon)



இந்த இடத்தின் பெயர் தெரிந்திருக்காவிட்டாலும் இதை நீங்கள் பார்த்திருக்க வாய்ப்புண்டு. உலகில் அதிகம் படம் பிடிக்கப்பட்ட இடங்களில் ஒன்றாகவும் இது இருக்கிறது. ஆன்ட்டிலோப் செங்குத்துப் பள்ளத்தாக்கு (Antelope Canyon) என அழைக்கப்படும் இது அமெரிக்காவில் அரிசோனா மாநிலத்தில் இருக்கிறது. இங்கே எடுக்கப்படும் புகைப் படங்களைக் கணனிகளிலும், ஸ்மார்ட்போன்களி லும் வோல்பேப்பர்களாக பார்க்க முடியும். நீரால் அரிக்கப்பட்டதால் இந்த அமைப்பு உருவாகியிருக்கிறது. குறுகிய பகுதிகளுக்குள்ளே மேலே இருந்து உள்ளே வரும் ஒளியால் பார்ப்பதற்கு அழகாக இது தோற்றமளிக்கிறது. இந்த இடம் மணற்பாறை வகை பாறைகளால் உருவாகியிருக்கிறது. இங்கே இருக்கும் பாறைகளில் வரி வரியான வடிவங்களைப் பார்க்க முடியும். அமைதியான நிலப்பரப்பாகத் தோற்றமளிக்கும் இங்கே திடீர் வெள்ளப்பெருக்கு ஏற்படும் அபாயமும் இருக்கிறது.

## பமுக்காலே வெந்நீர் ஊற்று Pamukkale



துருக்கிக்குச் சென்றால் கலை நயம் மிக்க பல கட்டடங்களைப் பார்க்க முடியும். அங்கே இயற்கையாகவே அழகாக அமைந்திருக் கிறது பமுக்காலே வெந்நீர் ஊற்று. துருக்கிய மொழியில் இதைப் பருத்திக் கோட்டை என்று அழைக்கிறார்கள். பார்ப்பதற்கு ஏதோ பனிப் பிரதேசத்தில் இருப்பதைப் போல தோற்றமளிக்கிறது.

ஆனால், இது குளிரான பகுதி கிடையாது. இந்த நிறத்துக்குக் காரணம் நீரில் இருக்கும் கல்சியம் காபனேட் படிவதன் காரணமாக வெண்மையான நிறத்தில் தோற்றமளிக்கிறது. மொத்தம் இந்தப் பகுதியில் $35^\circ$ செல்சியஸ் முதல் $100^\circ$ செல்சியஸ் வரை வெப்பநிலை கொண்ட 17 ஊற்றுகள் இருக்கின்றன. யுனெஸ்கோ இதை உலகப் பாரம்பரிய தளமாக அங்கீகரித்துள்ளது.

## ஐந்து நிற ஆறு



ஆறு என்ன நிறத்தில் ஓடும்? தண்ணீர் என்ன நிறத்தில் இருக்குமோ அதைப் பொறுத்துத்தானே அமையும். ஆனால், இந்த ஆறு அப்படிக் கிடையாது, பல்வேறு நிறங்களில் காட்சியளிக்கும். கொலம்பியா நாட்டில் அமைந்திருக்கிறது இந்த அதிசய ஆறு. இதை "ஐந்து நிற ஆறு" என்றும் "திரவ வானவில்" என்றும் அழைக்கிறார்கள். இது உலகின் அழகான ஆறுகளில் ஒன்றாகவும் கருதப்படுகிறது. ஜூலை மாதம் தொடங்கி நவம்பர் மாதம் வரைக்கும் இந்த ஆற்றை வெவ்வேறு நிறங்களில் பார்க்க முடியும். இந்த இடைப்பட்ட காலத்தில் சிவப்பு, பச்சை, நீலம், மஞ்சள் மற்றும் கறுப்பு எனப் பல்வேறு நிறங்களில் இந்த ஆறு தோற்றமளிக்கும். ஆற்றுப்படுகையில் வளரும் Macarenia clavigera என்ற தாவரம்தான் இந்த ஆற்றின் வேறுபட்ட நிறங்களுக்குக் காரணமாக இருக்கிறது.

## Salar de Uyuni



நமது ஊரில் உப்பளங்களைப் பெரும்பாலும் கடற்கரை ஓரங்களில் பார்க்க முடியும். கடல் நீரை நிலத்தில் பாய்ச்சி உப்பானது தயாரிக் கப்படும். ஆனால், பொலிவியா நாட்டில் அமைந்திருக்கும் Salar de Uyuni இல் மனிதர்கள் யாரும் உப்பை உருவாக்கத் தேவையிருக்காது, இந்த இடம் முழுவதுமே உப்பு கொட்டிக் கிடக்கிறது. சுமார் 10,582 சதுர கிலோமீற்றர் பரப்பளவுக்குப் பரந்து விரிந்து கிடக்கிறது இந்த உப்புப் படுகை. இதுதான் உலகின் மிகப் பெரிய உப்புப் படுகையாகும், இங்கே சென்று பார்த்தால் கண்களுக்குத் தெரிவதெல்லாம் வெறும் உப்பு மட்டும்தான். இந்தப்பகுதியில் மட்டும் 11 பில்லியன் தொன்களுக்கு மேலாக உப்பு இருப்பதாகக் கணக்கிட்டிருக்கிறார்கள். மழை பெய்தால் இதன் மேற்பரப்பில் தண்ணீர் தேங்கி நிற்கும்போது இந்த இடம் பிரதிபலிக்கும் தன்மையைப் பெரும். அந்தச் சமயத்தில் இதுதான் உலகின் மிகப்பெரிய இயற்கையான கண்ணாடியாக இருக்கும்.



## Grand Prismatic Spring

அமெரிக்காவில் யெல்லோஸ்டோன் தேசியப் பூங்காவில் இருக்கிறது இந்த வெப்ப நீரூற்று. சிவப்பு, ஓரேஞ் மஞ்சள், பச்சை மற்றும் நீலம் எனப் பல்வேறு நிறங்களில் காட்சியளிப்பதுதான் இதன் சிறப்பம்சம். இது அமெரிக்காவின் மிகப்'பெரிய வெப்ப நீரூற்றாகவும் உலகில் உள்ள மூன்றாவது பெரிய வெப்ப நீரூற்றாகவும் இருக்கிறது.

சராசரியாக 370 அடி குறுக்களவு கொண்ட இதன் ஆழம் 370 அடியாகும். 70 டிகிரி செல்சியஸ் வெப்ப நிலையில் நிமிடத்திற்கு 2,100 லீற்றர் நீர் இதிலிருந்து வெளி வருகிறது. இந்தப் பகுதியில் வசிக்கும் நுண்ணுயிரிகள்தாம் இந்த நிறத்துக்குக் காரணமாக இருக்கின்றன.

# facebook

# உலகை மாற்றும் திறனாளி

(சென்றவார தொடர்ச்சி)

அப்படி என்னம்மா விஷயம்? அந்த நடிகைக்கு வலது காலே இல்லே!

என்னம்மா நம்புகிற மாதிரி சொல்லுங்க!. எனக்கும் தான் வலது கால் இல்லே! என்னால் உங்க துணையில்லாமே டாய்லெட் கூட போக முடியலே!.. அப்படியிருக்க யாராவது டான்ஸ் ஆட முடியுமா?

அவங்களுக்கு நாட்டியம் என்றால்உசுரு அதில்சாதனை படைக்க வேண்டும் என்று ஆசைப்பட்டாங்க ஆனா சின்ன வயசிலேயே ஒரு அறுவை சிகிச்சையிலே அவரது வலது காலை எடுத்திட்டாங்க அதற்காக அவர் தன் இலட்சியத்தை கைவிட்டுவிடலே!ஒருசெயற்கை காலை பொருத்திக் கொண்டு வலியோடு அந்தக் கடினமான நாட்டியப் பயிற்சியைத் தொடர்ந்தாங்க. இப்ப சாதனையும் படைத்துக் காட்டி விட்டாங்க!


எப்படியம்மா அது முடிந்தது?

ஒரு மனிதனுக்கும் தன்னம்பிக்கையும் விடா முயற்சியும் இருந்து விட்டால் இந்த ஊனம் எல்லாம் ஒரு பொருட்டே இல்லே! நினைத்ததை எல்லாம் சாதிக்க முடியும்! அப்ப என்னால் கூட முடியுமா அம்மா?

நிச்சயம் முடியும்! தன்னம்பிக்கையோடு விடாமுயற்சி செய்தால், நீ என்ன ஆக வேண்டும் என்று நினைக்கிறாயோ அப்படியே எதிர் காலத்தில் ஆகி விடுவாய்! தன்னம்பிக்கை இருப்பவர்களுக்கு இந்த ஊனம் எல்லாம் தூசு மாதிரி. முடியும் என்றால் முடியாதது எதுவுமே இல்லை. ஊதி தள்ளிவிட்டு போய் விடலாம்!

நிஜமாத் தான் நீங்க சொல்லறீங்களா அம்மா! என்னால் உங்க உதவி இல்லாம இன்று வரை எதையும் செய்ய முடிவதில்லையே!.."

ஊனமுற்றவர்கள் எல்லோருமே தங்கள் இயலாமையால் தங்களுக்குள் உருவாக்கிக் கொள்ளும் தாழ்வு மனப்பான்மை என்பது முதல் தடை! அடுத்த தடை சமுதாயம் ஊனமுற்றவர்கள் மேல்



காட்டும் அலட்சியம் என்ற தடை!. இந்த இரண்டையும் நீ கடந்து விட்டால் உன் வாழ்க்கை வெற்றிகரமாக அமைந்து விடும்! நம்மை உருவாக்குவது நம் மனமே! தன்னம்பிக்கை மட்டும் இருந்தால் மற்ற தடைகளை எல்லாம் விடாமுயற்சியால் கடந்து விடலாம்!

இப்பத்தான் ரொம்ப சந்தோஷமாக இருக்கிறது! நான் கூட எதிர் காலத்தில் ஒரு சாதனை மனிதன் ஆகி விடுவேன்!

என்று உற்சாகமாகச் சொல்லிய மோகன் ஆரோக்கியமாக இருந்த தன் இடது காலில் எழுந்து நின்று கொண்டு, ஹோலில் இருந்து அவன் படுக்கையறைக்கு ஒரே காலில் தாவித் தாவிப் போனான்!

அன்று தான் மோகன் தன் ஒரே காலில் தாவித் தாவி குதித்து யார் உதவியும் இல்லாமல் அவனே தன் படுக்கையறைக்குப் போயிருக்கிறான்!

தன் மகன் ஊனமுற்றவர்களுக்கு இருக்கும் முதல் தடையை அன்று கடந்து விட்டான் என்ற மகிழ்ச்சியில் தூங்கப் போனாள் சாந்தி.

சில வருடங்கள் நகர்ந்தன. மோகன் இப்பொழுதெல்லாம் தன் ஊனத்தை ஒரு குறையாக பொருட்படுத்துவதில்லை!

வலது கால் சூம்பிப் போனாலும், ஆண்டவன் அதன் பலத்தையும் சேர்த்து இடது காலுக்குக் கொடுத்திருக்கிறான் போலும்! ஒரே காலில் நின்று குதித்துக் குதித்து சீக்கிரமாக ஒரு இடத்திலிருந்து வேறு ஒரு இடத்திற்குப் போகப் பழகி விட்டான்!

கல்லூரியில் சேர்ந்தவுடன், மூன்று சக்கரம் உள்ள பைக்கை ஓட்டிப் பழகிக் கொண்டான். சாந்தியிடம் சொல்லி அம்மாதிரி பைக் ஒன்றை விலைக்கு வாங்கித் தான் கல்லூரிக்குப் போய் வந்தான்.

பி.காம். டிகிரியில் முதல் வகுப்பில் மோகன் தேர்ச்சி அடைந்தான். அதற்கு அடுத்த ஆண்டு பொதுத் துறை வங்கிகளுக்கு ஆட்கள் எடுக்கும் தேர்வில் கலந்து கொண்டான் மோகன்.

மாற்றுத் திறனாளிகளுக்கு என்று 3% சதவிகிதம் இட ஒதுக்கீடு இருந்ததாலும், நல்ல மதிப்பெண்கள் வாங்கியிருந்தாலும், சுலபமாக மோகனுக்கு கோவை யிலேயே சரவணம் பட்டியில் வேலை கிடைத்து விட்டது.

(அடுத்தவாரம் தொடரும்)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1602

### தவகேதன்

துரோகம் கத்தியைப் போன்றது... மற்றவரை குத்தும்போது சுகமாகத்தான் இருக்கும்... தன்னைக் குத்தும்போதுதான் கொடூரமாக இருக்கும்



### ரஜீவன்

எத்தனை வேசம், எத்தனை அலங்காரம், எத்தனை ஆடம்பரம், எத்தனை வர்ணங்கள் அத்தனையும் மண்ணில் புதைந்த பின் இதுதான் மிஞ்சும்



### கேசவன்

பிறர் செய்யும் தவறுகளைக் கண்டு தன் தவறுகளை திருத்திக்கொள்பவனே உண்மையில் புத்திசாலி



### பிரதாபன்

புதிது ஒன்று வந்துவிட்டால் பழசுக்கு மரியாதை கிடையாது...அது உறவாக இருந்தாலும் சரி, பொருளாக இருந்தாலும் சரி



### சுரேஸ்குமார்

உண்மை சொல்ல ஆயிரம் உறவுகள் இருந்தாலும் உள்ளதைப் புரிந்துகொள்ள ஒரு ஜீவன் இருந்தால் போதும்



### சுகந்தன்

அன்னை இல்லாத வீடு அரண்மனையாக இருந்தாலும் அநாதையாகத்தான் இருக்கும்



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# இளைஞர்களை ஆட்டிப் படைக்கும்

## Tik Tok

பிறரின் முன்னால் பேசவே தயங்கும் ஆண்களும் பெண்களும் கூட டிக் டொக்கில் பாட்டுப்பாடி நடனமாடி, அசரவைக்கும் வசனம் பேசி பட்டையைக் கிளப்பி வருகிறார்கள்.

டிக் டொக்... பாத்ரூம் பாடகர்களாக இருந்த பலரை, பிரபலங்களாக மாற்றிய ஒரு ஆப். பாட்டு, டான்ஸ், வசன உச்சரிப்புகள் என டிக் டொக்கைப் பயன்படுத்தி பலர் தங்களின் தனித் திறமைகளை உலகுக்குத் தெரியப்படுத்தி வருகிறார்கள். சீனாவில் பைட் டான்ஸ் (Byte Dance) என்கிற நிறுவனத்தால் டௌயின் (Douyin) என்கிற பெயரில் 2016 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட இந்த ஆப், டிக் டொக்காகப் பரிணமித்தது 2017 ஆம் ஆண்டில்தான். அதேபோல் டிக் டொக்கும் மியூசிக்கலியும் இணைந்தது 2018 ஒகஸ்ட் மாதத்தில். இன்று உலகம் முழுவதும் 150 நாடுகளில், ஐம்பது கோடி பேர் இந்த ஆப்பைப் பயன்படுத்தி வருகிறார்கள். சிறிய அளவிலான காணொலிகளில் ஆசியாவிலேயே முதன்மையானதாக இந்த ஆப் பைப் பயன்படுத்தி வெளியாகும் காணொலிகள்தாம் இருக்கின்றன.

பிறரின் முன்னால் பேசவே தயங்கும் ஆண்களும் பெண்களும் கூட டிக் டொக்கில் பாட்டுப்பாடி, நடனமாடி, அசரவைக்கும் வசனம் பேசி பட்டையைக் கிளப்பி வருகிறார்கள். குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை வயது வித்தியாசம் இல்லாமல் உலா வரும் ஒரு சுதந்திர வெளியாக இந்த ஆப் இருக்கிறது. பேஸ்புக், வாட்ஸ் அப் போன்ற மற்ற சமூக வலைத்தளங்களை விட டிக் டொக் ஆப்புக்குத்தான் இளைஞர்கள் மத்தியில் நல்ல வரவேற்பு. பேஸ்புக், வாட்ஸ்அப்ஸ்டேட்டஸ்களைக் கூட டிக் டொக் வீடியோக்கள்தாம் ஆக்கிரமித்துக் கொண்டிருக்கின்றன.

பொழுதுபோக்காக மட்டுமல்லாமல், இந்த ஆப்பால் ஒரு சில நன்மைகளும் நடந்தேறியிருக்கின்றன. அதே சமயம் சாதி வெறிப் பேச்சுக்களுக்கும் மற்றவர்களின் மீது அவதூறு பரப்புவதற்கும் ஆபாச செயற்பாடுகளுக்கும் கூட இந்த ஆப் பயன்படுத்தப்படுகிறது.

பொதுவாக இதுபோன்ற ஆப்கள் அனைவரையும் வெகுவாகக் கவர்வதற்குக் காரணம்தான் என்ன?

"தங்களின் திறமைகளை வெளிப்படுத்த யாரிடமும் அனுமதி கேட்கத் தேவையில்லை. தான் விரும்பப்பட்ட, அல்லது தன்னால் முடிந்த செயல்களை விருப்பப்பட்ட இடத்திலிருந்து செய்துகொள்ள இதுபோன்ற இணைய ஆப்கள் உதவி புரிகின்றன. அதைவிட முக்கியமானது, அதற்கு உடனடியாக அங்கீகாரம் கிடைப்பதுதான்..." என்கிறார் உளவியல் நிபுணர் பூங்கொடி.

"உதாரணமாக ஒரு பாட்டுப் பாடி, அல்லது நடனமாடி ஒரு வீடியோ போடும்போது, அதற்கு வரும் தமென்ட்கள், லைக்ஸ்கள் இவர்களுக்கு மகிழ்ச்சி தருகிறது. உள ரீதியாக உற்சாகத்தைத் தருகிறது. தொடர்ந்து அதைச் செய்யவும் தூண்டுகிறது. ஒரு சிலருக்கு அதன் மூலம் பேரும் புகழும் கிடைத்து விடுகிறது. அந்தப் புகழ் மயக்கத்தில் விழுந்து விடுகிறார்கள். நாட்கள் செல்லச் செல்ல அதிக நேரம் உபயோகிக்க ஆரம்பித்து அதற்கு அடிமையாகி விடுகிறார்கள்.

மனநல மருத்துவத்தைப் பொறுத்தவரை போதைப்பொருள்களைப் பயன்படுத்தி அதிலிருந்து மீள முடியாதவர்களைத்தான் "அடிக்ட்" என்று இதுவரை சொல்லி வந்தோம். ஆனால், இந்த ஆண்டு முதல் "இன்டர்நெட் கேமிங் அடிக்ஷன்" என்னும் புதிய மருத்துவ முறையையும் சேர்த்திருக்கிறோம்.

TikTok

> மாணவர்கள் என்றால் அவர்களின் படிப்பு அதல பாதாளத்துக்குச் சென்று விடுகிறது. வேலைக்குச் செல்பவர்கள் அவர்களின் வேலைகளில் கவனம் செலுத்த முடிவதில்லை. தன் குடும்பத்தினரிடம், நண்பர்களிடமிருந்து விலகி ஒரு தனித்த உலகுக்குள் சென்று தனிமையின் கொடுமைக்கு ஆட்பட்டு விடுகிறார்கள். பின்னர், அதிலிருந்து மீள்வதற்காக இன்னும் பல மணி நேரங்கள் இணையத்திலேயே மூழ்கிக் கிடக்கிறார்கள்.

அந்தளவுக்கு இணையத்தளங்களில் மூழ்கி பலர், பல்வேறு விதமான பாதிப்புகளுக்கு உள்ளாகி வருகிறார்கள்.

"எப்படா லைக்ஸ் வரும், கமென்ட் வரும்" என எப்போதும் சமூக வலைத்தளங்களிலேயே மூழ்கிக் கிடக்கிறார்கள். தாம் பிறரால் விரும்பப்படுகிறோம், பாராட்டப்படுகிறோம் என கனவுலகத்தில் மிதந்து கொண்டிருக்கிறார்கள். அதனால் அவர்களின் அன்றாடச் செயற்பாடுகள் மிகவும் பாதிக்கப்படுகிறது. மாணவர்கள் என்றால் அவர்களின் படிப்பு அதல பாதாளத்துக்குச் சென்று விடுகிறது. வேலைக்குச் செல்பவர்கள் அவர்களின் வேலைகளில் கவனம் செலுத்த முடிவதில்லை. தன் குடும்பத்தினரிடம், நண்பர்களிடமிருந்து விலகி ஒரு தனித்த உலகுக்குள் சென்று தனிமையின் கொடுமைக்கு ஆட்பட்டு விடுகிறார்கள். பின்னர், அதிலிருந்து மீள்வதற்காக இன்னும் பல மணி நேரங்கள் இணையத்திலேயே மூழ்கிக் கிடக்கிறார்கள். இது மேலும் அவர்களை இணைய அடிமையாக்கிவிடுகிறது. இதனால் மன சம்பந்தமான பல்வேறு பிரச்சினைகள் உண்டாகின்றன.

இதுபோன்ற ஆப்களால் ஒரு சில நன்மைகளும் இருக்கத்தான் செய்கின்றன. அதனால் இதை நாம் முற்றிலுமாக தவிர்க்கத் தேவையில்லை. பெரிய எதிர்பார்ப்புகள் எதுவுமில்லாமல் ஒரு பொழுதுபோக்குக்காக, அன்றாடப் பணிகள் பாதிக்காதபடி, ஓய்வாக இருக்கும் நேரங்களில் மட்டும் பயன்படுத்தலாம். அதன் மூலம் மனதுக்கு ஒரு புத்துணர்வு கிடைக்கும். தங்களின் திறமைகளை மேம்படுத்திக் கொள்ளவும் முடியும். நாளொன்றுக்கு ஒரு முப்பது நிமிடங்கள் வரை இணையத்தில் நேரத்தைச் செலவழிக்கலாம். அதற்கு அதிகமாகும் போது அடிக்ட் ஆகும் வாய்ப்பிருக்கிறது.

## காலத்தால் அழியாத கானங்கள்

திரைப்படம் : ரத்தக் கண்ணீர்
இயற்றியவர் : கே.எஸ்.கிருஷ்ணமூர்த்தி
இசை : சி.எஸ். ஜெயராமன்
பாடியவர்கள் : சி.எஸ். ஜெயராமன், எம்.ஆர். ராதா



குற்றம் புரிந்தவன் வாழ்க்கையில் நிம்மதி
கொள்வதென்பதேது?
குற்றம் புரிந்தவன் வாழ்க்கையில் நிம்மதி
கொள்வதென்பதேது?

ஆம், ஆம், வாழ்க்கையில் குற்றங்களைப்
புரிந்த எனக்கு நிம்மதி ஏது?

அற்றது உலகில் அமைதியும் மகிழ்வும்
அற்றது உலகில் அமைதியும் மகிழ்வும்
அரும்பிட முடியாது?

முடியாது. உண்மை, உண்மை
என் ஆனந்தம், என் மகிழ்ச்சி,
என் இன்பம் அத்தனையும் அற்றுப் போய்விட்டது.

அமைதி அழிந்தது, புயலும் எழுந்தது
ஆணவம் இன்றோடொழிந்தது
அமைதி அழிந்தது, புயலும் எழுந்தது
ஆணவம் இன்றோடொழிந்தது

ஒழிந்தது, ஒழிந்தது, என் ஆணவன்,
என் கர்வம், என் அகம்பாவம்
அத்தனையும் அற்றுப் போய்விட்டது.

குணத்தை இழப்பவன் இறுதியிலே - நல்ல
சுகம் அடைவதேது - நல்ல
குணத்தை இழப்பவன் இறுதியிலே - நல்ல
சுகம் அடைவதேது?

வாஸ்தவம் குணத்தை, இழந்தேன்
கொண்டவளைத் துறந்தேன்,
கண்டவள் பின் சென்றேன்,
கட்டுடலையும் இழந்தேன்
இன்று கண்ணையும் இழந்தேன்.

வாழ்க்கையில் எனக்கு நிம்மதி ஏது?
குற்றம் புரிந்தவன் வாழ்க்கையில் நிம்மதி
கொள்வதென்பதேது?

# நல்லபடம் கெட்ட படம் என்று கிடையாது

2019 சுந்தர்.சிக்கு சினிமாவில் 25வது ஆண்டு. ரஜினி, கமல், அஜித் தொடங்கி விஷால், சித்தார்த் வரை இயக்கி ஏராளமாக ஹிட்ஸ் கொடுத்த கலகலப்பான கமர்ஷியல் இயக்குநர் சுந்தர்.சி. இப்போது சிம்புவுடன் 'வந்தா ராஜாவாதான் வருவேன் ' என வந்திருக்கிறார்!

**கலகலப்பு பார்ட்-2' போல " உள்ளத்தை அள்ளித்தா" ரீமேக் அல்லது பார்ட் 2 ஐடியா வச்சிருக்கீங்களா?"**

இதே கேள்வியை என்னிடம் பல தயாரிப்பாளர்கள் கேட்டாங்க. சிலபேர் தயாரிக்கிறதுக்குக்கூட முன்வந்தாங்க. ஆனால், நான் மறுத்துட்டேன். ஏன்னா, கார்த்திக் சார், கவுண்டமணி சார் கரக்டர் பண்ண யார் இருக்கா? என் கரியர்ல 'உள்ளத்தை அள்ளித்தா' ஒரு மாஸ்டர் பீஸ். சினிமாவுல பன்முகத் திறமைகள் கொண்டவர் என் குருநாதர் மணிவண்ணன். குணசித்திரம், காமெடி, வில்லன்னு பல தரப்பட்ட வேடங்கள்ல அபாரமா நடிச்ச நடிகர். சினிமாவுல இப்போகூட அவரோட இடம் காலியாவே இருக்கு. மணிவண்ணன் சார் 'அமைதிப்படை' படத்துல நடிச்சு பெரிய அளவுல ரீச் ஆகியிருந்தார். இடையில அவருக்கு ஆக்ஸிடெண்ட் ஆகி கேப் விழுந்துடுச்சு. மறுபடியும் அவரை ஒரு ரவுண்ட் கொண்டுவரணும்னு பிளான் பண்ணி 'உள்ளத்தை அள்ளித்தா' படத்துல அவரை இரண்டு வேஷத்துல நடிக்க வெச்சேன். அந்தப்படமே ஒரு குருநாதருக்கு சிஷ்யனா நான் செய்த நன்றிக்கடன்தான். அது அப்படியே இருக்கட்டுமே.

**ரஜினியுடன் அருணாச்சலம், கமலுடன் அன்பே சிவம் கொடுத்த அனுபவங்கள்?**

சினிமாவுல எல்லாருக்கும் தெரிஞ்ச என் குரு மணிவண்ணன் சார்னா, வெளியே தெரியாத இரண்டு குருமார்கள் ரஜினி சாரும், கமல்சாரும்தான். வாழ்க்கையில பெரிய லெவல்ல ஜெயிச்சவங்களோட வேலை பார்க்கும்போது அவங்களோட பண்புகளை, பழகும் தன்மையைக் கூர்ந்து கவனிச்சாலே அவர்கள் வெற்றி பெற்றதற்கான ரகசியத்தைத் தெரிஞ்சுக்கலாம். இரண்டு பேருமே முதல்படத்துல நடிக்கிற புதுமுக நடிகர்கள் மாதிரி சினிமாவை சின்சியராக மதிக்கக்கூடியவர்கள். ஒரு இயக்குநரா அவங்களோட நான் வேலை பார்க்கலை. ஒரு மாணவனா அவங்ககிட்டேருந்து நிறைய கத்துக்கிட்டேன்.

**நீங்க மிஸ் பண்ணின ஹீரோன்னு யாராவது இருக்காங்களா?**

விஜய். விஜய்க்காக எழுதி, கடைசி நேரத்துல பண்ணமுடியாம தவறிப்போய், பிறகு வேற ஹீரோக்களை வச்சு இயக்கி ஹிட்டான படங்கள் மட்டும் ஏழு இருக்கும். சொல்லப்போனா, விஜய்யை ஹீரோவாக நடிக்க வெச்சு சம்பாதிச்ச தயாரிப்பாளர்களை விட, விஜய்க்காகக் கதை எழுதி, டைரக்‌ஷன் பண்ணியே அதிகமா ப்ராஃபிட் பார்த்த டைரக்டர் நானாதான் இருப்பேன்.

**கவுண்டமணி, வடிவேலு, விவேக், சந்தானம் காமெடி இப்போ யார் கைல இருக்கு?**

இந்த சீஸன் நிச்சயமா யோகிபாபுவோடது தான். இப்போ சூரி, ரோபோசங்கர், முனீஸ்காந்த்னு பெரிய போட்டியே இருக்கு. ஆனா லீடிங்ல இருக்கிறது யோகிபாபுதான். 'கலகலப்பு' படத்துல ஒரே ஒரு காட்சியில நடிக்கிறதுக்காக அவரை ஒப்பந்தம் செய்தேன். ஷூட்டிங்ல யோகிபாபு செய்த டைமிங் சென்ஸ் நடிப்பில் தனித்துவம் தெரிஞ்சது. அதைப்பார்த்து இம்ப்ரஸ் ஆகி யோகிபாபுவை நிறைய சீன்கள் நடிக்கவெச்சேன். 'நீங்க வேணா பாருங்க, இன்னும் ரெண்டு வருஷத்துல தமிழ்சினிமாவே இவரோட கால்ஷீட்டுக்காக அலையும்'னு சொல்லிக்கிட்டிருப்பேன். இப்போ 24 மணி நேரமும் பிஸியா நடிச்சுட்டிருக்கார். ஜெயிக்கிறதுக்குத் திறமை மட்டும் போதாது, நல்ல மனசும் வேணும். நான் சினிமாவுல பார்த்த நல்ல மனுஷன்கள்ல யோகிபாபு மிகமிக ரொம்ப ரொம்ப நல்ல மனசுள்ள மனுஷன்.



**25 வருஷத்துல தமிழ்சினிமா என்ன கத்துக் கொடுத்திருக்கு?**

என் சினிமா வாழ்க்கைல எத்தனையோ கமர்ஷியல் ஹிட் படங்கள் கொடுத்திருக்கேன் ஆனால், வெளிநாட்டுக்குப் போகும்போது என்னோட ஒரே விசிட்டிங் கார்டு 'அன்பே சிவம்' தான். சினிமாவுல இயக்கி, நடிச்சி முடிச்சு ரிட்டயர்டு ஆகி வீட்டுல இருக்கும்போது என்னோட பேரன் பேத்திகள்கிட்ட 'அன்பே சிவம்' படத்தைத்தான் போட்டுக் காட்டிப் பெருமைப்படுவேன். இனிமே சினிமாவுல நம்ம கரியர் டிசைனே மாறிடப்போகுதுன்னு நம்பிக்கையோடு, எதிர்பார்ப்போடு 'அன்பே சிவம்' படத்தை இயக்கினேன். ஆனால், என்னோட கனவுப் படம் கமர்ஷியல் ரீதியா தோல்வி அடைஞ்சப்போ அப்படியே நொறுங்கிப் போயிட்டேன். உண்மையைச்சொல்லணும்னா, எல்லோராலயும் பாராட்டப்பட்ட அந்தப் படத்தை இயக்கியதுக்கு எனக்கு சம்பளமே கொடுக்கலை. அதுமட்டுமல்ல, ஐடி பிரச்சினை என்னைச் சுத்தி வளைச்சு என் கழுத்தை நெரிச்சுச்சு. 'சென்னையில் ஒரு வீடு சொந்தமா வாங்கிட்டுதான் உன்னைக் கல்யாணம் பண்ணிப்பேன்னு குஷ்புவைக் கல்யாணம் பண்றதுக்கு முன்னாடி சத்தியம் பண்ணியிருந்தேன். சொன்ன மாதிரியே வீடு வாங்கிய பிறகுதான் கல்யாணம் நடந்தது. அப்படி, நான் ஆசை ஆசையாய் வாங்கிய அந்த ஃப்ளாட்டை இன்னொருத்தருக்கு விற்று, கடனை அடைக்கும் சூழ்நிலை உண்டாச்சு. அதுக்காக என் வீட்டுப் பத்திரத்துல கையெழுத்து போடும்போது குஷ்பு கண் கலங்கி அழுதாங்க. வழக்கமா எப்பவுமே தைரியமா சிரிச்சுக்கிட்டே இருக்கிற குஷ்பு கண்ணுல அன்னிக்குத்தான் முதன்முதலா கண்ணீரைப் பார்த்தேன்.

ஆனா, எனக்கு ஏற்பட்ட சோதனையைப் பார்த்து உடைஞ்சுபோயிடலை. அப்போ என்னை கமிட்செய்து வைத்திருந்த ஆறு படங்களும் என்னை விட்டுப் போயிடுச்சு. சினிமாவில் நல்ல படம்-கெட்ட படம்னு யாரும் தரம்பிரிச்சுப் பார்க்கிறது இல்லை. ஓடுற படம், ஓடாத படம்னு கமர்ஷியல் கண்ணோட்டத்துலதான் பார்க்கிறாங்கன்ற உண்மையைத் தெரிஞ்சுகிட்டேன். எல்லாக் கதவையும் மூடிவிட்டால் வீடே இருட்டாயிடும்னு கலங்கும்போது ஏதோவொரு ஜன்னல் வழியா வெளிச்சம் வரும்னு நம்புற மனுஷன் நான். அதுதான் வாழ்க்கை. நானும் நம்பினேன். என் வாழ்க்கையிலேயும் வெளிச்சம் பாய்ந்தது. ஒருவகையில 'அன்பே சிவம்' படத்துக்கு நான் நன்றி சொல்லணும். ஏன்னா, சொந்தமா சினிமா கம்பனி ஆரம்பிக்கிறதுக்கு அதுதான் எனக்குத் தூண்டுதலா இருந்துச்சு. முதல்ல சொந்தமா ஆரம்பிச்ச 'கிரி' படம் முதல் இப்போவரைக்கும் வாழ்க்கையும் சினிமாவும் அருமையா போயிட்டிருக்கு. குஷ்புவுக்கு அரசியல் நெருக்கடிகள் வரும்போது ஆலோசனைகள் தருவீங்களா? அரசியல் சம்பந்தமா எல்லாமுடிவையும் அவங்களே சுயமா எடுக்கிறதைத்தான் நான் எப்போதும் விரும்புவேன். அதுல தலையிடமாட்டேன். 2005-ம் வருஷம் குஷ்பு சொல்லாத விஷயத்தைச் சொன்னதா தப்பான விஷயத்தைப் பரப்புனாங்க. அவங்க மேல வழக்குகள் போட்டாங்க. ஆனால் எங்களுக்கு உண்மை என்னன்னு தெரியும். குஷ்பு அதையெல்லாம் தனியாவே தைரியமாவே எதிர்கொண்டாங்க. அரசியல்னு வந்துட்டா அவங்க ரொம்ப ஸ்ட்ராங்கான பர்சனாலிட்டி!

**வந்தா ராஜாவாதான் வருவேன்' யார் வைத்த டைட்டில், படம் எப்படி வந்திருக்கு?**

நான் எம்.ஜி.ஆரோட பரமரசிகன். அவரோட 'சக்கரக்கட்டி ராஜாத்தி' பாடல்ல வர்ற 'அத்தை மகனே அத்தானே'னுதான் முதலில் தலைப்பு வெச்சிருந்தேன். 'செக்கச் சிவந்த வானம்' படத்துல சிம்பு பேசின 'வந்தா ராஜாவாதான் வருவேன்' வசனம் கேச்சிங்கா இருக்குன்னு சிம்புதான் இந்த டைட்டில் சொன்னார். எனக்கும் அது பிடிச்சிருந்தது. இந்தப் படம் எப்படிப்பட்ட படம்னு கேட்டீங்கன்னா, இதுல ஆறு சண்டைக்காட்சிகள் இருக்கு. அதனால் ஆக்‌ஷன் படம்னு சொல்லலாம் ஏகப்பட்ட நட்சத்திரங்கள் நடிச்சிருக்காங்க. அதனால் ஃபேமிலி சென்டிமென்ட் படம்னு சொல்லலாம். நிறைய இடத்தில் காதல் காட்சிகள் இருக்கு, அதனால் ரொமான்ஸ் படம்னும் சொல்லலாம். ஆனால், எல்லாத் தரப்பு ரசிகர்களையும் திருப்திபடுத்துகிற படமா இருக்கும்.

அண்ணே, ரெண்டு மணிநேரம் எப்படி வேணாலும் எடுங்க. க்ளைமாக்ஸ்ல எனக்குப் பத்து நிமிஷம் கொடுங்க போதும்னு சொன்னார் சிம்பு. எடிட்டிங்ல இந்தப் படத்தோட க்ளைமாக்ஸ் பார்த்தப்பதான் சிம்பு ஏன் அப்படிக் கேட்டார்னு புரிஞ்சது. அவருடைய நடிப்பைப் பார்த்தவுடனே கண் கலங்கிடுச்சு. சிம்பு கிரேட் டேலன்ட்!

**சிம்புவின் பங்சுவாலிட்டி பற்றிய நிறைய விமர்சனங்கள் சொல்வாங்களே, உங்க படத்தில் எப்படி?**

தினசரி படப்பிடிப்புக்கு 11 மணிக்கு வருவது கார்த்திக் சார் பாணி. அதிகாலை 7 மணிக்கு ஷூட்டிங் என்றால் 6.30 மணிக்கே மேக்கப்புடன் இருப்பது சத்யராஜ் சார் ஸ்டைல். நீங்கள் கார்த்திக் சார் மாதிரி சிம்புவை ஹேண்டில் பண்ணணும். சத்யராஜ் சார் மாதிரி எதிர்பார்த்தால் என்ன செய்வது?

**ரஜினியின் பேட்ட, அஜித்தின் விஸ்வாசம்' வெளியாகிற பொங்கல் ரேசுல வந்தா ராஜாவாதான் வருவேனும் வருதா?**

ஒருமுறை பொங்கலின்போது விஜயகாந்த்தின் 'தாயகம்', பிரபுவின் 'பரம்பரை', 'பிரபுதேவாவின் 'லவ்பேர்ட்ஸ்', அஜித்தின் 'வான்மதி', விஜய்யின் 'கோயமுத்தூர் மாப்ளே', கார்த்திக்கின் 'கிழக்கு முகம்', 'உள்ளத்தை அள்ளித்தா'ன்னு ஒரேநாளில் எட்டுப் படங்கள் ரிலீஸாச்சு. இப்போ பொங்கலுக்கு மூன்று படங்கள் ரிலீஸ், எங்களோட தரப்புல படம் ரெடி. எப்போ ரிலீஸ் என்பது தயாரிப்பாளர் கையில் இருக்கிறது. வந்தா நிச்சயம் எல்லோருக்கும் பிடிச்ச கமர்ஷியல் ராஜாவாதான் வருவோம்!


www.cinec.edu

CINEC CAMPUS

MARINE ELECTRO TECHNICAL OFFICER

ETO Cadet officer



"Over 70 + placement tie-ups with leading Shipowners in the World"

28

ETO Cadet officer உள்வாங்குவதற்கான தகுதி / நுழைவுக்கான தேவை

- வயது ஆகக் குறைந்தது 23.
- க.பொ.த உயர்-தரம் - விஞ்ஞான அல்லது கணிதத்துறையில் ஒரு பாடம் (கணிதம் அல்லது பௌதீகம்) அல்லது தொழில்நுட்ப துறையில் கணிதவியலில் ஒரு பாடம் சாதாரண சித்தியடைந்திருத்தல் அவசியம்.
- க.பொ.த சா-தரம் - ஆங்கிலத்தில் திறமை சித்தி உட்பட 6 பாடங்களில் சாதாரண சித்தியடைந்திருத்தல் அவசியம்.

இலவச ஆவணப்பட கருத்தரங்கு 2019 ஜனவரி மாதம் 17 ம்திகதி அன்று காலை 9.30 மணிக்கு சினெக் யாழ் நகர கிளையில் இடம் பெற உள்ளது.

மேலதிக விபரங்களுக்கு தொலைபேசியில் தொடர்பு கொள்க

சமீர்: 077 4467 034 ஹரிஹரன்: 077 3565 507

இப்போது உள்வாங்கலுக்கான அடுத்த பயிலுனர் தெரிவு ஆரம்பம்.

+94(011) 241 3500 / 4486 400


# சவால்கள் நிறைந்த 2019

இரண்டாயிரத்து பதினெட்டாம் ஆண்டு நிறைவடைந்து இரண்டாயிரத்து பத்தொன்பதாம் ஆண்டு மலர்ந்துள்ளது. அநேகமாக புதுவருடம் பிறந்தவுடன் விசேடமாக எதையாவது கற்பனை செய்வது உலக மக்களின் வழக்கமாகும்.

"புதுவருடம்தான் கடந்த முறையும் வந்தது. இந்த முறையும் அதுதானே வந்துள்ளது" என அதனை உதாசீனம் செய்பவர்களும் உள்ளனர். எவ்வாறாயினும் கடந்த வருடம் தொடர்பாக பல ஆய்வுகளும் எதிர்காலம் தொடர்பான எதிர்வுகூறல்களும் முக்கியத்துவம் பெறுகின்றன.









அதனை டிசெம்பர் மாதம் அங்கீகரிக்க வேண்டும். வரவு- செலவு திட்ட அறி க்கை என்பது நாட்டின் எதிர்கால பயணத்துக்கான திசையை தீர்மானிக்கும் ஆவணமாகும்.

சாதாரணமாக வரவு- செலவுத் திட்டத்தை 'தெய்வக் கடிதமாக' போற்றிய சரித்திரமுண்டு. பின்னர் அது மீறப்படும். 'தேர்தல் வாக்குறுதியைப்' போன்று அது மாறி விட்டது. வரவு- செலவுத் திட்டத்தில் கூறப்படும் அநேகமானவை பொய்யான வார்த்தைகள் என்பதை மக்கள் அனுபவத்தில் அறிந்துள்ளார்கள். நாட்டில் ஏற்பட்ட அரசியல் குழப்பம் காரணமாக நிலையான வரவு- செலவுத் திட்டமொன்று

**“ சாதாரணமாக வரவு- செலவுத் திட்டத்தை ‘தெய்வக் கடிதமாக’ போற்றிய சரித் திரமுண்டு. பின்னர் அது மீறப்படும். ‘தேர்தல் வாக்குறுதியைப்’ போன்று அது மாறி விட்டது. வரவு-செலவுத் திட்டத்தில் கூறப் படும் அநேகமானவை பொய்யான வார்த் தைகள் என்பதை மக்கள் அனுப வத்தில் அறிந்துள்ளார்கள். நாட்டில் ஏற்பட்ட அரசியல் குழப்பம் காரணமாக நிலையான வரவு- செலவுத் திட்டமொன்று 2019ஆம் ஆண்டுக் காக முன்வைக்கப்படவில்லை**







2019ஆம் ஆண்டுக்காக முன்வைக்கப்படவில்லை. அதன் காரணமாக 'இடைக்கால கணக்கறிக்கை' ஊடாக வருடத்தின் முதல் சில மாதங்களுக்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

நிர்ணயிக்கப்பட்ட அரச வருமானம் குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சி அமைந்துள்ளமை, அரசாங்கத்துக்கு மேலதிக செலவை செய்ய வேண் டியுள்ளமை காரணமாக வரவு செலவில் துண்டு விழும் தொகை அதிகரிப்பு ஆச்சரியப்படத்தக்க ஒன்றல்ல. அத்துடன் மிக விரைவில் தேர்தலுக்கான சாத்தியமும் உண்டு.

கடந்த வருடத்தின் இறுதிநாட்கள் இல ங்கை சரித்திரத்தில் மிகவும் கவலைக்கு ரிய நாட்களாக அமை ந்திருந்தன என்பதில் சந்தேக மில்லை. ஆனால் அவையெல் லாம் எதிர்காலத் துக்கான பாடங்களா கும்.

பொதுவாக எடுத் துக் கொண்டால் 2018ஆம் ஆண்டில் நாம் பெற்ற வெற்றிகள் குறித்து வேறுபட்ட கரு த்துகளே நிலவுகி ன்றன.

நல்லாட்சி அரசாங் கத்தால் இந்நாட்டுக்குப் பெற்றுக் கொடுக் கப்பட்ட ஜனநாயக வெற்றியைப் பற்றி துரதிர்ஷ்டவசமாக யாரும் எண்ணிப் பார்ப் பதில்லை. நீதிமன்ற சுயாதீனம், ஊடக சுதந்திரம், பொலிஸ் ஆணைக்குழு, தேர்தல் ஆணைக்குழு போன் றவை இந்நாட்டின் எதிர்கால பரம்பரைக்குக் கிடைத்த ஜனநாயக வெற்றிகளாகும். அபிவி ருத்தித் திட்டங்களில் மொறகஹகந்த திட்டம் மக்கள் வசம் ஒப்படைக்கப்பட்டதுடன் அரசால் மேற்கொள்ளப்பட்ட கம் உதாவ, கிராம சக்தி, கம்பெரலிய, என்டர்பிரைஸ் ஸ்ரீலங்கா, சுவ செரிய, சுரக்ஷா போன்ற திட்டங்கள் பலவும் மக்கள் நலனுக்காக செயற்பட்டன.

ஆசிய வலைப்பந்தாட்ட பெண்கள் அணி வெற்றி கொண்டது. மற்றும் பரா ஒலிம்பிக் வெற்றிகள், பார்வையற்றோரின் வெற்றிகள் சிலவற்றையும் தவிர குறிப்பிடத் தக்க வெற்றிகளை நாம் பெறவில்லை. எவ்வாறாயினும் அரசாங்கம் செல்ல வேண்டிய பாதையை மீண்டும் எண்ணிப் பார்க்க வேண்டிய செய்தியை மக்கள் உள்ளூராட்சித் தேர்தல்கள் மூலம் தெரிவித்தார்கள். இலங்கையர்கள் தமது வீட்டுக் கதவை பல சவால்கள் தட்டும் வேளையிலேயே புதுவருடத்தை வரவேற்றனர். இலங்கையர்கள் புதுவருடத்தை வரவேற்றது தங்கள் கதவுகளை பல சவால்கள் தட்டும் வேளையில்தான்.

கடன் சுமை என்பது மறைக்க முடியாத உண்மையாகும். வெளிநாடுக ளுக்கு செலுத்த வேண்டிய கடனில் அதிகளவு வட்டியையும் தவணைப் பணத்தையும் செலுத்த வேண்டிய வருடம் இந்த வருடமாகும். அதன் அளவு 4.2 பில்லியன் அமெரிக்க டொலராகும்.

1948ஆம் ஆண்டு சுதந்திரத்துக்குப் பின்னர் அதிகளவு கடனை செலுத்திய வருடமாக 2018 காணப்பட்டது. அது 2845 மில்லியன் அமெரிக்க டொலராகும். 1789 மில்லியன் அமெரிக்க டொலரும் 2015ஆம் ஆண்டுக்கு முன்னர் பெறப்பட்ட கடன் தவணைகளாகும். 2015ஆம் ஆண்டுக்குப் பின்னர் செலுத்த வேண்டிய கடன் 1056 மில்லியன் அமெரிக்க டொலராகும்.

### தற்போதைய அரசாங்கம் கடன் பெற்று செய்த பணிகள்

இலங்கை மத்திய வங்கி வருடாந்த அறிக்கை (பக்கம் 174, எண்ணிக்கை குறிப்பு 5:10) இன்படி 2017இல் வெளிநாட்டுக் கடனாக (திட்டம்) 1535 மில்லியன் டொலர் இலங்கைக்குக் கிடைத்துள்ளது. அதில் 491 டொலர் மில்லியனை சீன ஏற்றுமதி இறக்குமதி அபிவிருத்தி வங்கி வழங்கியுள்ளது. அதில் 316 மில்லியன் டொலர் தெற்கு அதிவேகப் பாதையின் 1, 2 மற்றும் 4ஆவது பகுதிகளை நீடிப்பதற்கு செலவிடப்பட்டுள்ளது. அதனிடையே வெளி சுற்றுவட்ட அதிவேகப்பாதை திட்டத்தின் 3ஆவது கட்டத்துக்காக 79 மில்லியன் டொலரும், அம்பாந்தோட்டை கேந்திர அபிவிருத்தி திட்டத்துக்காக 59 மில்லியன் டொலரும் குருநாகல் நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புக்காக 18 மில்லியன் டொலரும் செலவிடப்பட்டு ள்ளன.

அன்றைய அரசு அடிப்படை வசதிகளை அபிவிரு த்தி செய்வதற்காக பெற்றுக் கொண்ட கடன் காரணமாகவே இவ்வாறான நிலைமை ஏற்பட்டுள்ளது.

### இடைக்கால கணக்கறிக்கை

ஐம்பது நாட்கள் இந்நாட்டு சமூகத்திற்கு ஏற்ப டுத்தப்பட்ட சவால் கள் கொஞ்சமல்ல. அரச இயந்திரம் சில வாரங்களாக சரி யாக இயங்கவில்லை. உலகில் அநேகமான நாடுகள் புதிய ஆண்டுக் கான திட்டங்களை தயாரித்து விட்டன. (அநேகமான நாடு கள் நீண்ட காலத் திட்டங்களையே தயாரிக்கின்றன)

ஆனால் நாம் வரவு-செலவுத் திட்டமில்லாமலேயே புதுவருடத்துக்கு முகம் கொடுத்திருக்கின்றோம். அதற்குப் பதிலாக இடைக்காலக் கணக்கறிக்கையே கொண்டு வரப்பட்டது.

சாதாரணமாக அடுத்த வருடத்திற் கான வரவு-செலவுத் திட்டம் முதல் வருட நவம்பர் மாதத்திலேயே சமர்ப்பிக்கப்படும்.

அரசியலமைப்புக்கும் நிறைவேற்று அதிகாரத்துக்கும் இடையே உள்ள தொடர்பு மிகவும் முக்கியமானது. இந்நாட்டின் அரசியலமைப்பை மாற்ற புதிய வருடத்தை ஒதுக்க முடியுமென்றால் அது மிகவும் விரும்பத்தக்க விடயமாகும்.

இச்சந்தர்ப்பத்தில் அரசாங்கமாக முன்னோக்கிப் பயணிக்க முன்னரை விட நல்லிணக்கத்தை கடைப்பிடிக்க வேண்டும். அதனை கடைப்பிடிக்காவிட்டால் அதன் பிரதிபலன் கிடைக்கப் போவதில்லை.

கண்ணுக்குத் தெரியும், தெரியாத குழுக்களும் அணிகளும் இனவாத மற்றும் சந்தர்ப்பவாத தீப்பெட்டியை கையில் வைத்துள்ளன. அதுவும் அரசாங்கத்துக்கு சவாலாகும்.

இறுதியாக இந்த வருடத்தை நல்ல வருடமாக மாற்றுவதானால் புரிந்துணர்வுடனும் பொறுமையுடனும் முன்னோக்கிச் செல்வதே சாலச் சிறந்தது. அவ்வாறு இல்லையென்றால் 2018 ஐ விட 2019 மாற்றம் பெறாது.

மொஹம்மட் சில்மி

# டோனி ஒரு கிரிக்கெட் சகாப்தம்



மின்னல்வேக ஸ்டெம்பிங், ஹெலிகொப்டர் ஷாட்கள், அதிவேகத்தில் பறக்கும் சிக்ஸர்கள், அமைதியான அணுகுமுறை, 35+ வயதிலும் இளம் வீரர்களை மிஞ்சும் அதிவேக ஓட்டம், தெளிவான திட்டமிடல், வியக்கவைக்கும் கப்டன்சி, துல்லியமாக டி.ஆர்.எஸ். கேட்கும் ஸ்கில் என்று அடுக்கிக்கொண்டே போகலாம். இவை டோனியின் தனித்தன்மைகளில் சில மட்டுமே.

சச்சின் அவுட்டானால் டிவியை நிறுத்திவிட்டு அடுத்த வேலையை பார்க்க சென்றது ஒரு காலம். அதை மாற்றி 9 விக்கெட்களை இழந்து கடைசி ஓவரில் இருபது ஓட்டங்கள் தேவைப்பட்டாலும் அணியை வெற்றிபெற வைக்கமுடியும் என்ற நம்பிக்கையை வீரர்களிடமும், ரசிகர்களிடமும் விதைத்தவர் எம்.எஸ்.டோனி. இவர் கிரிக்கெட்டின் சகாப்தம். உலக கிரிக்கெட்டிற்கு கிடைத்த அற்புதமான பொக்கிஷம்.

கப்டன் கூல், தல, பெஸ்ட் பினிஷர் என்று ரசிகர்கள் மத்தியில் நீங்காத இடம் பிடித்த முன்னாள் இந்திய





அணியின் கப்டன் டோனி, தனது 14 வருட கிரிக்கெட் பயணத்தை வெற்றிகரமாக முடித்து, 15 ஆம் ஆண்டில் அடியெடுத்து வைக்கிறார். டோனி என்றவுடன் நமது நினைவிற்கு வருவது 2011ஆம் ஆண்டு உலக கோப்பை இறுதி போட்டியில் சிக்ஸர் அடித்து 28 ஆண்டுகளுக்கு பிறகு உலக கோப்பையை பெற்றுத்தந்தார் என்பது தான். இவர் ராஞ்சியில் பிறந்து, டிக்கெட் கலெக்டராக வாழ்க்கையை தொடங்கி, தற்போது இந்தியாவில் உள்ள அனைவராலும் நேசிக்கப்படும் கிரிக்கெட் வீரராக உருவெடுத்துள்ளார்.

டோனி 2004-ஆம் ஆண்டு வங்கதேசத்திற்கு எதிராக தனது முதல் ஒருநாள் போட்டியில் விளையாடினார். அந்த போட்டியில் ஓட்டம் எதுவும் எடுக்காமல் ஒரு பந்தை மட்டுமே சந்தித்து ரன் அவுட் ஆனார். அடுத்த தொடரில் பாகிஸ்தான் அணியுடன் சதம் அடித்து அசத்தினார். இந்த தொடர்தான் இவரை உலகம் முழுவதும் பிரபலப்படுத்தியது. பின்னர் இலங்கைக்கு எதிரான தொடரில், 115.33 சராசரி, 346 ஓட்டங்கள் எடுத்து அணியில் தனது இடத்தை பதிவு செய்து கொண்டார்.

2007 ஆம் ஆண்டு இருபது -20 உலகக் கோப்பை தொடரில் மூத்த வீரர்களுக்கு ஓய்வு அளித்துவிட்டு டோனி தலைமையில் இளம் வீரர்கள் கொண்ட அணி தேர்வு செய்யப்பட்டது. அணியில் சேர்ந்த இரண்டரை வருடங்களில் உலகின் மிகப்பெரிய கிரிக்கெட் அணிக்கு கப்டனாகும் அளவிற்கு தன்னுடைய திறமைகளை வெளிக்காட்டியிருந்தார் டோனி. அவர் கப்டனாக நியமிக்கப்பட்டதில் சச்சினின் பங்கு அதிகம். இறுதிப் போட்டியில் பாகிஸ்தான் அணியுடன் முதல் இருபது-20 உலகக் கோப்பையை டோனி தலைமையில் இந்திய அணி வென்று சாதனை படைத்தது. இதுதான் அவரின் வாழ்க்கையில் முக்கிய திருப்புமுனை எனலாம். பிறகு கப்டனாக அவர் படைக்காத சாதனைகளே இல்லை என்றளவிற்கு சாதனைகள் பல.

2013 ஆம்ஆண்டு இலங்கை, மேற்கிந்தியதீவுகள், இந்தியா அணிகள் கலந்து கொண்ட முத்தரப்பு ஒருநாள் போட்டி தொடர் வெஸ்ட் இண்டீஸில் நடைபெற்றது. இந்த தொடரின் இறுதிப்போட்டியில் இந்தியா, இலங்கை அணிகள் மோதின. இந்திய அணிக்கு 202 ஓட்டங்கள் இலக்காக நிர்ணயிக்கப்பட்டது. 46.2 ஓவரில் 182 ஓட்டங்கள் எடுத்த நிலையில் 9 விக்கெட்கள் இழந்து இந்திய அணி தடுமாறிக்கொண்டு இருந்தது. வெற்றிக்கு 20 ஓட்டங்கள் தேவைப்படும் நிலை. கடைசி ஓவரில் 15 ஓட்டங்கள் வேண்டும். இரண்டு பந்துகள் மீத மிருக்கையில் வின்னிங் ஷொட்டாக சிக்ஸர் அடித்து அணியை வெற்றி பெற வைத்தார். அதிர்ச்சியில் ஆழ்ந்தது இலங்கை அணி. இதுபோல பல உதாரணங்கள் உண்டு.

சச்சின், டிராவிட், கோலி போல கிளாசிக் ஷாட்கள் டோனியிடம் இல்லை. ஆனால், அணியின் வெற்றிக்கு எது தேவையோ, அதை வெளிப்



படுத்துவதில் வல்லவர். கங்குலி அவருடைய காலங்களில் சேவாக், யுவராஜ், ஹர்பஜன், ஜாகிர் என பல வீரர்களை உருவாக்கினார். அதேபோல டோனி பல வீரர்களின் வாழ்க்கையில் மாற்றத்தை ஏற்படுத்தினார். அந்த வரிசையில் ரோஹித், அஷ்வின்,ரெய்னா,ஜடேஜாஎன்றுபலர்.

டோனிதான் என் ஹீரோ - ரிஷப் பண்ட். டோனி என் மீது நம்பிக்கை வைத்தார் அந்த நம்பிக்கையை காப்



பாற்றினேன் ராயுடு. டோனி இல்லாமல் இருந்திருந்தால் என் வாழ்க்கை வேறு மாதிரி இருந்திருக்கலாம் ஹர்திக் பாண்டியா. இப்படி டோனியால் முன்னேறியவர்கள் ஏராளம்.

நான் விளையாடிய கப்டன்களில் சிறந்தவர் டோனி என்று சச்சினே கூறியுள்ளார். மாஸ் விக்கெட் கீப்பிங், கிரேட்கேப்டன், பெஸ்ட் பினிஷர் என்று பல ஸ்கில்களை ஒரு சேர பெற்றதால்தான் கபில்தேவ், இந்தியா உருவாக்கிய சிறந்த கிரிக்கெட்டர் டோனி என்று புகழ்ந்துள்ளார்.

இறுதிப்போட்டி லார்ட்ஸ் மைதானத்தில் நடக்கிறது. பாகிஸ்தான் அணியின் அமீர் கடைசி ஓவரை வீசுகிறார். லெக் ஸ்டம்பை நோக்கி வந்த பந்தை சிக்ஸருக்கு பறக்க விடுகிறார் டோனி. இந்திய அணி கோப்பையை பெறுகிறது என்று 2019 உலகக் கோப்பையில் இந்திய அணியின் வாய்ப்புகள் பற்றிய கேள்வி ஒன்றிற்கு பதில் அளித்தார் கவாஸ்கர். தான் இறக்கும் தருவாயில், நான் காணவிரும்புவது டோனி 2011 உலகக்கோப்பையில் அடித்த கடைசி சிக்ஸர் என்று ஒருமுறை கவாஸ்கர் தெரிவித்துள்ளார்.

டோனியின் ஓய்வு குறித்து பலர் கேள்வி எழுப்பி வருகின்றனர். இந்திய அணியின் கப்டனாக சரியான முடிவுகளை எடுத்த அவர், தன் கிரிக்கெட் வாழ்க்கையில் ஓய்வு எப்போது எடுக்க வேண்டும் என்பதிலும் சரியான முடிவு எடுப்பார். கவாஸ்கர் சொன்னதுபோல 2019 உலகக் கோப்பையில் டோனி இந்திய அணியை வெற்றிப்பாதைக்கு அழைத்துச் செல்வார் என நம்புவோம். டோனி டோனி டோனி என்ற முழக்கங்கள் என்றும் மைதானங்களில் இருந்துகொண்டே இருக்கும்.

யாழ். மருத்துவக் குழுவினர் தொகுத்து வழங்கும்

# சுகமான விடியல்

வலம்புரியின் மருத்துவச்சுடர் 164

# வீதி விபத்து / Road Traffic Accident



விபத்துக்கள் ஆபத்தானவை. அதிலும் வீதி விபத்துக்கள் வேண்டாத / விரும்பத்தகாத விபரீதங்களை மட்டுமே உண்டாக்குகின்றன. பொதுவான போக்குவரத்துப் பாதையில் வாகனத்துடன் ஏற்படும் விபத்தினால் ஒருவர் காய மடைதல்/ உயிர்நீத்தலைக் குறிக்கின்றது. உலக சுகாதார நிறு வனத்தின் தரவுப்படி உலகளாவிய ரீதியில் வருடத்திற்கு 1.25 மில்லியன் தொகையானோர் உயிரிழப்பை சந்திக்கின்றனர்.

20-50 மில்லியன் தொகையினர் காயமடைவதுடன் அங்கவீனர்களாகின்றனர். இந்நிகழ்வில் 90% மானவை நடுத்தர வருமானமுள்ள நாடுகளிலேயே ஏற்படுகின்றது. இவ்விறப்பு விகிதத்தில் 48% மானவை 15 முதல் 44 வருடம் வயதானவர்களிடையே ஏற்படுவது குறிப்பிடத்தக்கது. இவற்றுள் ஆண்களின் எண்ணிக்கை பெண்களைவிட மூன்றுமடங்கு அதிகமானதாக காணப்படுகின்றது. அத்துடன் வீட்டின்/ குடும்பத்தின் உற்பத்தியில் 3% குறைவடைகின்றது. இதனுள் குறிப்பாக 15 முதல் 29 வயதானவர்களின் இறப்பிற்குரிய முக்கியமான முதன்மைக்காரணியாக வீதிவிபத்து காரணமாகின்றது எனவும் அறியப்பட்டுள்ளது.

இலங்கையைப் பொறுத்த வரையில் தொற்றா நோய்களின் பணியகத்தின் தகவல்படி ஒவ்வொரு 10 நிமிடமும் 6 முதல் 7 உயிரிழப்புகள் வீதிவிபத்தால் ஏற்படுகிறதாக கணிக்கப்பட்டுள்ளது. ஒரு நாளைக்கு வைத்திய சாலையில் 150 பேர் வீதி விபத்தின் காரணமாக அனுமதிக்கப்படுகின்றனர். இதனுள் உந்துருளி (Motor cycle), முச்சக்கர வண்டி (Three wheeler) விபத்தினாலேயே அதிகளவானோர் விபத்தை சந்தித்துள்ளதாக தரவுகள் சுட்டிக்காட்டுகின்றன.

## வீதிவிபத்து ஏன் ஏற்படுகின்றது?

- அனுபவம் இல்லாத முறையான பயிற்சி இல்லாத சாரதிகளின் தவறான சாரதியத்தால்
- கட்டுப்பாடற்ற அதிவேகமாக சவாரி செய்வதால்.
- மதுபோதையில் வாகனத்தை ஓட்டுவதனால்.
- வாகனம் செலுத்துகையில் கைதொலைபேசி பாவனை/ வேண்டாத உரையாடலின் இடையூறுகளால்.
- இளைஞர்கள்/யௌவனப் பருவத்தினரின் வாகனம் செலுத்துகையினால்.
- மேதாவித்தனமாக வாகனச் சவாரி செய்வதால்.
- மழைகாலங்களில் பனிப்புகார் காலங்களில் பார்வை தெளிவின்மையால்.
- சிவப்புநிற சைகை / நிறுத்தல் சைகைகளில் வண்டியை செலுத்துவதனால்
- நாய், பூனை, ஆடு, மாடு, யானைகள் போன்ற பிராணிகள் வீதியில் நடமாடுவதால்/வீதியை கடத்தல் போன்ற நிகழ்வினால்.

## வீதி விபத்தினால் ஏற்படும் விளைவுகள் எவை?

- விபத்திற்குட்பட்ட நபர் / நபர்களிற்கு பாதிப்பு ஏற்படுகின்றது. (Person) காயம் ஏற்படும். காயங்களுள் சில நிரந்தரமாக ஏற்படும். முறிவு உண்டாகும். அங்கவீனம் ஏற்படும்.புலன்கள் பாதிக்கப்படும்/ இழக்கப்படும். குறிப்பாக தலைக் காயத்தால் வாழ்க்கைத்தரம் மாற்றம் காணுகின்றது. தழும்பு ஏற்படலாம். ஞாபகமறதி ஏற்படும். நினைவாற்றல் பாதிக்கப்படும். வாழ்க்கைக்கு தேவையான அன்றாட நிகழ்ச்சிகளை (Daily living activity) செய்யமுடியாது போகும். ஆபத்தான விளைவாக உயிரிழப்பு உண்டாகும். மற்றவர்களில் தங்கி வாழும் நிலை உருவாகும். வருமானத்தில், சேமிப்பில் பாதிப்பு ஏற்படும். வேண்டாத செலவீனம் ஏற்படும். தொழில் செய்யமுடியாமை, கல்வியை தொடரமுடியாது கஷ்டப்பட நேரிடும். விடுமுறை எடுக்க நேரிடுவதால் தொழிலில் ஊக்கமுடன் ஈடுபடமுடியாத நிலைக்கு ஆளாகலாம். மேற்கொண்டு உயர் நிலை செல்லத்தடைகள் ஏற்படும்.
- எம்மைப் போன்ற இன்னொருவர்க்கு/பல பேர்க்கு பாதிப்பை எதிர்பாராமுகமாக உண்டாக்கும். (Other person)
- குடும்பம் பாதிப்படைகின்றது. (Family). குடும்பத்தின் அன்றாட தொழிற்பாடுகள் மாற்றம் காண்கின்றது. குடும்ப வாழ்க்கைத் தரம் மாற்றமடையும். பொருளாதார ரீதியாக பிறழ்வு ஏற்படும். உளவியல் ரீதியாக குடும்ப அங்கத்தவர்கள்,நண்பர்கள் ஒவ்வொருவரும் வேண்டாத விளைவுகளுக்கு முகம்கொடுக்க நேரிடும்.
- நிலையான சொத்துக்களிற்கு (Property) சேதம் ஏற்படும். உந்துருளி (Motor Bike), முச்சக்கர வண்டி (Auto), மகிழுந்து (Car) போன்றன சேதமடையலாம். அதனை சரிபார்ப்பதற்கு செலவீனம் ஏற்படும். சில சமயம் மீளப்பெறமுடியாது பாவனைக்கு அற்றதாக மாறலாம். சொத்துக்கள் இழப்பு ஏற்படும்.
- செலவு (Coast) அதிகரிக்கும். எதிர்பாரா்த விதமாக வருமானத்தில் பாதிப்பு ஏற்படும். இதன் காரணமாக குடும்பத்தினுள் பல மாற்றங்கள் ஏற்படும். பாட சாலைக் கல்வி, உயர்கல்வி, தொழில் நிலைமாற்றம் என்பன உருவாகி வருமானத்தின் பெரும்பகுதியை செலவழிக்க நேரிடும். சேமிப்பில் மாற்றம் காணப்படலாம்.
- பொலிஸ், தீயணைப்பு பிரிவு, நீதித்துறை போன்றவற்றில் வேண்டாத காலநேர விரயங்களும் செலவீனங்களும் உண்டாகும்.
- வைத்தியசாலையில் அனுமதிக்கப்படல் (Hospitalization) வேண்டி ஏற்படலாம். வைத்தியசாலை பராமரிப்பு, மூலவளங்களின் எதிர்பாராத பாவனை என்பன அதிகரிக்கப்படும். இயற்கையாக ஏற்படும் நோய்களின் பராமரிப்பு,தடுப்பிற்காக பயன்படுத்தும் மூலவளங்களை திடீரென விபத்தின் விளைவிற்கு பராமரிக்க பயன்படுத்துவதால் வைத்தியசாலை சேவையிலும் மாற்றம் ஏற்படும்.
- நாட்டின் வளங்களாக (Resource) காணப்படும்.இவ் இளம் வயதினரிடையே ஏற்படும். இவ் வேண்டாத விளைவு சமூகத்தின், நாட்டின் நேர்நோக்கிய விளைவுகளில் பாதிப்பை உண்டாக்கும். அபிவிருத்திப் பணிகளிலும் பெரும் தாக்கத்தை உண்டாக்கும்.



## எப்படி தடுக்கலாம் அல்லது குறைக்கலாம்?

- வாகனம் செலுத்துகையில் எப்போதும் வீதியில் கவனம் செலுத்த வேண்டும்.
- தொலைபேசியை வாகனம் செலுத்துகையில் பாவிக்கக் கூடாது.
- போதைப்பொருள், மது பானம் பாவித்தபின் சாரதியம் செய்யக்கூடாது.
- வீதிக்கட்டுமானப் பணிகளின் நிகழும் இடத்தை பயணம் செய்கையில் தவிர்க்க வேண்டும்/ அதற்குரிய விதிகளின்படி பயணம் செய்யவேண்டும் / சமிக்ஞைகளை பின்பற்ற வேண்டும்.
- வேகக்கட்டுப்பாட்டை மிக உன்னிப்பாக பின்பற்றல் நன்று.
- வீதி போக்குவரத்து விதி முறைகளுக்கு கட்டுப்பட்டு நடத்தல் வேண்டும்.
- சாரதியத்தின்போது கோபம், ஆவேசப்படல், மனப்பாதிப்புக்களை முறையாக கையாண்டு கொள்ள வேண்டும்.
- தலைக்கவசம், ஆசனப் பட்டி அணிய வேண்டும்.
- வேலைகளை . பொறுப்புக்களை அதிகளவு சேர்த்துக் கொண்டு சாரதியம் செய்யக் கூடாது. இது புலனை சிதறடிக்கும்.
- வாகனத்தை ஓட ஆரம்பிக்க முன் சற்று அவற்றை சரிபார்த்துக் கொள்ள வேண்டும்.
- உரிய காலத்தில் உரிய முறைப்படி வாகன உதிரிப்பாகங்களை பராமரிப்பதும் அவற்றை பேணுவதும் முக்கியமான ஒன்றாகும்.
- பயணம்செய்யும்தேவைக்கு பத்துநிமிடமாவது அதிகமாக வைத்துக்கொண்டு நேரமுகாமைத்துவம் செய்தல் நன்று.

மற்றவர்களையும் எம்மைப் போல் நேசித்து அன்பு செய்து அவர்களிற்கும் இடையூறு விளைவிக்காது நாமும் பயணம் செய்து மற்றவர்களும் பயணம் செய்ய உதவும் மனப்பான்மையை வளர்ப்போம்.

இதனால் எம்மிடையே ஏற்படும் அதிகளவான விபத்துக்களைக் குறைத்து விபரீதங்களை ஏற்படாது செய்து நாமும் வாழ்ந்து மற்றவர்களையும் வாழவைத்து, நாமனைவரும் முன்னேற்றப் பாதையில் நடைபயின்று எம் தேசத்தை விருத்தி செய்வோம்.

திருமதி. சதானந்தி நந்தகுமாரன்
சிரேஷ்ட போதனாசிரியர்
தாதியக் கல்லூரி

பலருக்கு பயன்படக்கூடிய ஆரோக்கியம் சம்பந்தமான அல்லது உளவியல் சமூகமேம்பாடு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களை (0764685555) என்ற இலக்கத்திற்கு SMS செய்துவிடுங்கள். அதற்கான எமது பதில்கள் இங்கு பிரசுரிக்கப்படும்